# மெய்யறிவின் ஒளிச் சுடர்கள்

*(புஸூஸுல் ஹிகம் சுருக்கம்)*

மூலம்: **ஷெய்குல் அக்பர் முஹ்யித்தீன் இப்னுல் அரபி ரழியல்லாஹு அன்ஹு**

தமிழில்: **R.P.M. கனி B.A.,B.L.**

## அத்தியாயம் 1

## நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஞானம்

உதிப்பு - இல்ஹாம் இரண்டு வகைப்படும். ஒன்று நேரடியானது (இல்காயெ - ரஹ்மானிய்யா), மற்றது மறைமுகமானது (கபத -ரூஹி). நேரடியான (ரஹ்மானிய்யா) உதிப்பு 'ஹாதி' (நேர்வழி செலுத்துவொன்) என்ற தெய்வத்திரு நாமத்திலிருந்து உண்டாவது, இதில் முதில்லு (இழிவு அடையச் செய்வோன்) என்ற நாமத்தின் இடையீடு இல்லை. 'முதில்லு' என்ற நாமத்தின் சார்பாக நின்று உண்டாகும் உதிப்பும் நேரடியானது, மறைமுகமானது என்று இரண்டு வகைப்படும். நேரடியான உதிப்பு சாதகன் மனத்தில் நேரடியாக உண்டாகும். முறைமுகமானது கீழேயுள்ள ஜமாலி (சாத்வீக) முறைப் பெயர்கள் மூலம் சங்கிலித் தொடர் முறையில் வெளிப்படும்.

அடியானாகிய என் மனத்தில் கருணையாளனான அல்லாஹ் இந்த ஒளிக்கற்றையை நேரடியான முறையில் (இல்காயெ ரஹ்மானிய்யாவாக) இறக்கினான். இந்த அடியானின் இதயத்தில் முதலில் வல்லோன் உதிப்பாக்கித் தந்தது ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய ஞானம் பற்றிய இந்தப் பகுதியையாகும்.

தன் திருநாமங்களின் எண்ணப் படிவங்களை (அஃயான்களை) இத்தகைய சிருஷ்டியில் இறைவன் காண நாடியபோது, தன் மகத்துவம் முழுவதையும் அவன் வெளியாக்கி, தன் ஜீவனிலிருந்து மூச்சைக் கொடுத்து, தன் அந்தரங்கம் தனக்கு வெளியாவதாக ஆக்கிக் கொண்டான். அதாவது தன் கல்யாண குணங்களைத் தன்னகத்தே வெளிப்படச் செய்த சிருஷ்டியை அவன் கண்டான். அதன் மூலம் அவனுடைய அந்தரங்கம் அவனுக்கு வெளியாயிற்று. வெளிப்பாட்டுக்கு முன்னரே அவன் தன்னைத்தானே நோட்டமிடுபவனாக இருந்தான்.

ஆனால், இவ்வாறு அவன் தன்னை நோட்டமிடுவது, இன்னொருவரில் தன்னை நோட்டமிடுவது போன்றதன்று. ஏனெனில், முந்தியதற்கு வேறொரு வெளிநபர் தேவையில்லை. பிந்தியதற்கு வெளிநபர் தேவை. முந்தியதால் புறத்தோற்றம் விரும்பும் ஒன்றை அகம் எடுத்துக் கொள்கிறது. அவன் தனது உள்ளமையை தன் திருநாமங்களின் (அஸ்மாக்களின்)

உதவி கொண்டு பார்க்க நாடியபோது அவன், ஆத்மா இல்லாத, - பிரபஞ்ச சிருஷ்டி ஒழுங்குப்படியான உருவம் ஒன்றை உண்டாக்கினான். அவ்வுருவம் கண்ணாடிபோல பிரகாசமற்றதாக இருந்தது, அவன் அஸ்மா அதில் பிரதிபலிக்கவில்லை. ஒரு பொருள் பூரணமானதாக ஆக்கப்பட்டதும் தான் அது இறைவனின் மூச்சைத் தன்னகத்தே ஏற்கத் தகுதியுடையதாக ஆகிறது. இவ்வாறு ஏற்பதைத்தான் மூச்சு ஊதப்பட்டது என்று சொல்வர். 'மூச்சு ஊதப்பட்டது' என்பது அல்லாஹ்வின் (அம்ரு) உத்தரவு என்று அழைக்கப்படும். பூரணமாக்கப்பட்ட உருவத்தின் மீது இது நிரந்தரமான தெய்வீகச் சுடரொளியாக பிரதிபிம்பமாக - பாய்ந்து கொண்டேயிருக்கும். இத்தகைய உத்திரவுகள் யாவும் அவனிடமிருந்தே வெளியாகின்றன. அவனிடமே மீள்கின்றன.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் வந்த உருவத்தின் பிரகாசமாகவும், அதன் ஆத்மாவாகவும் ஆனார்கள். அமரர்கள் அவ்வுருவத்தின் ஆத்மீக, பூத தத்துவங்களாயினர். அமரர்கள் மனிதர்களின் தத்துவங்களிலும், அங்கங்களிலும் மறைந்து கிடக்கும் சக்திகளாவர். இந்த சக்திகள் தமது தனித்தன்மையைக் கைவிடாமல் ஒன்றிலிருந்து மற்றதுக்கு மறைவானவையாய் இருக்கின்றன.

இந்த அளவு பகுத்தறிவு ஊடுருவ இயலாது. ஞான திருஷ்டி (கஷ்பு) தான் அவ்விதம் செய்ய முடியும். ஆத்மாவை அடையத் தகுதி படைத்த உருவங்களின் யதார்த்தத்தை உணர வைப்பது ஞானதிருஷ்டிதான். இந்த யதார்த்தமே மனிதன் இறைவனின் பிரதிநிதி (கலீபா). இதுவே பிரபஞ்ச ஒழுங்கின் யதார்த்தம் யாவையும் பொதிந்ததாயுள்ளது. இறைவனுக்கு அதுதான் பார்க்கும் கண்ணின் கருமணி போன்றது. இது பார்வை (மஸர்) என்றும் சொல்லப்படும்.

ஏனெனில், இறைவன் அதன் மூலமே தன் சிருஷ்டிகளைப் பார்க்கிறான். சகல பொருள்களிடமும் அது தோழமை (உன்ஸ்) கொண்டிருப்பதால் அது மனிதன் (இன்சான்) என்றும் அழைக்கப்படும். வெளிப்பாட்டு அம்சத்திலோ அது வெளிப்படுத்தப்பட்டது (ஹாதித்) ஆகும். அசலில் அது முதலில் இருக்கவில்லை. ஆனால், முடிவில்லாத நிரந்தரத்துவமுடையது. மனிதன் யாவும் அடங்கிய உலகம் ஆவான்.

அவன் சிருஷ்டிக்கப்பட்டதன் மூலம் பிரபஞ்சம் பரிபூரணமானதாயிற்று. அது மோதிரத்திலுள்ள முத்திரை போன்றது. அரசன் அந்த முத்திரையைத் தன் கஜானாவில் பதித்து அது களவாடப்படாமல் பாதுகாக்கிறான். இவ்வாறு அவனுடைய கஜானா பாதுகாக்கப்படுவதில் இந்த முத்திரை மோதிரம் இறைவனுடைய பிலதிநிதியாக இருக்கிறது. உலகில் பரிபூரண மனிதன் ஒருவன் இருக்கும் வரை அது பாதுகாப்பானதாகவே இருக்கும். இறைவனின் திருநாமங்கள் யாவும் மனிதனில் வெளியாக்கப்பட்டுள்ளன. எனவே, இப்பிரபஞ்சத்தில் மனிதன் யாவையும் சூழ்ந்தவனாக இருக்கிறான்.

இதே மனிதனைக் குறித்துத்தான் இறைவன் அமரர்களை எச்சரித்தான். அவர்கள் அவனுடைய பெருமையை அறியாதவர்களாய் இருந்தனர். ஏனெனில், யாரும் தன் சக்திக்கு இயன்றளவு தான் இறைவனை அறிய இயலும். அமரர்கள் தமக்குச் சொல்லித் தரப்பட்ட திருநாமங்களின்

(அஸ்மாக்களின்) அளவுக்கே இறைவனை அறிந்திருந்தனர். அவை தவிர வேறு மேலும் எண்ணற்ற திருநாமங்கள் உண்டு என்பதையும் எனவே அவற்றையும் போற்றித் துதிக்க வேண்டும் என்பதையும் அமரர்கள் அறிந்திருக்கவில்லை. ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களே சகல தெய்வத் திருநாமங்களையும் அறிந்திருந்தார்கள்.

எனவே, அமரர்கள் ஆதத்தின் முன் பணியும்படி கட்டளை இடப்பட்டபோது, 'பூமியில் கலகம் விளைவிக்கும் ஒருவனையா அங்கு அனுப்பப் போகிறாய்?' என்று இறைவனிடம் வினவினர். இது பற்றியே அவர்கள் இறைவனிடம் வாதாடினர். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களோ இறைவனுடைய சகல திருநாமங்களினது புகழையும் பாடிக்காட்டினார்கள். இது நமக்குச் சுட்டிக்காட்டப்படுள்ள காரணம், நாம் இறைவனிடம் பயபக்தியுடன் நடந்து கொள்ள வேண்டும். நமக்கு ஏற்படும் சோதனைகளுக்காக அவனைக் குறைக்கூற கூடாது என்பதுதான்.

பிரபஞ்சம் படைப்பான தன்னைப் பற்றித் தானே அறியாதது, இறைவனுடைய ஞானத்தில் அமைந்தது. அந்த அறிவில் அது வெளிப்படை(பாத்தின்) ஆனது, அது அழிக்கப்பட முடியாததல்ல. சகலபுறு ஜீவிதங்களின் மீதும் எதிரொலி எழுப்புவது. புற ஜீவிதங்கள் யாவும் அதன் படிவமும் (அஃயானும்) மற்றதான தன்மையும் (கைர்) ஆகம். பிரபஞ்ச சிருஷ்டி ஒழுங்கு என்று நான் குறிப்பிடுவது படிவங்களின் யதார்த்தங்களையாகும்.

இப்பிரபஞ்சம் படிவங்கள் சம்பந்தப்பட்டவரை புறமானதாகவும்,அறிவு சம்பந்தப்பட்டவரை அகமானதாகவும் விளங்குகிறது. ஆனால் இவ்விரண்டு அம்சங்களிலும் அதன் இயல்பு வெவ்வேறானதாய் இருக்கிறது. வெளிப்பாட்டில் அது தாற்காலிகமானது.(ஹாதித்) இறைவனின் அறிவில் அது நிரந்தரமானது.

அறிவு அறிபவனுடன் தொடர்புடையது. உயிர் ஜீவனுள்ளவனுடன் தொடர்புடையது. அறிவு அக அம்சத்தில் யதார்த்தமானதாக இருப்பது போலவே, உயிரும் யதார்த்தமானதாக விளங்குகிறது.

இறைவன் ஜீவனுள்ளவன் அறிந்தவன் என்று நாம் சொல்கிறோம். அமரர்களும் ஜீவனுள்ளவர்கள், அறிவுடையவர்கள். மனிதனும் ஜீவனுள்ளவன், அறிவுள்ளவன். ஜீவனுடையவும், அறிவுடையவும் யதார்த்தம் நெடுகிலுமே ஒரே வகையானதுதான்.

ஆனால் இறைவனுடைய அறிவு நிரந்தரமானது. மனிதனுடையது தற்காலிகமானது. மாதிடத்தன்மை எங்குமள்ளது, சடலங்கள் பலவாக இருப்பதால் அதன் சத்து-சாரம்- பலவாகிவிடுவதில்லை. அது ஒன்றாகவே இருக்கிறது. தற்காலிகமானது ஜீவித்திருக்க, அதை உண்டாக்கிய ஒருவனின் உதவி அதற்கு அவசியமாகும்.

இவ்வாறு இறைவன் தன் அகத்தை நமது குணங்களைக் கொண்டு விளக்கினான். நமது குணங்களை நாம் காணும் போது அவன் குணங்களையே நாம் நோட்டமிடுகிறோம். நம்முடையவை ஒன்றைப் பற்றி நிற்பவை, அவனுடையவை தனித்தவை. அவனுக்கு ஆரம்பமும் இல்லை, முடிவும் இல்லை. அவன் ஆதியானவன். அனாதியுமானவன். நாம் அவனிலிருந்து வெளிப்பட்டுள்ளோம். - அவன் ஆதியானவன், நாம் அவனிடமே மீளுகிறோம் -

அவன் ஆதியானவன் இதுபோன்று அவன் வெளிப்படையானவன், அகமானவன். மறைவான உலகையும், கண்கூடான உலகையும் படைத்தவன் அவன்.

அவன் பேரழகை (ஜமால்)யும், மாட்சியையும்(ஜலால்) தனக்குச் சூடிக் கொண்டவன். அதனால் அவன் மனிதனகத்தே நம்பிக்கையையும் பயத்தையும் உண்டாக்கினான். இவ்விரண்டு இயல்புகளும் அவன் கரங்கள் என்று சொல்லப்படுகின்றன. இந்த ஜோடி ஜோடியான குணங்கள் யாவும் சேர்ந்தே சம்பூரண மனிதனை உண்டாக்கின.

அவனே சிருஷ்டிகளின் யதார்த்தங்கள் யாவையும் தன்னகத்தே கொண்டவன். இறைவனோ இருள்,(சடத்துவ உடல்), வெளிச்சம் (ஆத்மாக்கள்) ஆகிய திரைகளால் மறைக்கப்பட்டவனாக இருக்கிறான். இவ்வாறு தன் உள்ளமை மீதே அவன் திரையை இட்டுக் கொள்கிறான்.

அவசியமான ஜீவிதம் இறைவனுக்கு உரியது. உலகுக்கு அதில் எந்த சம்பந்தமும் இல்லை. நோட்டமிடுவதால் உண்டாகும் அறிவால் அவனைக் கண்டு கொள்ள முடியாது.

இறைவன் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தன் இரண்டு கரங்களாலும் படைத்தான், குணங்கள் என்ற உடைகளை உடுத்தினான். எனவேதான் இப்லீஸிடம் அவன் வினவினான், '

قَالَ يَـٰٓإِبْلِيسُ مَا مَنَعَكَ أَنْ تَسْجُدَ لِمَا خَلَقْتُ بِيَدَيَّ

என் இரண்டு கரங்களாலும் படைக்கப்பட்ட அவர் முன்பு சிரம் பணியாதபடி உன்னைத் தடுத்தது எது?' (அத் 38:75) என்று.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் உடை என்பது அவர்களைப் பொதிந்திருந்த குணங்களேயாகும். பிரபஞ்ச அமைப்பில் இப்லீஸும் ஒரு பகுதியானவன்தான், அவனிடம் இந்த குண நலன்கள் கிடையாது. எனவேதான், ஆதம் அலைஹிஸ்ஸலாம் இறைவனுடைய பிரதிநிதியாக இருக்கிறார்கள். அவனுடைய மாதிரியில் படைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு பிரதிநிதி தம்முடைய எஜமானிடமிருந்து பெற வேண்டிய குணங்கள் யாவையும் அவர்கள் அடையப் பெற்றிருக்கிறார்கள்.- இறைவன் மனிதனைத் தன் சொந்த மாதிரியில் படைத்தான். சாத்தியமானதுக்கு இரண்டு அம்சங்கள் உண்டு. ஒன்று அவசியமானது மற்றது அதற்கு எதிரிடையானது. இந்த எதிரிடையான அம்சத்தை ஒரு மனிதன் கைக் கொள்வானாயின், அவன் சூனியமானவன் ஆகிவிடுவான். முந்திய குணத்தை அவன் கைக் கொண்டால் அவன் ஜீவிதம் உடையவனாகிறான்.

மனிதன் இறைவனாவதில்லை. அது யதார்த்தம் இடம் மாறுவதாகும். அத்தகைய இடமாற்றம் என்பது சாத்தியமே இல்லை. அடியான் எஜமானன் ஆக முடியாது. எஜமானனுடையது போன்ற மாதிரியைக் கொள்ளலாம். அதன் மூலம் அவன் பிரதிநிதியாகலாம்.

இந்தப் பிரதிநிதித்துவம் என்பதைப் பரிபூரண மனிதனே எய்த முடியும். அவனுடைய புறம் உலகின் படிவங்களோடு இயைந்ததாகவும், அகம் இறைவனுடைய யதார்த்தத்தோடு

இயைந்ததாகவும் இருக்கும். இதனாலே, 'நான் அவன் கேட்கும் கேள்வியாகவும், அவன் பார்க்கும் பார்வையாகவும் ஆகிவிடுகிறேன்' என்று இறைவன் அருளியுள்ளான்.

இவ்விரண்டுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை நன்றாக மனத்தில் பதிக்க வேண்டும். சிருஷ்டிப் பொருட்கள் யாவிலும் அவற்றின் தேவைக்கு ஏற்ற அளவில் இறைவன் இறைவன் பிரசன்னமாயுள்ளான். ஆனால், அவனுடைய பிரதிநிதியிலோ சம்பூரண மனிதனிலோ தன் சகல கல்யாண குணங்களும் பிரசன்னமாகச் செய்கிறான். மற்ற சிருஷ்டிகளில் இவ்வாறு யாவும் பிரசன்னமாவதில்லை.

இறைவன் தம்மில் பிரசன்னமாக இன்றேல் சிருஷ்டிப் பொருள் எதுவுமே ஒருக்காலும் ஜீவித்திருக்க முடியாது. இவ்வாறு உலகம் இறைவனின் தேவையை நாடியதாக இருக்கிறது, இறைவனுக்கோ யார் தேவையுமில்லை.

அவன் தேவைகளற்றவன் (கனி) ஒவ்வொன்றும் மற்றவைகளோடு தொடர்புடையது. எதுவும் தெய்வ உள்ளமையை விட்டும் பிரிக்கப்பட முடியாததாகும்.

ஆதமின் அக-புற அம்சங்களிலிருந்து அவர்கள் யதார்த்தமாகவும், சிருஷ்டிக்கப்பட்டவர்கள் ஆகவும் இருந்தார்கள் என்பது தெளிவாகிறது. மானிடர்களைத் தன்னிலிருந்து வெளியாக்கிய ஓர் ஆத்மா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடையது.

يَـٰٓأَيُّهَا النَّاسُ اتَّقُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ مِّنْ نَّفْسٍ وَّاحِدَةٍ وَّخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيْرًا
وَّنِسَآءً ۚ وَاتَّقُوا اللّٰهَ الَّذِىْ تَسَآءَلُوْنَ بِهٖ وَالْاَرْحَامَ ؕ

'ஜனங்களே, ஒரே ஆத்மாவிலிருந்து உங்களைப் படைத்த இறைவனுக்கு அஞ்சுங்கள். அந்த ஆத்மாவிலிருந்து அவர் துணைவியையும், அவர்களிலிருந்து பல ஆண் பெண்களையும் அவன் சிருஷ்டித்துள்ளான்' (அத் 4:வச1)

'உங்கள் இறைவனுக்கு அஞ்சுங்கள்' என்றால் உங்களில் வெளிப்படுவது உங்களுக்கே திரையாக ஆகிவிடுகிறது, உங்களில் மறைவாயுள்ளவன் உங்கள் இறைவன்.பொருள்களில் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. தீமையில் உங்களை நீங்களே திரையாக ஆக்கிக் கொள்ளுங்கள். அதன் மூலம் இறைவனுக்குப் பணியும் மக்களாக நீங்கள் ஆகிவிடுவீர்கள்.

உங்கள் ஆத்மாவைப் புதினதப்படுத்திக் கொள்ளுமன் தீமையை நீங்கள் இறைவன் மீது சாட்டினால் நீங்கள் இறைவனோடு உங்களை இணையாக்கிக் கொண்ட பெரும்பாவிகள் (முல்ஹித்கள்) ஆவீர்கள். பரிசுத்தம் அடைந்தபின் நீங்கள் அவ்வாறு செய்வீர்களாயின் நீங்கள் மரியாதைக் குறைவாக நடந்தவர்கள் ஆவீர்கள். நபி பெருமானாரே ஷரீஅத்தை (சன்மார்க்க நெறிமுறையை) ஒழுங்காகக் கடைப்பிடித்து வந்துள்ளார்கள்.

**விளக்கக் குறிப்புகள்:** இறைவன் தன்னை நோட்டமிட்டான். தன் யதார்த்தத்தை உணர்ந்தான். அவனைத் தன்னைக் கண்ட முதல் அகமிய (பாத்தின்) படிவம் முஹம்மதின் யதார்த்தம் (ஹகீகத்தே முகம்மதீ) எனப்பட்டது. முதல் நோட்டத்தால் அறிவு(இல்மு), வெளிச்சம் (நூர்),

உணர்வு, நோட்டம் (உஜூது, ஷுஹூது) ஆகியவை உண்டாயின. இங்கே அவன் கண்டது படிவங்களை - அஃயான்களாயாம். இவையே உலகங்களின் யதார்த்தங்களாக ஆயின.

இரண்டாவதாக அவன் நோட்டமிட்டதில் படிவங்களின் பல்வேறு விபரங்களும் தெளிவாயின. தன்னைப் பற்றிய அறிவு தான் அல்லாதது பற்றியதாகவும் ஆயிற்று. ஜீவிதம் உயிர் வாழ்தலாகவும், ஒளி அகமாகவும், பார்படபது சக்தியாகவும் ஆகின. இவற்றுடன் பேச்சு, கேள்வி, பார்வை ஆகியவையும் உண்டாயின. தன் மறைவான சக்திகளை அவன் உணரத் தொடங்கியதும் பார்வை உருவாயிற்று, தன் மறைவான சக்தியின் தேவைகளை அவன் உணரத் தொடங்கியதும் கேள்வி உருப்பெற்றது.

இவற்றின் தேவைகளை அவன் கவனிக்க தொடங்கியதும் பேச்சு உருவாயிற்று. எனவே, இந்த இரண்டாவது நோட்டத்தால் ஏழு குணங்கள் வெளியாயின. இந்தப் படிவம் மனிதனின் யதார்த்தம் (ஹகீகத்தே இன்ஸானி) எனப்பட்டது. அதன்பின் இந்த ஏழு குணங்களில் ஒவ்வொன்றிலும் நான்கு வீதம் மொத்தம் குணங்களும் அவற்றின் படிவங்களும் வெளியாயின. இவை திருநாமங்கள் (அஸ்மாக்கள்) எனப்பட்டன.

'முஹம்மதின் எதார்த்தம் (ஹகீகெத்தே முஹம்மதீ) என்பது தெய்வ உள்ளமையிலிருந்து தன் உருவை அடைந்தது போலவும், 'மனிதனின் யதார்த்தம்' (ஹகீகெத்தே இன்சானீ) முஹம்மதின் யதார்த்தத்திலிருந்து தன் உருவை அடைந்தது போலும் ஒவ்வொரு திருநாமமும் (இஸ்மும்) தனக்கு உயரேயுள்ள திருநாமத்தின் படிவத்தை ஏற்றுக் கொண்டது.

தெய்வ உள்ளமை (தாத்து) அதன் சுடரொளியை (தஜல்லியை) முதல் படிவத்தில் வீசியது. உடனே அந்தப் படிவம் 'முஹம்மதின் யதார்த்தம்' ஆயிற்று. உள்ளமையிலுள்ள வெளிச்சம் தரும் விளக்கில் இதனால் இடைவெளி - குறைதல் ஏதும் உண்டாகவில்லை என்பதை மறந்து விடக் கூடாது. தன்னைச் சுற்றியுள்ள இடங்களுக்கு வெளிச்சம் தரும் விளக்கு அதனால் தான் எதையும் இழந்து விடாததை இதற்கு உவமை சொல்லலாம்.

இறைவனுடைய திருநாமங்களுள் ஒன்று 'சமத்' என்பது. சமத் என்றால் தன்னில் எந்தத் தேய்வும் இல்லாதது என்று பொருள். முன்பு அவன் எப்படியிருந்தானோ அப்படியே தான் இப்போதும் இருக்கிறான். தன் அறிவில் தோன்றிய வடிவங்கள் (அஃயான்)மீது அவன் தன் சுடரொளியைப் பாய்ச்சினான். அதனால், கீழேயுள்ள படித்தரத்தில் அவை அவனுடைய கல்யாண குணங்கள் (சிபத்துகள்) ஆயின. அவன் பூமியில் அவதரிக்கவோ, பிறவி எடுக்கவோ இடமே இல்லை.

இறைவன் இவ்வுலகில் பிறந்தால் அல்லது அவதாரம் எடுத்தால் உன்னதமான படிவத்தில் அவன் இடத்தில் அவனற்ற நிலையல்லவா உண்டாகும்! இப்னுல் அரபி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்படி, அவன் தன் அறிவிலிருள்ள படிவங்கள் மீது தன் குணங்களாகிய ஒளியை வீசுகிறான். முன்பு இருந்தது போலவே இப்போதும் இருக்கிறான். ஒளிவீசச் செய்யப்பட்ட கல்யாண குணங்கள் அந்தந்தப் படிவங்களுக்கு ஏற்ற அளவு உள்ளவையாக

கட்டுப்பட்டு விட்டன. அவை அகமியமானவை. ஆனால், சுடரொளி வீசப்பட்டதும் அவை பகிரங்கமானவையாக ஆகிவிடுகின்றன.

எனினும், இரண்டும் அறிவில் தரிபட்டவைதாம். (ஒன்றில் அவை அ∴யானெ தா∴பிதா என்றும், மற்றதில் அ∴யானெ ழாஹிரா என்றும் அவை அழைக்கப்படுகின்றன) கல்யாண குணங்கள் பற்றிய இவ்விளக்கம் சடலங்கள் உடல்விட்டு உடல் பாயும் என்ற மறுபிறவித் தத்துவத்தையே குழி வெட்டிப் புதைத்து விட்டது.

முதல்படிவம் தன் அகமியத்தில் தெய்வ உள்ளமையிடம் (தாத்திடம்) இருந்து தன் வெளிச்சத்தை அடைந்து கொள்கிறது. அதற்குக் கீழுள்ள படிவங்கள் இந்த முதல் படிவத்திலிருந்து தங்கள் வெளிச்சத்தை அடைந்து கொள்கின்றன. கடைசியிலுள்ள படிவம் அதுவரையுள்ள தனக்கு முந்திய சகல படிவங்களிடமிருந்தும் வெளிச்சம் பெற்று, புறத்தில் பூரணமானதாக ஆகிறது.

இதனாலேயே நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'நான் அல்லாஹ்வின் ஒளியிலிருந்து உண்டானவன், மற்ற யாவையும் என் ஒளியிலிருநு;து படைக்கப்பட்டவை' என்று அருளியுள்ளார்கள். இறைவனின் உள்ளமை (தாத்து) தன் கல்யாண குணங்கள் அனைத்துடனும் முதல் படிவத்தில் (ஹகீகத்தே முகம்மதியில்) சுடர் வீசிற்று.

இந்த முதல் படிவம் தன் சுடரை நபிபெருமானார் மீது நேரடியாகவும், மற்ற நபிமார்கள் மீது மறைமுகமாகவும் பிரகாசிக்கச் செய்தது. நபிபெருமானார் மீது இப்படிவம் சகல திருநாமங்களுடனும் ஒளி சிந்திற்று. மற்ற நபிமார்கள் மீது அவர்கள் பற்றி நின்ற திருநாமத்திற்கு ஏற்ற அளவிலான ஒளியை வீசிற்று.

கல்யாண குணங்களிலிருந்து நேரடியாக அவற்றை அடையப் பெற்றிருந்தார்கள். மற்ற நபிமார்களோ மனிதனின் யதார்த்தம் (ஹகீகத்தே இன்சானீ) என்ற படிவம் மூலம் அவற்றில் ஒன்று இரண்டை மட்டும், நேரடியாகவன்றி மறைமுகமாக அடையப் பெற்றிருந்தனர்.

ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் உருவம் (ஜமால் -ஜலால் ஆகிய) சகல வகைக் குணங்களாலும் பொதியப்பட்டது. அதில் பல்வேறு பெயர்களும் தத்தமக்கே உரிய குணங்களோடு இடம் பெற்றிருந்தன.

இது இவ்வாறு இறைவனின் இரண்டு கரங்களாலும் செய்யப்பட்டதாகும். இவ்வாறு அண்டங்கள் அனைத்தையும் சிறிய அளவில் தன்னில் கொண்டதாக அவ்வுருவம் விளங்கிற்று. இதுவே ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஞானத்தின் தாத்பரியமாகும்.

முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதுவரை தோன்றிய - இனி தோன்றவிருக்கும் -சம்பூரண மனிதர்கள் அனைவருடைய ஞானம் அத்தனையும் ஒருங்கே சேர்ந்த ஞானத்தை உடையவர்களாக விளங்குகிறார்கள். பூமியில் ஒருதடவை வெளியாகிவிட்ட பரிபூரணம் அதைவிட அதிகப் பரிபூரணமானதாக முடியாது.

இறைநேசச் செல்வர்களான வலிமார்களோ வழி தவறியவர்களை நேர்வழிப்படுத்தி, சம்பூரணமனிதரின் பாதையில் நடத்தாட்ட முனைகின்றனர்.

## அத்தியாயம் 2

## ஷீது நபியின் ஞானம்

ஷீது அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வார்த்தையால் உண்டான மறைமுக உதிப்பான ஞானம் இது. சிருஷ்டிகளுக்கு அருளப் பெறும் நன்கொடைகள் அவற்றுக்கான உபகரணங்களோடோ உபகரணங்கள் இன்றியோ சித்தியாகின்றன. இந்த நன்கொடைகள் இரண்டு வகைப்படும். உள்ளமையின் (தாத்தின்) நன்கொடைகள், திருநாமங்களின் நன்கொடைகள். இவற்றை இதயத் தெளிவு உடையவர்கள்தாம் போற்றிக் கொண்டாடுவர்.

இந்த நன்கொடைகளுள் சில - திட்டமானவையாயினும் திட்டமற்றவையாயினும் - கேட்டதும் கிடைக்கக் கூடியவை, வேறு சில கேளாமலே கிடைப்பவை. திட்டமான நன்கொடை ஒன்றைக் கேட்பவன், அவனுக்கு விருப்பமான பொருளைக் கேட்கிறான். திட்டமற்ற ஒன்றைக் கேட்பவன் தனக்குப் பொதுவாக நன்மையானதை அருளுமாறு இறைஞ்சுகிறான்.

கேட்பவர்களும் இரண்டு வகைப்படுவர். முதல்வகை, கேட்கும் தன் இயல்பால் கேட்பவன்: காரணம் 'மனிதன் அவசர இயல்பு உடையவனாகவே படைக்கப்பட்டிருக்கிறான்' (அத்70:19)

இரண்டாவது வகை, தனக்குத் தேவையானது எது என்ற ஞானம் இறைவனுக்கு உண்டு. எனவே இறைவன் ஞானத்தில் தனக்கு எது என்று தெரிகிறதோ அதைத் தனக்குத் தரும்படி பிரார்த்திப்பவன். இறைவனுடைய ஞானத்தில் உள்ளது என்ன என்பதையும், தான் கேட்பதை உடனே அனுக்கிரஹிக்கும் நிலையில் அவன் உள்ளானா என்பதையும் இவன் அறியமாட்டான். நிலை சாதகமானதா அல்லவா என்பது பிரார்த்திப்பவன் பிரார்த்தித்தப் பின் அது ஏற்றது, ஏற்காததைக் கொண்டே அறியக் கூடியதாக இருக்கிறது.

வேறு சிலர்,

وَقَالَ رَبُّكُمُ ادْعُوْنِىٓ اَسْتَجِبْ لَكُمْ

'என்னிடம் கேளுங்கள், நான் அருளுகிறேன்' (அத் 40:60)

என்ற திருவசனத்தைப் பின் பற்றியவர்களாய்ப் பிரார்த்திக்கின்றனர். அவர்கள் அடியார்கள். அவனுடைய உத்திரவுப்படி பிரார்த்திப்பதோடு அவர்களுடைய கடமை முடிந்து விட்டது. அது அருளப்பட்டதா இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாதவர்கள்.

வேறு சிலர் ஐயூப் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் போன்று இருப்பதுமுண்டு. குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் தமக்கு ஏற்பட்ட துயரங்களிலும் பிணிகளிலும் ஐயூப் நபி சும்மா மௌனமாக இருந்து விட்டார்கள். நிலைமை மாறிய பின் பிரார்த்தித்து, துயரங்களை விட்டு

வெளியேறினார்கள். இரு பிரார்த்தனைக்கான பலன் அதற்கு உரிய நேரத்தில்தான் கிட்டுமெயன்றி அதற்கு முன்போ பின்போ அன்று. குறித்த நேரம் வரும் வரை அந்த அருட்கொடை நிறுத்தி வைக்கப்படுகிறது.

கேளாது கிடைக்கும் அருட்கொடைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளோம். இது வாய் திறவாது வேண்டுதல் விடுப்பதைக் குறிக்கும். ஒரு சம்மானம் அருளப்பெற வேண்டுதல் அவசியம், அது வாய் திறந்து வார்த்தைகளால் உருவாகாவிடினும்,மன நிலையாலூ, தன் இயல்பாலோ கூட அமைந்ததாக இருக்கலாம். தன் இயல்பை மனிதன் அறிய இயலாமல் இருக்கலாம். தன் உடலிலும் உள்ளத்திலும துடிதுடிப்பை உண்டாக்கும் நிலையை அவன் புரிந்து கொள்ள முடியும்.

தன் இயல்பு என்பதை அறிந்தவர்கள் வேண்டுதல் விடுக்காது அமைந்து விடுகின்றனர். இறைவனுடைய அறிவில் எண்ணப்படிவமாக (அஃயான் ஆக) இருப்பது நடந்தே தீரும். எனவே தங்கள் நோக்கங்களையும், கீழான மனத்தையும் விட்டு அவர்கள் தங்களைப் பேணிக் கொள்கின்றனர். இறைவனுடைய விதிப்பு தீர்ப்பு (களா, கத்ரு) இரண்டையும் பற்றிய மர்மங்களை விளங்கியவர்கள் அவர்கள். அவர்களுள் சிலர் இதைப் பொதுப்படையாகவும் மற்றும் சிலர் விரிவாகவும் அறிந்துள்ளனர். விரிவாக அறிபவர்களுடைய ஞானம் தங்கள் எண்ணப்படிவம் சம்பந்தப்பட்டவரை இறைவனுடைய அறிவை ஒத்த அறிவுடையவர்களாக இருக்கின்றனர். இரண்டு அறிவும் ஒரே மூலஸ்தானத்திலிருந்து வந்தவைதாம்.

ஆனால், இறைவனுடைய ஞானம் முந்தியது. அவன் அடியானுடைய ஞானம் அவனுக்கு இறைவனால் அருளப்பட்டது. தங்கள் எண்ணப்படிவங்கள் மீது (அஃயான் தாபிதா மீது) நடக்கும் எண்ணற்ற நிலைகளை ஞான திருஷ்டியால் (கஷ்பினால்) அறிந்தவர்கள் இவர்கள்.

இனி நாம் நன்கொடைகளின் பக்கம் திரும்புவொம். அவை தெய்வ உள்ளமையாலோ, திருநாமங்களாலோ கிட்டுபவையாய் இருக்கின்றன. உள்ளமையின் நன்கொடை என்பது இறைவனுடைய சுடரொளியில் ஒரு சுடர் ஆகும். இந்தச் சுடரைத் தாங்கும் சக்தி இதயப் பக்குவம் பெற்ற குறிப்பிட்ட மகான்களுக்கே சாத்தியமானது, வேறு யாருக்குமன்று. எனவேதான், உள்ஒளி பெற்றவர் தன் உருவத்தை இறைவனுடைய கண்ணாடியில் காண்கிறார். இறைவனைக் காண்பதில்லை.

நீ கண்ணாடியொன்றினுள் உற்றுப் பார்த்தாயாயின் கண்ணாடி மறைந்து விடும். நீ உன் உருவையே காண்பாய், கண்ணாடியோ உன் பார்வைக்கும் படிவத்துக்கும் இடையிலாகிவிடும். இது நடப்பது பற்றிய பிரமையான தோற்றமேயன்றி உண்மையான காட்சி அல்ல. இது உதாரணமான பேச்சேயன்றி, யதார்த்தமன்று. சிருஷ்டிக்கப்பட்டவர் எய்தக் கூடிய மிக உன்னதமான படித்தரம் இதுதான். எதற்கும் ஆசைவைத்துக் குழப்பம் அடைய வேண்டாம். உங்கள் ஆத்மாவை தன்னில் காண விடுவதால் அவன் உங்கள் கண்ணாடியாய் இருக்கிறான். அவன் திருநாமங்கள் வெளிப்பட நீங்கள் அவன் கண்ணாடியாக விளங்கியுள்ளீர்கள்.

உள்ளமையின் (தாத்தின்) கண்ணாடி என்பது யதார்த்தத்தையன்றி வேறு எதுவுமன்று. இந்தப் படித்தரத்தில் சும்மா இருப்பவர்கள் - சாந்தியுடன் இருப்பவர்கள் -'நபிமார்களின் முத்திரை' ஆவார்கள். அல்லது ஒலிமார்களின் முத்திரை ஆவார்கள். மற்ற நபிமார்களும் தெய்வ நேயர்களான ஒலிமார்களும் இந்த முத்திரைகளின் வெளிச்சத்தின் மூலமாகவே பார்ப்பார்கள்.

நபித்துவம் (நம் பெருமானாரோடு) முடிவு கண்டு விட்டது. தெய்வ நேயம் (விலாயத்) முடிவடையவில்லை. ஒரு நபிக்கு புற ஒழுக்க நெறிமுறை (ஷரீஅத்) உண்டு. ஒரு ஒலிக்கு இது கிடையாது. அவர் நபி பெருமானாரின் சன்மார்க்க நெறிமுறையைத்தான் பின்பற்றியாக வேண்டும். சகல நபிமார்களும் தோன்றுவதற்கு முன்பே 'நபிமார்களின் முத்திரை' இருந்தது. அந்த விளக்கிலிருந்துதான் சகல நபிமார்களும் தத்தம் விளக்குகளில் தீபம் ஏற்றிக் கொண்டனர்.

'ஆதம் அலைஹிஸ்ஸலாம் மண்ணுக்கும் தண்ணீருக்கும் இடையில் இருக்கும்போதே நான் நபியாய் இருந்தேன்' என்று நபிபெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதுவே ஒலிமார்களின் முத்திரையின் விசயத்திலும் உண்மையாகும். தம்மை நாஸ்தியாக்கி, இறைவனில் தரிபட்டவர்களாய் இறைவனின் குணப்பண்புகளை அடையப்பெற்றவர்களே ஒலிமார்கள் ஆவர். 'விலாயத்' (ஒலித்தனம்) இறைவனுடைய குணப் பெயர்களுள் ஒன்றாகும். அது 'ஒலி' என்ற திருநாமமாகும்.

நபிபெருமானார் ஒலியாகவும், ரஸூல் ஆகவும், நபியாகவும் - யாவும் தங்களில் சேர்ந்தவர்களாக விளங்கினார்கள். இறைவனுடைய நன்கொடைகள் யாவுமே அவனுடைய திருநாமங்கள் மூலம், அவன் ஆசியுடன் அடையப் பெறுபவைதாம்.

ரஹ்மான் (கருணையாளன்) என்ற நாமம் நல்கும் உணவு நற்சுவையுடையதாகவும், மறுமையில் பழிச் சொல்லுக்கு இடமற்றதாகவும் இருக்கிறது. அந்த நாமம் பிணிக்கு நிவாரணம் நல்கும் கசப்பான மருந்தையும் தந்து உதவுகிறது. கடற்கரையில் உள்ள மணலைவிட அதிகமான எண்ணிக்கையுள்ள திருநாமங்கள் அவனுக்கு உண்டு.

அவன் திருநாமங்கள் யாவுமே அவன் உள்ளமையின் பல்வேறு அம்சங்களேயாம். அகமியத்தில் அவை யாவும் ஒன்றுதான் வெளிப்படும் முறையில் தான் அவை மாறுபட்டுக் காணப்படுகின்றன. இவை கணக்கில் அடங்காதவையாக இருப்பதால் தான் அவற்றால் உண்டாகும் நன்கொடைகளிலும் கிடைத்ததே மீண்டும் மீண்டும் கிடைக்கலாம். நன்கொடைகள் மீண்டும் மீண்டும் கிடைப்பது சாத்தியமாயிற்று.

ஷீது நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அடைந்திருந்த விசேக ஞானம் இதுவாகும். இத்தகைய விசயங்களில் அக்கறை எடுப்போருக்கு அவர்களுடைய ஆத்மா உதவுகிறது- இதற்கு நபிபெருமானார் ஆத்மா மட்டும் விதி விலக்காகும். அதற்கு இவ்வுதவி தேவையில்லை. அது சகல ஆத்மாக்களுமே உணர்ச்சி பெறும் ஊற்றுக் கண்ணாக விளங்குகிறது.

www.sufimanzil.org

ஊற்றுக் கண் ஆன நிலை அகமியமானது. திருநாமங்களின் படித்தரங்களுக்கு மேலேயுள்ளது. நபிபெருமானார் தங்கள் பதவி காரணமாக சகல திருநாமங்களையும் அறிந்திருந்தார்கள். ஆனால் அவர்களின் பூத உடலின் குறக்கீட்டால் அதை அறியாதவர்களாக இருந்தார்கள்.

இறைவனே முரண்பாடான குணப்பெயர்களை - புறமானவன், அகமானவன் என்பது போல - உடையவனாய் இருப்பது இங்கே நினைவு கூறத் தக்கது. அவனே யதார்த்தமானவன், அவனே காண்பவன், அவனே காணாமல் இருப்பவன், அவனே பார்ப்பவன், பாராமல் இருப்பவன்.

ஷீது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இந்தத் திறவுகோலான ஞான நன்கொடையை அடையப் பெற்றவர்களாய் இருந்தார்கள். எனவே, அவர்கள் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் புதல்வராக அருளப்பட்டார்கள். அவர்களுக்கு இறைவன் அவர்களுடைய அகமிய நன்கொடைகளை அருளினான்.

'ஆத்மா தந்தையின் அந்தரங்கம்' என்றல்லவா சொல்லப்படும். மகன் தந்தையின் ஜீவிதத்தில் மறைந்திருந்து ஒரு துளியாக வெளியாகி, தனது தந்தையின் உருவத்தில் மனிதனாகிறான். எனவே அவர்கள் அடைந்த யாவும் அவர்களிடமிருந்து வந்தவையே.

ஒரு மனிதனுக்கு இறைவனிடமிருந்தோ வேறு யாரிடமிருந்தோ எதுவும் வருவதில்லை, அவனுடைய இயல்புக்கும், தகுதிக்கும் ஏற்றவாறு அவனில் அது உண்டாகும். தான் முன்னர் அறிந்திராத விசயங்களில் ஓர் உருவம் தனக்கு உணர்த்துகிறது என்றால் ஞானதிருஷ்டியுடைய ஒருவன் அந்த உருவம் தனது சொந்த எண்ணப்படிவத்திலிருந்து வந்ததுதான் என்று கண்டு கொள்வான். இது கண்ணாடியில் தென்படும் உருவம் போன்றது. கண்ணாடியின் குட்டையான, வட்டமான நீளமான,தடித்த தன்மைக்கு ஏற்றவாறு அவ்வுருவமும் அமையும்;.

இம்மாற்றங்கள் இந்தச் சுடரொளி பாயும் நபரிடம் நிகழ்கின்றன - இவரைத்தான் நாம் ஒரு கண்ணாடிக்கு ஒப்பிட்டோம். புல்வேறு உருவங்கள் உண்டாவது எப்படி என்பதைப் புரிந்து கொள்வதற்கு இதை அறிவது அவசியம். இதை அறிபவன் அதை அறிய தனக்கு சக்தி உண்டு என்பதையும் விளங்கிக் கொள்வான். தன் நாட்டப்படி செயலாற்றுகிறான் என்பதை விளங்கியிருந்தும் ஜனங்கள் அவனுடைய 'அறிஞன்' (ஹகீம்) என்ற திருநாமத்திற்கு முரணானவற்றி அவன் மீது சுமத்துகின்றனர்.

இதன் மூலம் ';சாத்தியமான ஜீவிதத்'துக்கே மாறு செய்கின்றனர். சுத்தியத்தை உணர்ந்தவர்களோ இந்த ஜீவிதத்தை ஏற்று, அது உண்டு என்பதை நிரூபிக்கவும் செய்கின்றனர். இது அறிவின் வரம்புகளுக்கு உட்பட்ட தெய்வ ஜீவிதம் ஆகம். சுhத்தியமானது ஆரம்பமற்ற நிரந்தரமுடையது என்பது மெய்ஞ்ஞானியர் கருத்து, பகுத்தறிவுவாதிகளின் கருத்திலோ இது முடிவற்ற நிரந்தரமுடையது என்கின்றனர்.

மனித இனத்தினிடை சீது நபியின் பாணியில் ஆண் சிசு ஒன்று பிறக்கும். அது இரகசியத்தை அறிந்ததாக அந்த யுகத்தாருக்கு முத்திரையாக விளங்கும். இது பெண் குழந்தையொன்றுடன்

இரட்டைக் குழந்தையாகப் பிறக்கும். பெண் குழந்தை முந்திப் பிறக்கும். ஆண் குழந்தையின் தலை பெண் குழந்தையின் கால்மாட்டில் இருக்கும்.

இந்த ஆண் குழந்தை சீனாவில் பிறக்கும். அதன்பின் ஏராளமான திருமணங்கள் நிகழுமாயினும் மலட்டுத்தனமே நிலவும். இம்மனிதர் ஜனங்களை இறைவன் பக்கம் அழைப்பார். அவர்கள் அவர் சொல்வதற்குச் செவிசாய்க்க மாட்டார்கள். அவர்கள் ஆகமானது எது, விலக்கப்பட்டது எது என்றெல்லாம் கவனிக்காது மிருகங்கள் போல் வாழ்வார்கள். அப்போது இறுதிநாள் (கியாமநாள்) வந்தடுக்கும்.

**விளக்கக் குறிப்பு** : நன்கொடைகள் பற்றியும், அவை இறைவனிடமிருந்து வரவேண்டிய அவசியம் பற்றியும் இந்த அத்தியாயம் பேசுகிறது. ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இறைவன் தந்த முதல் நன்கொடை தனது திருநாமங்களை அவர்களுக்கு அறிவித்துக் கொடுத்ததாகும்.

இறைவன் அமரர்களிடம் ஆதத்தை சிருஷ்டிக்கப் போவதாக சொன்னபோது, அவர்கள், 'பூமியில் கலகம் செய்து இரத்தம் சிந்தும் ஒருவரையா படைக்கப் போகிறாய்?' என வினவினர். பின்னர் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் படைத்து, சகலவற்றின் பெயர்களையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தான். புன்னர் அப்பொருள்களின் பெயர்களைக் கூறுமாறு அமரர்களிடம் கேட்டான். ஆவர்கள் தம் அறியாமையை ஒப்புக் கொண்டனர். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை விளித்து, அப்பொருள்களின் பெயர்களை அமரர்களுக்கு அறிவித்துக் கொடுக்கும்படி இறைவன் உத்தரவிட்டான். அதன்படி அவர்கள் அப்பெயர்களை அறிவித்துக் கொடுத்தார்கள்.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் இறைவனுடைய கல்யாண குணங்கள், திருநாமங்கள் யாவும் இறைவனால் தங்களுக்கு அறிவிக்கப்பட்டவர்களாய் இருந்தார்கள். அமரர்களோ தாம்தாம் எந்தெந்த திருநாமத்தின் வெளிப்பாடாக விளங்கினார்களே அந்தந்த திருநாமமன்றி வேறு எதையும் அறிந்திருக்கவில்லை.

திருநாமங்களின் ஞானம் பற்றிய நன்கொடை ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் புதல்வரான ஷீது அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் அருளப்பட்டது. கருணையால் அருளப்பட்ட நன்கொடை இது. (தகப்பன் தன் தந்தையின் இரகசியமாக இருக்கிறான்) இறைவனின் உள்ளமை (தாத்து) பற்றிய ஞானம் ஆதத்துக்கோ, (மனித இனத்துக்கோ), ஜின்களுக்கோ அறிவித்துக் கொடுக்கப்படவில்லை.

கல்யாண குணங்களுக்குப் பின்னர் மறைந்ததாக உள்ளமை (தாத்து) விளங்குகிறது. திருநாமங்களின் (அஸ்மாக்களின்) அளவுக்கு மனிதன் முன்னேறவும், அதற்கு மேலும் சென்று தன் வதனத்தை (யதார்த்தத்தை) உள்ளமையாம் கண்ணாடியில் பார்க்கவும் முடியும். இது இறைவன் தன் திருநாமங்கள் என்ற கண்ணாடியில் தன்னை நோட்டமிட்டுக்கொள்வது போன்றது.

அடியான் இறைவனுடைய கண்ணாடியாவதுபோல, இறைவனும் அடியானுடைய கண்ணாடியாக இருக்கிறான். இது தெய்வீக ரகசியத்தின் அற்புதமாகும். இந்த நிலையிலுள்ள ஒருவர் காண்பதும் சொல்வதும் அவருடைய சொந்தப் படிவம் (அஃயான்) தான். இது 'நாமூஸ்' எனப்படும்.

நுபிபெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜ் இரவில் தாடியற்ற இளைஞனின் உருவில் கண்டது தங்கள் 'நாமூஸை'த் தான். மேலே ஏறும் போது (உரூஜில்) மெய்நிலை கண்டவர்கள் தங்கள் சொந்த அஃயானின் உருவையே காண்கிறார்கள். எனவேதான், 'தன் ஆத்மாவை அறிந்தவன் தன் இறைவனை அறிந்தான்' என்று சொல்லப்பட்டுள்ளது.

அஃயான்களின் யதார்த்தம் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு அழகிய அல்லது விகாரமான அல்லது பயங்கர உருவங்களை மேற்கொள்கிறது. அஃயான்கள் முதலில் ஆத்மீக உலகிலும் பின்னர் உவமை உலகிலும் உருப் பெறுகின்றன. உண்மையான கனவுகளிலும் அஃயான்கள் உருவெடுப்பது உண்டு.

இறைவன் இந்த அஃயான்களின் இயற்கைக்கு ஏற்பவே அவள்ளின் பிரார்த்தனைகளை ஏற்கினறான். இன்றேல் அவனுடைய 'அல்ஹகீம்' (அறிவாளன்) என்ற திருநாமம் வீணானதாகப் போய்விடும். அடியானின் அஃயான் இறைவனின் அறிவிலே இருக்கிறது. ஆவை அறிவில் தனிப்பட்ட உருவாகுமுன், 'அஹதிய்யத்' என்ற நிலையில் அறியப்பட்டவன், அறிவு, அறிபவன் யாவும் ஒன்றாகவே இருந்தது. அவை உள்ளமையின் (தாத்தின்) இயல்புகள்தாம். ஆவை தனிப்படிவங்கள் மேற்கொண்டபின் அவை ஒவ்வொன்றிலும் பல அஃயான்கள் உண்டாயிருந்தன. இவை மனிதன் இங்கே தோன்றி மறையும் வரை அவனில்தான் இருக்கின்றன.

வேண்டுதல் விடுக்காமல் இறைவன் தன் அருட்கொடைகளைக் கொடுத்துவிடுவதில்லை. ஏனெனில், அவன் பெயர் கனி (தேவையற்றவன்) என்பதாகும். 'இறைவன் இரு உலகங்களுடையவும் தேவையற்றவன்'. ஊயிர் உண்டாவதும், மரணமும் ஒன்றையடுத்து ஒன்று சதா நடந்து கொண்டேயிருக்கிறது. இது அஃயான்கள் மீது உயிரை விரிவுபடுத்துவதாகும்.

இறைவனது புனிதமான ஆத்மாவால் (நப்ஸெ ரஹ்மானி) அஃயான்கள் ஜீவிதம் அடைந்ததும் உலகம் புலப்படுவதாயிற்று.

இறைவனுடைய அறிவு நிரந்தரமானது. 'வஹ்தத்' என்னும் நிலையில் அது உள்ளமையே (தாத்தே) தான். எனவே, அது தாத்தில் அதிகப்படியாக வந்து ஒட்டிக் கொண்டதன்று. 'அஃயான்கள்' (ஆரம்பத்திலிருந்து நோக்கும்போது) நிரந்தரமானவையாக இருந்தாலன்றி அறிவு நிரந்தரமானதாக முடியாது. ஆறிவு அதிகப்படியாக வந்து சேர்வதுதான் என்பது சமயவாதிகளின் (முதகல்லிமீன்களின்) அபிப்பிராயம். அஃயான்களுடன் அறிவுக்கு உள்ள தொடர்பும் தற்காலிகமானதுதான் என்பதும் இவர்கள் கருத்தாகும்.

நன்கொடைகள் எவ்வாறு அருளப்படுகின்றன என்பதை இந்த அத்தியாயத்தில் ஷெய்குல் அக்பர் அவர்கள் விவரிக்கிறார்கள். வாய்விட்டு வேண்டுதலாலும், தன் மனநிலையின் வேண்டுதலாலுமத் தன்னில் அறை;த இயல்பின் வேண்டுதலாலும் இந்த மூன்று வகையான வேண்டுதல்களால் தெய்வ நன்கொடைகள் அருளப்படுகின்றன என்று அவர்கள் விவரிக்கிறார்கள்.

நபிமார்கள் குறித்த அஸ்மாவின் வெளிப்பாடாக இருக்கிறார்கள். நபிமார்களின் முத்திரையோ குறித்த அந்த அஸ்மாவின் மூலஸ்தானத்தின் வெளிப்பாடாக விளங்குகிறது. (இது வஹ்தத் அல்லது ஹகீகத்தே முஹம்மதி என்ற நிலையில் உண்டாவது) எனவே, சகல நாமங்களின் வெளிப்பாட்டாலும் ஆனவர்களே உலகத்தாருக்காக மன்றாட முடியும்.

ஏனெனில் 'ரஹ்மான்' (கருணையாளன்) என்ற நாமத்தின் வெளிப்பாட்டால் மட்டும் உண்டான நபிகள், 'முந்தகிம்' (பழிவாங்குவொன்) என்ற பெயருடன் மன்றாட இயலாது. ஒரு நபி தூதராக இருப்பதுடன் தெய்வநேயர் (ஒலி) ஆகவும் இருக்கிறார். இவர் தெய்வநேயர் என்னும்போது தன்னில் நாஸ்தியானவராகவும் இறைவனில் நிலைப்பட்டவராகவும் விளங்குகிறார்.

ஒரு நபி முதலில் ஒலியாகவும், பின்னர் ஜனங்களின் ஒழுக்கத்துக்கான சட்டதிட்டங்களை கொண்டுவரும் தூதர் ஆகவும் இருக்கிறார். இவ்வாறு முகம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களில் நபித்துவத்துடன் தங்களகத்தே 'விலாயத்'தையும் அடையப் பெற்றிருந்தார்கள். அத்துடன் அவர்கள் சகல அஸ்மாக்களினதும் வெளிப்பாடாகவும் விளங்கினார்கள். எனவே, அவர்களைப் பின்பற்றியவர்கள் 'பின்பற்றியோரில் சிறந்தவர்கள்' என அழைக்கப்பட்டனர்.

كُنْتُمْ خَيْرَ اُمَّةٍ اُخْرِجَتْ لِلنَّاسِ

'மனித இனத்தில் உண்டான மெய்யுறுதி உடையவர்கள் அனைவரிலும் நீங்கள் சிறந்தவர்கள் ஆவீர்கள்' (அத்தியாயம் 3:110)

நபிமார்கள் முத்திரையான (இனி வரவிருக்கும்) இமாம் மஹ்தி தமக்கென ஒரு மார்க்கச் சட்டத்தை அடையப் பெற்றிருக்க மாட்டார்கள். நபிமார்களின் முத்திரையின் - நபிபெருமானாரின் சன்மார்க்க நெறிமுறையை (ஷரீஅத்தையே) அவர்கள் எடுத்து அமுல் நடத்தச் செய்வார்கள்.

சீது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 'வஹாப்' (நன்கொடையருளுவோன்) என்ற திருநாமத்தின் வெளிப்பாடு ஆனவர்கள். இவ்விசயத்தில் அவர்கள் நபிபெருமானாருடையதையன்றி மற்ற ஆத்மாக்களுக்கு உதவியானவர்களாக இருக்கிறார்கள். நபிபெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஆத்மா 'ரூஹுல் அஃலம்' எனும் மாபெரும் ஜீவன் - சகல ஜீவன்களுக்கும் ஊற்றுக் கண் ஆனது. அது தன் ஊட்டத்தை இறைவனிடமிருந்து (அஹதிய்யத்திலிருந்து) நேரடியாகவே பெற்றுக் கொள்கிறது. தாத்து, அஸ்மாக்கள்

சம்பந்தப்பட்ட சுடர் வெளிப்பாடுகளுக்கு (தஜல்லியாத்துகளுக்கு) சீது நபி ஊற்றுக் கண் ஆவார்கள்.

தன் ஆத்மாவை அறிந்தவன் இறைவனை அறிந்தவனாவான். வரம்புக்குள் பார்த்தால் தெய்வ ஞானம் அடியானின் ஞானத்துக்கு ஈடாகிறது. அவன் தன் அஃயானை அறிந்தால், அவன் தன் இறைவனை அறிகிறான். இந்த ஞானம் இறைவனுடைய சுடரில் ஒன்றை அவன் பார்க்க இடம் தருகிறது. இதுவே அவன் பெறும் திவ்விய தரிசனை. இது அவனுக்கு இவ்வுலகிலேயே சித்தியாகிறது. மறுமையில் அதிகத் தெளிவாய் கிடைக்கிறது.

وَمَنْ كَانَ فِىْ هٰذِهٖٓ اَعْمٰى فَهُوَ فِى الْاٰخِرَةِ اَعْمٰى وَاَضَلُّ سَبِيْلًا

'இம்மையில் குருடானவர்கள் மறுமையிலும் குருடர்களே! தங்கள் பாதையை விட்டும் வெகுதூரம் நழுவியவர்களும் ஆவார்' (அத் 17:72)

மனித வாழ்வின் முக்கியமான குறிக்கோள் அவன் தெய்வஞானம் (மெய்ஞ்ஞானம்) அடைவதேயாகும். தொழுகை முதலிய மெய்வணக்கங்கள் இம்மையிலும், மறுமையிலும் புனிதம் தருபவையாகும். 'நாம் ஜின்னையும், மனிதனையும் சிருஷ்டித்தது (என்னை) வணங்குவதற்காகவே அன்றி வேறில்லை' என்பது இறைவன் திருவசனம். நல்வணக்கம் வணக்கவாளியை தீமையை அனுகாதபடி தடுத்து விடுகிறது.

இவ்வாறு அவன் மறுமைக்கான புனித உருவை எடுக்க முடிகிறது. ஆயினும், தெய்வதரிசனம் (தீதார்) பெற மெய்ஞ்ஞானமும், சீது (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு அருளப்பட்டது போன்று அஸ்மா விளக்கமும் உண்டாக வேண்டும். அது இறைவன் புறத்திலிருந்து அவனுடைய கருணையால் கிட்ட வேண்டும். இம்மையில் வணக்கம் என்பதே மெய்ஞ்ஞானம் பெறுவதுதான். அது தெய்வ தரிசனையைப் பெற்றுத் தரவல்லது என்பது மெய்ஞ்ஞானியர் கருத்தாகும்.

உலகம் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய இரட்டைக் குழந்தைகளோடு தொடங்கியதுபோன்று, சீனத்தில் (அரேபியாவுக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு நாட்டில்) பிறக்கவிருக்கும் இரட்டைக் குழந்தைகளோடு உலகம் முடிவுற்று விடும். பிள்ளைப்பேறு இல்லாமல் மனித வர்க்கம் பூண்டற்றுப் போய் விடும்.

## அத்தியாயம் 3

## நூஹு நபியின் ஞானம்.

வெளிப்பாடுகள் வெளியாவதை விட்டும் ஒதுங்கிய நிலை (தன்ஸீஹ்) இறைவனை ஜீவிதத்தின் ஓர் அம்சத்தோடு கட்டுப்படுத்துவதாகும். இதைச் செய்பவன் ஒன்று அறிவிலியாவான். அல்லது மரியாதையற்றவனாவான். அவன் சன்மார்க்க நெறிமுறையில் (ஷரீஅத்தின்மீது) விஸ்வாசம் இல்லாதவன். நபிமார்களையும் நம்பாதவன். அழ்-ழாஹிர் (வெளிப்படையானவன்) என்ற

இறைவனின் திருநாமத்தின் வெளிப்பாடான வார்த்தைகளாலேயே சன்மார்க்க நெறிமுறை பேசுகிறது. இறைவன் தன் அகமியம் சம்பந்தப்பட்டவரை இந்தத் திருநாமத்தின் யதார்த்தமாவான்.

இறைவனை அவனுடைய வெளிப்படையான அம்சங்களுடன் வரம்பு கட்டுபவனும் (தஷ்பீஹ்) அவனை கட்டுப்பாட்டுக்குள் அகப்படுத்த முனைந்தவனாவான். மேலே சொன்ன இரண்டு அம்சங்களையும் (தன்ஸீஹையும், தஷ்பீஹையும்) ஒன்றாக சேர்த்து நோட்டமிடுபவனே அவனை ஸ்பஷ்டமற்ற நிலையில் அறிந்தவனாவான். இது அவன் தன் ஆத்மாவை அறிவதைப் போலுமாம். எனவேதான் பெருமானார் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள், 'தன்னை அறிந்தவன் தன் இறைவனை அறிவான்' என்று.

மேலும் இறைவனும் இவ்வாறு அருளியுள்ளான் '(சிருஷ்டிகளுக்கு) இவ்வுலகிலும் அவர்கள் அகத்தேயும் நமது அத்தாட்சிகளைக் காட்டுவொம். அதுவே சத்தியம் என்பதை அவர்கள் புரிந்து கொள்வதற்காகவே அவ்வாறு காட்டுவோம்.' அதாவது நீ தோற்றமாவாய், இறைவன் உன் யதார்த்தமாயுள்ளான். இந்த வரையறை வெளிப்படையான - அந்தரங்கமான (ழாஹிர் - பாத்தின்) இரண்டையும் பொதிந்ததாகும். உடல் உங்கள் புறமாகும். ஆத்மா அகம்.

ஆத்மா உடலை விட்டு அகன்றதும் வெறும் சடலம் மனிதன் என்று அழைக்கப்படுவதில்லை. அதை கல் அல்லது கட்டை என்று வேண்டுமானாலும் கூறலாம். இவ்விதம் உயிர் மனிதனுடைய ஒளியாக இருப்பதுபோல, தெய்வீகத்தன்மை இறைவனின் வரம்பாயுள்ளது. மனிதனுடைய புறத் தோற்றம் அவன் ஆத்மாவுக்கும் மனத்துக்கும் புகழ் சேர்ப்பது போல, சகல சிருஷ்டிகளுடைய தோற்றமும் இறைவனுடைய புகழைப் பாடுகின்றன.

நாம் அவற்றைக் கேட்க முடியாமல் இருந்தாலும் கூட அவைதாம் இறைவனுடைய புகழைப் பரப்பிக் கொண்டிருப்பவை. எனவேதான், 'சகல உலகங்களுக்கும் அதிபதியான அல்லாஹ்வுக்கே சகல புகழும்' என்று இறைவன் அருளியுள்ளான். இதனால், அவன் புகழ்பவனும், புகழப்படுபவனுமாய் இருக்கிறான்.

சிருஷ்டியாளனும் சிருஷ்டியும் இரண்டு என்பவன் இணைவைப்பவன் ஆவான். அவை ஒன்று என்பவனே ஏகத்துவப்படுத்தியவனாவான்.

சம்பூரணமான தன்மையில் நீ அவன் அன்று, யதார்த்தத்தின் ஒன்றான தன்மையில் (ஐனியத்தில்) நின்று நோக்கும்போது நீ அவனிலுள்ளாய். பொருள்களின் யதார்த்தத்தில் அவனை சம்பூரணமான தன்மையிலும் வரம்புக்கு உட்பட்ட தன்மையிலும் நீ அவனைக் காண்கிறாய்.

இறைவன் அருளியுள்ளான்:

لَيْسَ كَمِثْلِهِ شَىْءٌ ۚ وَهُوَ السَّمِيْعُ الْبَصِيْرُ

'அவனுக்கு இணையானது ஏதமில்லை. அவனே யாவையும் கேட்பவனும், பார்ப்பவனுமாய் இருக்கிறான்' (அத் 42:11)

இதில் முற்பகுதி அவனுடைய தன்ஸீஹையும், பிற்பகுதி அவனுடைய தஷ்பீஹையும் தருகின்றன.

நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் ஜனங்களை இவ்விரண்டு அம்சங்களின் பக்கமும் அழைத்திருப்பின் அவர்களை அந்த ஜனங்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்கள். ஆனால், அவர்கள் முதலில் தஷ்பீஹுக்கும், பின்னர் தன்ஸீஹுக்கும் அழைத்தார்கள்.

இறைவன் சகல உள்ளமைகளையும், குணங்களையும் தன் உள்ளமையாலும், கல்யாண குணங்களாலும் பொதிந்து இவற்றால் தங்களையும் பொதியும்படி அவனிடம் பிரார்த்திக்குமாறு நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள். ஜனங்கள் அவர்கள் சொன்னபடி கேட்க மறுத்துவிட்டார்கள். ஏனெனில், அவ்வாறு செய்வதன்மூலம் என்னென்ன கடமைகள் தங்கள்மீது சுமந்துவிடும் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இரண்டையும் ஒன்று சேர்க்கும் (புர்கான்) உபதேசம் செய்தார்கள். புர்கானில் குர்ஆனம் சேரும். அது நபிபெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டதாகும். மேலே சொன்ன திருமறை வசனத்தில் (அவனுக்கு இணையானது ஏதுமில்லை' என்பதில்) உள்ளமையின் இரண்டு அம்சங்கள் சேர்ந்துள்ளன.

நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மேலும்சொன்னார்கள்: 'இறைவன் தன் அருட்கொடைகளால் பொதியட்டும் என்றே நான் இத்தகைய உபதேசத்தின் மூலம் அவர்களை அழைத்தேன்' என்று. யதார்த்தத்தை அவர்கள்அறியட்டும் என்று அழைக்கவில்லை. பிரிவினைகளினூடே ஐக்கியத்தை - ஏகத்துவத்தையும், ஐக்கியத்தினூடே பிரிவுகளையும் காணுமாபறு அவர்கள் அழைக்கவில்லை. நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாம் இவ்வாறு இரண்டையும் வற்புறுத்தி தங்கள் கூட்டத்தாரை அழைத்தார்கள். அவர்கள் கீழ்ப்படிதலுக்காக நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கூட்டத்தாருக்கு மழை இறக்கப்பட்டது.

يُّرْسِلِ السَّمَآءَ عَلَيْكُمْ مِّدْرَارًا ۙ وَّيُمْدِدْكُمْ بِاَمْوَالٍ وَّبَنِيْنَ وَيَجْعَلْ لَّـكُمْ

'வளமான மழை பெய்யும் பொருட்டு அவன் உங்கள் மீது மேகத்தை அனுப்புவான், மால் கொண்டு உங்களுக்கு உதவுவான் (அத் 71: 11,12)

(மால் -ஒருவர் மனம் எதன்பால் சாய்கிறதோ அது - பொருள், சொத்து முதலியன) அதாவது, அவன் பக்கம் உங்களை வழிநடத்திச் செல்வது எதுவோ அதைக் கொண்டு அவன் உங்களுக்கு உதவுவான்.

முஸ்லிம்கள் சம்பந்தப்பட்டவரை 'உங்கள் பொறுப்பில் - அதிகாரத்தில் உள்ள பொருள்களிலிருந்து நீங்கள் (தான தருமங்களில்) செலவிடுங்கள்' (அத் 57:7) என்பது உத்திரவு. நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூட்டத்தார் சம்பந்தப்பட்டவரை, 'என்னையன்றி வேறு யாரையும் உங்கள் பிரதிநிதியாக ஏற்காதீர்கள்' என்பது உத்திரவாகும். பிந்தியவர்கள் விஷயத்தில் சொத்து அவர்களுடையது, இறைவன் அதை அனுப்பியவன். முஸ்லிம்கள் சம்பந்தப்பட்டவரையோ சொத்து இறைவனுடையது. முஸ்லிம்கள் அதன் பிரதிநிதிகள்.

நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நான்காம்வானத்தில் தரிபட்டுள்ளார்கள். அது ஒளியின் இடம் - சூரியனுடைய இடம். ஆத்மீக உலகின் (ஆலம் அர்வாஹின்) நடுவிடமும் அதுவே.

**விளக்கக் குறிப்பு:** நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் போதனைகளில் குணமற்ற தன்மையை (தன்ஸீஹை) வற்புறுத்தினார்கள். அவர்கள் இனத்தவர்களோ குணமற்ற தன்மையை முற்றும் ஒதுக்கிவிட்டுக் குணமான தன்மையில் (தஷ்பீஹில்) மூழ்கிக் கிடந்தனர். அதாவது விக்ரஹ வணக்கத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தனியான குணமற்ற தன்மையில் இறைவன் வரம்பற்ற நிலையின் ஓர் அம்சத்தோடு மட்டும் கட்டுப்படுத்தப்பட்டவனாகிறான், அதாவது எண்ணிப் பார்க்க இயலாத, வரம்பற்ற குணங்களையுடைய உள்ளமையாக (தாத்தாக) இருக்கிறான். குணமான தன்மையாலோ அவனுக்கு சாத்தியமான ஜீவிதம் உண்டு என்று தவறு செய்யப்படுகிறது. இவற்றை தனித்தனியே கணிப்பது பரிபூரணத்துவத்துக்கே முரணானதாகும். எனவேதான், 'அவன் எது போன்ற மாதிரியுமில்லை' என்று திருமறை சொல்கிறது. இறைவனின் அகமிய அம்சம் மறைவாயுள்ளது. அவனுடைய புறஅம்சம் மனிதனுக்குத் தெரிவதாய் உள்ளது.

நூஹுஅலைஹிஸ்ஸலாம் அவர்கள் தன்ஸீஹுடன் நிறுத்திக் கொண்டார்கள். முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தஷ்பீஹில் தன்ஸீஹையும், தன்ஸீஹில் தஷ்பீஹையும் கற்றுக் கொடுத்தார்கள். மேலே குறிப்பிட்ட வசனத்தின் முற்பகுதியில் தன்ஸீஹும், பிற்பகுதியில் தஷ்பீஹும் சேர்ந்துள்ளன.

நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் கூட்டத்தாரைத் தனிப்பட்ட பெயர் (இஸ்ம்)ஐ விட்டும் மொத்தமான பெயரான அல்லாஹ்வின் பக்கம் அழைத்தார்கள். வணங்குபவன் தனிப்பட்ட பெயருடன் (இஸ்முடன்) தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு விடுவானாயின் முழுமையானதை அவன் புறக்கணிப்பவனாவான்.

இதனால் மனிதனிடமுள்ள அறிவு இறைவனின் சொத்தாகும் என்றும், மனிதன் தன் செயல்களுக்காகக் கணக்கு சொல்ல வேண்டிய அவசியமற்ற பிரதிநிதி (வக்கீல்) என்றும் அவன் சொல்வான். நபிபெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனிதன் தன் செயலுக்கு இறைவனுக்குப் பதில் சொல்லித் தீரவேண்டிய அவனுடைய பிரதிநிதி என்பதை அறிவித்துக் கொடுத்தார்கள். அகமிய அப்பியாசங்கள் (நிஷ்டைகள்)தாம் இதயத்தைத் துரவின்றிச் சுத்தமாக வைக்க முடியும். புற உலகைப் பார்த்து, அதில் இறைவன் எவ்வாறெல்லாம் செயல்படுகிறான் என்று சிந்தனை செய்வதும் நிஷ்டையில் சேர்ந்ததுதான்.

كُلَّ يَوْمٍ هُوَ فِىْ شَاْنٍ

'ஒவ்வொரு கணமும் இறைவன் ஒரு (செயலாற்றும்) நிலையில் இருக்கிறான்' (அத் 55:29)

இறைவனுடைய உள்ளமையாலும் கல்யாண குணங்களாலும் அவர்கள் பொதியப்பட்டவர்களாக இருக்க வேண்டும். அதனால் அவர்கள் எதுவுமே தங்களால் ஆனதாகச் சொல்லாமல், தங்கள் இறைவனாலேயே சாத்தியமானதாகச் சொல்ல வேண்டும்.

## அத்தியாயம் 4

## இத்ரீஸ் நபியின் ஞானம்

உயர்த்தப்படுதல் என்பது இரண்டு வகைப்படும். அவை பதவி அந்தஸ்து உயர்வு. படித்தர அந்தஸ்து உயர்வு என்பன. இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அருளப்பட்டது பதவி அந்தஸ்து உயர்வாகும்.

وَّرَفَعْنٰهُ مَكَانًا عَلِيًّا

'மேலும் அவரை (இத்ரீஸை) நாம் உயரிய பதவிக்கு உயர்த்தினோம்'. (அத் 19:57)

என்று இறைவன் திருமறையில் அருளியுள்ளான். பிரபஞ்ச அமைப்பில் உன்னதமான புள்ளி என்பது வானங்கள் எதைச் சுற்றி சுழலுகின்றனவோ அந்தப் புள்ளியாகும். இது சூரியனின் இடமாகும். இதுவே இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பதவி இடமாகும். அதற்கு மேலே ஏழு மண்டலங்கள் உண்டு. அவை செவ்வாய், வியாழன், சனி, நட்சத்திர மண்டலங்கள், இராசிகள், அர்ஷ் (தெய்வ விதானம்), குர்ஸ் (தெய்வ பீடம்) முதலியவையாம். அதற்கு கீழே ஏழு மண்டலங்கள் உண்டு. அவை சுக்கிரன், புதன் சந்திரன், நெருப்பு, காற்று, நீர், பூமி ஆகியவற்றின் மண்டலங்களாகும். இவ்வாறு இம் மண்டலங்கள் யாவுக்கும் சூரியன் நடுவானதாக விளங்குகிறது.

இனி படித்த அந்தஸ்துப் பற்றி பார்ப்போம். இது முஸ்லிம்களுக்காக - நபிபெருமானாரின் இதயத்தை அறிந்து அதன்படி ஒழுகியவர்களுக்காக உள்ளதாகும். இவர்களை நோக்கி இறைவன்,

وَاللّٰهُ مَعَكُمْ وَاَنْـتُمُ الْاَعْلَوْنَ فَلَا تَهِنُوْا وَتَدْعُوْۤا اِلَى السَّلْمِ

'உங்கள் படித்தரம் உயரியது, இறைவன் உங்களோடு இருக்கிறான் ' (அத் 47:35)

என்று அருளியுள்ளான். இறைவன் படித்தரங்களையெல்லாம் விட்டும் அப்பாலானவன். எனினும், அவன் குணங்களில் சேர்ந்ததாகவே இருக்கிறது.

பதவி அந்தஸ்து உயர்வு அமல்களால் அடையப்பெறக் கூடியது. படித்தர அந்தஸ்து உயர்வு ஞானத்தால் அடையப் பெறக்கூடியது.



www.sufimanzil.org

மனிதன் பதவி அந்தஸ்தில் உயர்வு அடைந்ததும் இறைவனின் பங்காளியாக ஆகிறான். ஆனால், இந்தப் பங்காளித் தனம் 'மகா உன்னதமானவனான உமது இறைவனின் புளிதத்தைப் பிரகடனம் செய்து போற்றுங்கள்' என்ற வசனத்தால் பொதியப்பட்டதாகும்.

ஏனெனில், மனிதன் பதவி அந்தஸ்திலும், படித்தர அந்தஸ்திலும் உயரலாமே அன்றி உள்ளமையின் அந்தஸ்தில் அவனை நெருங்கவே முடியாது. இது இவை இரண்டையும் விட உன்னதமானது இறைவன் தன் உள்ளமையால் உன்னதமானவனாக இருக்கிறான். எதனோடும் ஒப்பிட்டுப் பார்ப்பதால் அன்று. அவனுடைய அழகிய திருநாமங்களுள் ஒன்று அலீ(உயர்த்தப்பட்டவன்) என்பதாகும்.

எனவே இப்பிரபஞ்சத்தில் வேறு 'மற்றதான தன்மை' (கைர்) என்பதற்கே இடமில்லாதபோது,அவன் எதைவிட உயர்ந்தவன் என்று ஒப்பிட முடியும்? அவன் பொருள்களின் சத்தாய் இருக்கிறான். அதனால் பொருட்கள் தாமாக உயர்த்தப்பட்டவை ஆயின.

படிவங்கள் (அஃயான்) வெளிப்பாடுகளில் இல்லை - ஒன்றுமில்லாததில் (அதம் என்பதில்) தான் அவை உள்ளன. அவை ஜீவித வாசனையை முகரவில்லை. யாவும் ஒன்றானதன் யதார்த்தம் யாவும் ஒன்றானதில் ஒன்றாகவே இருக்கிறது. பலவான தன்மை கல்யாண குணங்களில்தான் உண்டு. இக்குணங்கள் உறவுகளை விளக்கும் 'அதம்'கள் தாம்.

ஜீவிதத்தில் யதார்த்தம் ஒன்றுதான், அதுவே உள்ளமை (தாத்து) ஆகம். எனவே, அது தானாகவே உன்னத நிலையில் இருக்கிறது. அனதாலயே, ஒவ்வொரு வெளிப்பாட்டையும் பற்றி அது அவன் என்று நாம் சொல்கிறோம்.

அல்லாஹ்வின் நாவுகளில் ஒருவர்களான அபூஸயீதுல் கர்ராஜ் சொன்னார்கள் 'இறைவன் தன்னை முரண்பாடான தன்மைகளில் காட்டிக் கொண்டாலன்றி இறைவனை நாம் கண்டு கொள்ள முடியாது. இந்த முரண்பட்ட குணங்களுக்கு இடையிலும் நீங்கள் அவனுடைய ஏகத்துவத்தைக் கண்டு கொள்ள வேண்டும்' என்று.

அவன் முதலானவன், அவன் கடைசியானவன். அவன் வெளிப்படையானவன், அவன் அந்தரங்கமானவன். ஜீவிதத்தில் அவன் தன்னைத்தானே காண்கிறான். அவனை யாரும் காண முடியாது. எதனிடமிருந்தும் அவன் மறைந்து இருப்பதும் முடியாது. வெளிப்படையானது 'நான்' என்று சொல்லும்போது அந்தரங்கம் அவவ்வாறுசொல்லாது. இரண்டிலும் பேசுபவன் ஒருவனே. இரண்டிலும் கேட்பவனும் ஒருவனே.

எனவேதான் நபிபெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'தங்கள் நப்ஸ்-மனம் பேசியவற்றில் என் கூட்டத்தாருடைய பாவங்களை இறைவன் மன்னித்து விடுகிறான்' என்று அருளியுள்ளார்கள். (அதாவது எது அவர்களுடைய நப்ஸ் பேசுவதாயும், கேட்பதாயும் புரிந்து கொள்வதாயும் இருந்ததோ அந்தப் பாவங்களை இறைவன் மன்னித்து விடுகிறான் என்ற பொருளில்) திசைகளும் திக்குகளும் வேறாயினும், யாவின் யதார்த்தமும் ஒன்றே.

ஒன்று என்ற எண் பல தடவை சுழன்றால் அது பலவாக ஆகிவிடுகிறது. உண்மையில் 'ஒன்று' என்ற எண்தான் மற்ற யாவுக்கும் மூலமானது.

உதாரணமாக, கீழே போவதில் ஒன்பதும், மேலே போவதில் பத்தும் எத்தனை கோடியாக விரிந்தாலும் யாவும் ஒன்றில் அடக்கமானவையே. சகல எண்களுடைய யதார்த்தத்துக்கும் ஒரு விசேடப் படித்தரம் உண்டு. ஆனால், யாவில் மொத்தமான தன்மையின் யதார்த்தமோ ஒன்றேதான். இவ்வாறு வெளிப்படாமல் இருந்த இறைவனும், வெளிப்பாடான இறைவனும் ஒன்றுதான். இரண்டுக்கும் இடையில் பாகுபாடுகள் காட்டப்படினும் கூட இதுவே உண்மை. ஒரே யதார்த்தம் ஒன்றாகவும் பலவாகவும் உள்ளது. ஒரே உள்ளமை பலவாகக் காட்சி அளிக்கிறது.

இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொன்னார்கள் 'எனது தந்தையே, உங்களுக்கு கட்டளையிடப் பட்டுள்ளவாறு நீங்கள் செய்யுங்கள்' என்று. எனவேதான் தந்தை இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் யதார்த்தம் தன் சொந்த நப்ஸே(மனமே) அர்ப்பணிக்கப்படக் கண்டது. இறைவன் இஸ்மாயீலின் இடத்தில் ஆடு ஒன்றை அவர்களுக்குப் பகரமாக்கினான். தந்தையின் யதார்த்தமான புதல்வனின் உருவில் தோன்றியது ஆட்டின் உருவில் தோற்றமளித்தது. ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் அவர்களை இறைவன் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் யதார்த்தத்திலிருந்து படைத்தான்.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் யதார்த்தத்தையே மணந்து கொண்டார்கள். கண்ணாடிகள் பல, வதனம் ஒன்றுதான். காணும் பல வதனங்கள் உண்மையில் ஒரே வதனத்தின் பிரதிபிம்பங்கள்தாம்.

வதனங்களின் இடம் 'அஃயான் தாபிதா'. இவற்றால் இறைவன் பல்வேறு படிவங்களில் பல்வேறு தனித்தன்மைகளைக் காட்டுகிறான். சகல ஜீவிதங்களையும் பொதிந்து நிற்பவனான அவன் இவ்வாறு தன்னைத்தானே மேலே உயர்த்திக் கொண்டவனாகிறான். இப்பரிபூரணத்துவம்தான் 'அல்லாஹ்' என்ற பெயரால் குறிக்கப்படுவது. இவ்வார்த்தையால் குறிக்கப்படாதது அதன் வெளிப்பாடுகளில் ஒன்றாகவோ, அல்லது கல்யாண குணங்களின் வெளிப்பாடுகளில் ஒன்றாகவோ இருக்கும். அந்தப் பதம் வெளிப்பாடானதாக இருக்குமாயின் அதற்கும் அந்த வெளிப்பாட்டுக்கும் இடையில் வேற்றுமை உண்டு.

பிந்தியதை அல்லாஹ் என்றோ, அவன் அல்லாதது என்றோ கூறமுடியாது. இவ்விஷயத்தை அப்துல் காஸிம் இப்னு குசை அவர்கள் தங்கள் நூலான 'கைருல் காஸீன்' என்பதில் விவரித்துள்ளார்கள். இறைவனை அவனுடைய ஒவ்வொரு திருநாமத்தாலும் அறியலாம். அப்பெயர் அவர் உள்ளமையைத்தான் குறிக்கும். அதன் குறிப்பிட்ட ஓர் அம்சத்தைக் குறிக்கும். இவ்வாறானால் ரப்பு (ஊட்டி வளர்ப்பவன்), காலிக் (சிருஷ்டிப்பவன்), முஸவ்விர் (தீட்டுவோன்) போன்ற திருநாமங்கள் பகுத்தறியப்படும். உள்ளமை சம்பந்தப்பட்டவரை பெயர்தான் உண்மையில் பெயர் சூட்டப்பட்டதாகும். அம்சங்கள் சம்பந்தப்பட்டவரை பெயர் சூட்டப்பட்டதன் 'மற்றதான தன்மை'யேயாகும்.

எனவே, இறைவன் தன் பதவி அந்தஸ்து காரணமாகவன்றி தானாகவே மகா உன்னதமான நிலையிலுள்ளான். ஒரு மந்திரியானவர் தமது பதவி காரணமாக உயர்ந்த அந்தஸ்தை அடைகிறார். அவர் கல்வியறிவற்ற மூடராய் இருந்தால் கற்ற அறிஞர்கள் மீதும் அதிகாரம் உரைடயவராய் விளங்குகிறார். ஆனால், அவர் தமது பதவியை விட்டுவிலகிய கணமே அந்த அந்தஸ்து அவரை விட்டு விலகி விடுகிறது. கற்றறிந்தவன் நிலை இதுவன்று. அவன் அந்தஸ்து உயர்வு அவன் தன்மையால் உண்டானது.

**விளக்கக் குறிப்பு:** இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய உயர்வு இறைவனைப் பற்றிய அவர்களுடைய ஞானத்தால் வந்தது. உயர்வு பதவியாலும், அந்தஸ்தாலும், உள்ளமையாலும் ஆக இம்மூன்று வகையில் உண்டாவது என்றும் ஷைகுல் அக்பர் சொல்கிறார்கள்.

## அத்தியாயம் 5

## இப்றாஹீம் நபியின் ஞானம்

இப்றாஹீம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின் நேயர் (கலீலுல்லாஹ்) என்று அழைக்கப்படுகிறார்கள். காரணம், அவர்களுடைய இறைவனுடைய கலவ்யாண குணங்கள் அனைத்திலும் அவர்கள் புகுந்து பார்த்துவிட்டார்கள். அவனுடைய தனி இயல்புகளையும் சூழ்ந்து அறிந்து விட்டார்கள். புகுந்து பார்ப்பது என்பது தாளில் வர்ணம் புகவது போன்ற முறையிலாகும். அதில் நீடிக்கப்பட்டதே உள்ளமையாக ஆகிவிடுகிறது. இது ஒருபொருள் இன்னொன்றில் கலந்துவிடுவது போன்றல்ல.

அல்லது அவர்கள் 'கலீலுல்லாஹ்' என்று அழைக்கப்பட காரணம், இப்றாஹீம் நபியின் தோற்றத்தினுள் இறைவன் ஊடுருவியிருந்தான். அழியும் பொருளு;களில் இறைவன் தன்னை வெளியாக்கிக் காட்டுவதை நீங்கள் பார்த்ததில்லையா? 'சிருஷ்டிக்கப்பட்டது' இறைவனின் கல்யாண குணங்களோடு காட்சித் தர நீங்கள் கண்டதில்லையா? எனவேதான், புகழ்பவர்கள் அனைவருடைய புகழும், புகழ் யார்மீது சுமத்தப்பட்டாலும் அது அத்தனையும் அவனையே சாருகிறது.

ஒருபொருள் இன்னொன்றில் ஊடுருவும்போது, முதல் பொருள் மற்றதில் மறைந்து இருகு;கிறது.இதனால் அது அதன் அகம்(பாத்தின்) ஆகிறது. சிருஷ்டியாளன் வெளிப்படுவதாயின் கிருஷ்டிகள் அவனில் மறைந்துவிடும். அப்படியானால் பார்ப்பவன், கேட்பவன் போன்ற அவனுடைய திருநாமங்கள் யாவும் சிருஷ்டிகளின் பெயர்களாகிவிடும். இப்பெயர்கள் சிருஷ்டி (கல்கு) ஆகிவிடும். சிருஷ்டி வெளிப்படையானால் இறைவன் அதில் மறைவானவனாய் இருக்கிறான். சிருஷ்டியின் பார்வையும், கேள்வியும் இறைவனின் பார்வையும் கேள்வியும் ஆகிவிடும். இறைவன் தொடர்பற்ற நிலையிலாயின், அவன் இறைவனாக இருக்க முடியாது.

எனவே, நாம் அறியப்படும் வரை இறைவன் அறியப்பட்டவனாய் இருக்க மாட்டான். 'தன்னை அறிந்தவன் தன் இறைவனை அறிந்தவனாவான்'. மற்ற யாரையும் விட இறைவனை நன்கு

அறிந்தவர்கள் நமது நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆவார்கள். இமாம் கஸ்ஸாலீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் உட்பட தத்துவஞானிகள் பலர் சொல்கின்றனர் இவ்வுலகுக்கு தொடர்பின்றி (அதாவது, முற்றுமான தன்மையில்) இறைவனை அறியலாம் என்று. இத்தகைய தொடர்பின்றி தெய்வ உள்ளமை பற்றிய கருத்தை அறியலாமேயன்றி மற்றபடி இது சரியன்று.

சிருஷ்டிகளை அறியாதபடி நாம் சிருஷ்டித்தவனை அறிய முடியாது. இன்னொரு வழியால், அதாவது ஞான திருஷ்டி (கஷ்பு) மார்க்கத்தில் இறைவனே தன் இறைவன் தன்மைக்கு அத்தாட்சியாய் ஆகிவிடுகிறான்.

'அஃயான்' இயல்புக்கு ஏற்ப அவற்றில் அவன் பல்வேறு படிவங்களில் வெளிப்படுவது போன்றது இது. இறைவனில் நாம் ஒவ்வொருவரும் நம்மில் மற்றவரைக் காணலாம். இறைவன் நம்மை நம் 'அஃயான்'களுக்கு ஏற்ப உத்தரவிடுகிறான். ஏன் நாமே நம் இயல்புக்கேற்ப நமக்கு உத்திரவிட்டுக் கொள்கிறோம். ஆனால் அதற்கான அவசியம் இறைவனுடைய அறிவில் இருக்கிறது. இதனர்ல நாம் நடத்தப்பட்ட முறைபற்றி நியாயத் தீர்ப்பு நாளில் அவனிடம் குறைகூற இடமே இல்லாது போய்விடுகிறது.

அத்தகைய நடைமுறை பற்றிய அறிவு அப்போது நமக்கு உதிப்பாகிறது. எனினும் 'இறைவன் நாடியிருந்தால் அவன் உங்களுக்கு நேர்வழி காட்டியிருக்கலாம்' என்ற வசனத்தின் கருத்தை நாம் சொல்லிக்காட்டலாம். கேட்பதைக் கொடுக்கும் அவனுடைய விதிப்பு நீடிக்கிறது. யதார்த்தம் எப்பக்கம் சால்புடையதாகிறதோ அவ்வழியிலேயே அவனும் நாடுகிறான்.

சித்தம் என்பது அறிவின் துணைக் கொண்டு இயங்குவது, அறிவு அறியப்பட்டவனைக் கொண்டு இயங்குகிறது. 'அஃயானி'ல் இருப்பதே அறியப்பட்டது எனப்படும். 'ஏற்கனவே ஒதுக்கப்பட்ட ஒரு பதவியில் இல்லாத யாரும் நம்மில் இல்லை' (அத் 34:164) நீ இறைவனுடைய அறிவிலுள்ள பதவி இதுவேயாகும். இப்பதவி புறவாழ்வில் உன்னுடையதுதான் என்று நிரூபணமாகிவிட்டால் நீ அதனுடன் புறத்தே தோற்றப்பட்டுள்ளாய் என்பது நிதரிசனமாகும்.

ஆனால், அந்த ஜீவிதம் உன்னுடையதன்று, இறைவனுடையதுதான் என்று நிரூபணமானால் அப்போது உன் ஜீவிதம் இறைவனின் ஜீவிதத்தில் அடங்கியதாகி விடுகிறது. நீ உண்மையிலேயே ஜீவிதம் உள்ளவனாயின், அந்த ஜீவிதத்தைத் தருபவன் இறைவனேயன்றோ! இவ்வாறு அவன் அந்த ஜீவிதம் என்ற கருணையை உன்மீது அருளுபவன் ஆகிறான். அந்த உத்திரவு உன்னால் உன்மீது உண்டாகிறது. எனவே, உன்னுடையதையன்றி வேறு உள்ளமை (தாத்து) எதன்மீதும் போற்றுதலையோ தூற்றுதலையோ சுமத்தாதே!

இறைவனுக்கு உரிய புகழ் அவனுடைய அளப்பற்ற கருணையால் உண்டாவதுதான். இறைவனுக்குத் தன் கல்யாண குணங்கள் வெளிப்பட உதவும் உணவாக நீ விளங்குகிறாய். உனக்கு இறைவன் தன் காருண்யம் வெளிப்பட உதவும் உணவாக இருக்கிறான்.

www.sufimanzil.org

இவ்வாறு இருக்க, (அவன் அஸ்மாக்கள் வெளிப்பட) நான் அவனுக்கு உதவும்போது, அவன் எப்படித் தேவையற்றவனாக இருக்கிறான்?

(என்னால் தீவிரம், சாத்வீகம் ஆகிய சுடர்களை ஒரு சேர வெளியாக்க உதவிய) அவனை நான் நல்லவனாக்குகிறேன்.

அவன் உத்தரவிடுபவன். நீ உத்தரவிடப்படுபவன். தன் 'அஸ்மா'க்கள் வெளிப்படையாக நீ கேட்டதை அவன் தந்தான்.

இறைவனின் நேயரான இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இவ்விஷயம் பற்றிய யதார்த்தத்தை அறிந்திருந்தார்கள். எனவே உபசரிக்கும் பழக்கத்தை மேற்கொண்டார்கள். இதனால் இப்னு முஸர்ரதுல் ஜப்லா என்ற பெரியார் இப்றாஹீம் நபியை, உணவை அளிக்கும் அமரர் மீகாயிலின் ஸ்தானத்திலேயே வைத்துப் பார்த்தார்கள். உணவு உடலின் சகல அங்கங்களையும் ஊடுருவுகிறது. உடலில் உணவு ஊடுருவுவது போல இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனுடைய 'அஸ்மா'க்கள் அனைத்தையும் உடுருவி நின்றார்கள்.

**விளக்கக் குறிப்பு:** இந்த அத்தியாயத்தில் ஷைகுல் அக்பர் அவர்கள் அன்பு பற்றியும், நிர்க்குணமான தன்மை (தன்ஸீஹ்) பற்றியும் பேசுகிறார்கள். உலகின் அடிப்படையான அன்பு பற்றி இதில் விவரிக்கப்பட்டுள்ளது. ஹதீஸ் குத்ஸியில் கண்டுள்ளபடி தாவூது நபி தங்கள் பிரார்த்தனையில் இறைவனிடம் அவன் ஏன் இவ்வுலகைப் படைத்தான் என்று வினவினார்கள். இதற்கு இறைவன், 'நான் மறைவான பொக்கிஷமாய் இருந்தேன். நான் அறியப்படுவதை விரும்பினேன். எனவே, உலகைப் படைத்தேன்' என்று பதிலருளினான்.

காதலில் காதலிக்கப்படுபவன் ஒன்று நேரடியாகவோ, அல்லது எண்ணத்திலாவதோ பிரசன்னமாயிருப்பான். இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சகல வெளிப்பாடுகளிலும் இறைவனின் உள்ளமையை (தாத்தை) உணர்ந்தார்கள்.

فَلَمَّآ اَفَلَ قَالَ لَآ اُحِبُّ الْاٰفِلِيْنَ

'நான் மறையும் பொருள்களை (இறைவனாக) நேசிக்கவில்லை' (அத் 6:76) என்று கூறினார்கள்.

இவ்வாறு அவர்கள் இறைவனைத் தன்ஸீஹ் (குணமில்லாத நிலை) ஆகவும் தஷ்பீஹ் (அவனுடைய குணங்கள் யாவுடனும்) ஆகவும் கண்டார்கள். 'திண்ணமாக, நான் வானங்களையும் பூமியையும் படைத்த உள்ளமை எதுவோ அதன் வதனத்தின் பக்கம் திரும்பி விட்டேன்.

நான் ஒரு ஹனீப் (ஏகத்துவத்தை விசுவாசிப்பவன்) நான் முஷ்ரிக் (இணைவைப்பவர்)களில் சேர்ந்தவனல்ல.' (அத் 6:80) இறைவன் தன்மையை தன்ஸீஹ் அளவில் கட்டுப்படுத்துவொர் உலகை இறைவனின் 'கைர்' (மற்றதானது) என்று கருதுகின்றனர். இதனால் இறைவனுக்கு பங்காளியை உண்டாக்கி விடுகின்றனர். இதனால் அவர்களும் இணை வைப்பவர்கள்

ஆகிவிடுகின்றனர். இப்றாஹீம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கோட்பாடு யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டது. இதனால் முஸ்லிம்கள் தொழுவதற்கான திசையாக ஆரமப்பத்தில் விளங்கிய பைத்துல் முகத்திஸின் திசை பின்னர் இப்றாஹீம் நபியால் மக்காவில் கட்டப்பட்ட ஆதி மஸ்ஜிதின் பக்கம் திருப்பப்பட்டது.

'அஃயான்'கள் (இறைவனுடைய அறிவில் இருந்த படிவங்கள் அல்லது யதார்த்தங்கள்) இறைவனுடைய இயல்புகள்தாம். எனவே அவை படைக்கப்பட்டவையன்று. இறைவனின் அறிவில் அறியப்பட்டவையான இந்த யதார்த்தங்கள் உள்ளமையாகிய கண்ணாடியில் தோற்றமாயின. அவற்றுக்கு ஏற்ப உள்ளமை தன்னை வெளிப்படுத்திக் காட்டிற்று. இந்த அஃயான்களை இப்றாஹீம் நபி கண்டார்கள். அவற்றில் திளைத்தவர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டார்கள். இதுவே ஸூபியாக்கள் குறிப்பிடும் 'குர்பெ நவாபில்' ஆகும்.

இதில் அப்து இறைவனின் யதார்த்தமாகிவிடுகிறான். இறைவன் அவன் கருவியாக ஆகிவிடுகிறான். இதற்கு எதிரிடையான 'குர்பெ பராயிளு' என்பதில் இந்நிலை தலைகீழாக ஆகிவிடுகிறது. இப்றாஹீம் நபி அவர்கள் இறைவனை அவனுடைய வெளிப்பாடுகளில் நோட்டமிட்டபோது அவர்கள் அதில் திளைத்தவர்களாக ஆகிவிட்டார்கள். இதனால் விருந்து உபசாரம் செய்யும் பணியை மேற்கொண்டார்கள். இதில் விருந்தாளி உண்ணும் உணவு அவனுடைய அங்க அவயங்கள் யாவிலும் பரவி நிற்கிறது. எனவே, இதனால் விருந்தளிப்பவன் விருந்தாளியில் தன்னை இழந்தவன் ஆகிவிடுகிறான்.

## அத்தியாயம் 6

## இஸ்ஹாக் நபியின் ஞானம்

இறைவன் உத்தரவுக்கு ஒழுங்கும், இணைவும் தேவை என்பதை நீ அறிவாயா? லாந்தேடவும், இன்னல் தவிர்க்கவும் (கொடுத்த) வாக்கை நிறைவேற்றல் அவசியமாகும்.

இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் புதல்வரை நோக்கிக் கூறினார்கள் 'மகனே! நான் உன்னை அறுத்து 'குர்பானி' கொடுப்பதாகக் கனவு கண்டேன்' என்று. கனவுகள் எண்ண உலகமாகும். இக்கனவுக்கு இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வேறு வகையான விளக்கம் எதுவும் தரவில்லை.

அவர்கள் புதல்வரின் உருவில் ஆடு ஒன்று இருந்தது. இதைத்தான் இப்றாஹீம் நபி தங்கள் கனவில் கண்டார்கள். 'குர்பானி' அறுத்தலில் ஆட்டை இறைவன் அந்தப் புதல்வருக்குப் பகரமாக ஆக்கினான்.

எண்ண உலகமான 'ஆலம் மிதா'லிலிருந்து உதிப்பாகும் சுடர்கள் (தஜல்லி) மற்ற உருவங்களில் வியாக்கியானம் செய்யப்பட வேண்டியவையாகும்.இப்றாஹீம் நபியை நோக்கி இறைவன் சப்தித்தான், 'நீர் உமது கனவை உண்மையானதாக ஆக்கி விட்டீர்' (அத் 37:105) என்று. 'உமது கனவு உண்மையானது, அது உமது புதல்வன்தான்' என்று இறைவன் கூறவில்லை.

இப்றாஹீம் நபி இக்கனவுக்கு வேறு வகை விளக்கம் கொடுத்துக் கொண்டிராமல் அதைத் தாங்கள் கனவு கண்ட முறையிலேயே அர்த்தப்படுத்திக் கொண்டார்கள். எகிப்தை ஆண்ட பிர்அவுன் மன்னன் கண்ட கொழுத்த மெலிந்த ஆடுகள் பற்றிய கனவுகளுக்கும் வியாக்கியானம் தேவைப்பட்டது. 'முஸ்னதி'ன் தொகுப்பு ஆசிரியரான இமாம் தகீ இப்னு முக்லத் அவர்கள் நபி பெருமானார் இவ்வாறு சொன்னதாகத் தெரிவிக்கிறார்கள். 'என்னைக் கனவில் காண்பவர்கள் பிரத்தியட்சமாகவே என்னைக் காண்பவர்கள் ஆவர். ஷைத்தான் என் உருவை எடுக்க முடியாது.'

மேலும் தகீ சொல்கிறார்கள்: அவர்கள் நபி பெருமானாரைக் கனவில் கண்டார்களாம். பெருமானார் அவர்களுக்கு ஒரு கோப்பை பால் கொடுத்து அவர்கள் அதை குடித்தார்களாம். பின்னர் அவர்களுக்கு விழிப்பு ஏற்பட்டதும் இக்கனவு உண்மையானதா என்று அறிவதற்காகத் தங்கள் தொண்டையுள் கையை விட்டு வயிற்றிலுள்ளதை வாந்தி மூலம் வெளியாக்கினார்களாம். அதில் பால் இருந்ததாம்.

தகீ அவர்கள் இக்கனவுக்குச் சரியான விளக்கம் கண்டிருப்பார்களாயின் அவர்களுக்கு எல்லையற்ற ஞானம் கிட்டியிருக்கும். காரணம், அக்கனவின் சரியான விளக்கம் அதுதான். நபி பெருமானாரின் புனிதமேனி மதீனாவில் அடக்கப்பட்டுள்ளது. யாரும் அவர்கள் ஆத்மாவையோ 'மிதாலி' உடலையோ கண்டதில்லை. அவர்களைக் கனவில் காண்பவர்கள்,அவர்கள் மரணிக்கும் முன் இருந்த அதே சடதத்துவ உடலின் தோற்றத்தோடு தான் காண்பர். அவ்வுடலின் உருவை ஷைத்தான் மேற்கொள்ள முடியாது. அவர்களுடைய 'மிதாலி' உடலையும் அவனால் நகல் செய்ய முடியாது. இறைவன் நபித்துவத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாக்கிறான்.

எனவே, நபிபெருமானரிடமிருந்து உத்திரவு எதையும் பெறுபவர்கள் அதை அப்படியே நிறைவேற்றித் தீரவேண்டும். புறஉலகில் உருப்பெற்றில்லாத உருவங்களை மனிதன் தன் கற்பனையால் உருவாக்க முடியும். அவன் தன் சித்த சக்தியால் (ஹிம்மத்தால்) தன் சித்த சக்திக்குப் புறம்பான உருவங்களை உண்டாக்க முடிகிறது. சித்த சக்தி இவ்வுருவங்களைப் பாதுகாக்கிறது. இது என்றும் குறைபடுவதே இல்லை. மெய்ஞ்ஞானி (ஆரிப்) இவற்றைக் கவனியாமல் இருப்பின் இவை தாமாகவே மறைந்து போய்விடும்.

சகல சந்நிதான நிலைகளிலும் (ஹள்ரத்திலும் - அஹதிய்யத்திற்கு கீழே ஐந்து ஹள்ரத்துகள் இருப்பதாக மெய்ஞ்ஞானிகள் கூறுகின்றனர். அவை வஹ்தத், வாஹிதியத், அர்வாஹ், அம்தால், அஜ்ஸாம் ஆகியவையாகும். இவை 'ஹள்ரத்தெ ஹம்ஸா' எனப்படும்.) மெய்ஞ்ஞானி தன்னை நிலைபடுத்திக் கொண்டு அவற்றில் படிவங்களை உண்டாக்கி வருவாராயின், அப்போது மெய்ஞ்ஞானி கவனக்குறைவாக இருந்தால்கூட மிதாலிப் படிவங்கள் அவற்றைக் காத்து வரும் ஞானநாதர்கள் இதைப் பரமரகசியமாக வைத்துள்ளனர்.

ஏனெனில், சாதாரண ஜனங்களும் தாங்கள் இறைவனில் இருப்பதாகவும், அவனிலேயே நாஸ்தியாகியுள்ளதாகவும் கூறத் தொடங்கி விடுவதுதான். தன் சிருஷ்டிகள் சம்பந்தப்பட்டவரை

மனிதனும் ஒரு சிருஷ்டியாளனே. ஆனால், அவன் தன் சிருஷ்டிகள் சம்பந்தப்பட்டவரை சகல படிவங்களிலும் மறதியானவன் ஆகிறான். மனிதனின் சிருஷ்டிக்கும் இறைவனின் சிருஷ்டிக்கும் உள்ள வேற்றுமை இதுதான்.

**விளக்கக் குறிப்பு:** இந்த அத்தியாயத்தில் ஷைகுல் அக்பர் அவர்கள் எண்ண உலகமாகிய சூக்கும உலகைப் பற்றி பேசுகிறார்கள். எண்ணம் இருவகைப்படும். ஒன்று கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட எண்ண உலகம். மற்றது வரம்பற்ற எண்ண உலகு.இது தனஜ்ஜுலாத் என்ற வெளிப்பாடு வரிசையில் ஆத்ம உலகுக்கு கீழேயுள்ள சூக்கும உலகமாகும்.

சாதாரணமான ஞானியானவர் சூக்கும உலகில் உருவங்களை உண்டாக்குகிறார். சுலூக்கின் பாதையில் அவர் முன்னேறி பூரணமான ஞானத் தெளிவு பெற்றதும் அவர் சன்னிதான நிலைகள் ஐந்திலும் (ஹள்ரத்தே ஹம்ஸா) உருவங்களை உண்டாக்கிப் பார்க்க இயன்றவராக இருப்பார். அவருடைய கவனம் வேறு திசையில் திரும்பாமல் இருக்கும் வரை இந்தநிலை நீடிக்கும். ஆனால், அவர் உண்டாக்கும் படிவங்களை இறைவன் கவனித்துக் கொண்டேயிருக்கிறான்.

لَا تَأْخُذُهٗ سِنَةٌ وَّلَا نَوْمٌ

தூக்கமோ நித்திரையோ அவனை ஆட்கொள்வதில்லை' (அத்:2:255)

ஜடத்துவ உலகில் யாரும் உருவங்களை உண்டாக்க முடியாது, இறைவனால்தான் இதைச் செய்ய முடியும். சூக்குமம், அதற்கு மேல் உள்ள உலகங்கள் ஆகியவற்றில் மனிதன் உருவங்களை உண்டாக்க முடியும். இது நீக்கப்பட்ட (அர்ளுஅன) பிரதிபிம்பம்தான். சத்து (ஜௌஹர்) இல்லாதது, சூரியன் அதைப் பிரதிபிம்பமிப்பது. ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தாங்கள் செய்து வைத்திருந்த களிமண் பறவைகளுக்கு உயிர் கொடுத்து அவற்றை பறக்கச் செய்தது இத்தகையதுதான். இவ்வாறு மனிதனும் சிருஷ்டியாளன் என்று அழைக்கப்படுகிறான்.

فَتَبٰـرَكَ اللّٰهُ اَحْسَنُ الْخٰلِقِيْنَ

'சிருஷ்டியாளர்கள் அனைவரிலும் சிரேஷ்டமானவனான அல்லாஹ் பாக்கியமுடையவன்' (அத் 23:14)

இப்றாஹீம் நபி தங்கள் புதல்வரையொத்த ஆடு ஒன்றை சிருஷ்டித்தார்கள். தாங்கள் அதை அறுத்து குர்பானி கொடுப்பதாகவும், (கனவில்) சிருஷ்டித்தார்கள். அதனால், அக்கனவை நேரடியான நனவாக்க அவர்கள் தங்கள் புதல்வரை 'குர்பானி' கொடுப்பது என்பது தன் நப்ஸையே குர்பானி கொடுப்பதுதான் என்று அவர்கள் கருதினார்கள்.

'மகன் தந்தையின் இரகசியமாவான்' என்றல்லவா சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் பனாவை (நாஸ்தியை) அடைய நாடினார்கள். இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் குர்பானி கொடுக்க முயன்றது இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்ல, இஸ்ஹாக்

அலைஹிஸ்ஸலாம் அவர்களைத்தான் என்பது ஷெய்குல் அக்பரின் கட்சியாகும். திருமறையிலோ

فَبَشَّرْنٰهُ بِغُلٰمٍ حَلِيْمٍ

'மிகப் பொறுமையுள்ள ஒரு சிறுவன்' (அத் 37:101-111)

என்றே குறிக்கப்பட்டு, இதைத் தொடரும் 11ஆம் வசனத்தில் இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இமாம் புகாரி, இமாம் ஜலாலுத்தீன், பைளாவி போன்றவர்கள் இஸ்மாயீல் நபிதான் குர்பானி கொடுக்கப்பட்டவர்கள் என்று அபிப்பிராயப்படுகின்றனர். இவர்கள் நபிபெருமானாரின் வாய்மொழியை இதற்கு ஆதாரம் காட்டுகின்றனர். அதாவது குர்பானிக்கா அர்ப்பணிக்கப்பட்ட இரண்டு பேர்களுடைய புதல்வன் நான்' என்று பெருமானார் அவர்கள் அருளியுள்ளார்கள். இது அவர்களுடைய தந்தை அப்துல்லாஹ்வையும், அவர்களுடைய மூதாதை இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் குறிப்பதாகும்.

மறைந்துபோன ஜம்ஜம் கிணறு கண்டுபிடிக்கப்பட இறைவன் உதவினால் தமது பத்துப் புதல்வர்களில் ஒருவரைத் தான் குர்பானி செய்வதாக அப்துல் முத்தலிப் சங்கல்பம் செய்து கொண்டார். அதுபோல் ஜம்ஜம் கிணறு மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டதும் தமது புதல்வர்களில் யாரைக் குர்பானி கொடுப்பது என்று சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பார்த்டார். பெருமானார் தந்தையான அப்துல்லாஹ் பெயரால் சீட்டு விழுந்தது. பின்னர் அவர்களுக்குப் பகரமாக நூறு ஒட்டகைகள் குர்பானி கொடுக்கபட்டன.

பிரஸ்தாப நூற்றுப் பன்னிரண்டாம் வசனத்துக்கு நாம் பொருள் கொள்ளும் முறையை பொறுத்த விசயம் இது. இதற்கு, 'நபி இஸ்ஹாக் பற்றிய நற்செய்தியை நாம் அறிவித்தோம்...' என்று பொருள் கொண்டால் இதற்கு முந்திய வசனங்களில் பிரஸ்தாபிக்கப்பட்ட 'சிறுவன்' இஸ்ஹாக் அல்ல, வேறு யாரோ - அது இஸ்மாயீல்தான் என்று ஆகும். அப்படியன்றி, 'இஸ்ஹாக் நபியாவார் என்ற நற்செய்தியை நாம் அவருக்கு கொடுத்தோம்' என்று பொருள் கொண்டால் இது இஸ்ஹாக்கைத்தான் குறிக்கும். ஷைகு அவர்கள் பிந்திய விதமாகப் பொருள் கொண்டுள்ளார்கள்.

## அத்தியாயம் 7

## இஸ்மாயீல் நபியின் ஞானம்

அல்லாஹ் என்ற திருநாமம் எண்ணற்ற அஸ்மாக்களுடன் கூடிய தாத்தின் (உள்ளமையின்) ஏகத்தன்மையைக் குறிப்பதாகும். இந்த அஸ்மாக்கள் யாவும் உண்மையில் தாத்தின் அம்சங்கள் தாமே! 'தாத்'தால் பலவான தன்மைக்கு இடமில்லை. அஸ்மாக்களில் அதற்கு இடமுண்டு.

அல்லாஹ் என்ற பெயர் அஸ்மாக்களின் மொத்தமான தன்மையுடன் கூடிய பரிசுத்த தாத்தையே குறிக்கும்.

வெளிப்பட்டுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு ரப்பு (ஊட்டி வளர்ப்பவன்) உண்டு. சகல ரப்புகளுக்கும் ரப்பு ஆனவன் அல்லாஹ். அவன் ரப்புல் அர்பாப் (ரப்புகளின் ரப்பு - ரட்சகர்களின் ரட்சகன்) தாத்தின் ஏகத்துவம் பிரிவுக்கு அடங்காதது. அஸ்மாக்கள் தாத்தில் மறைவாயுள்ளன.

وَكَانَ عِنْدَ رَبِّهٖ مَرْضِيًّا

'தன் ரப்பின் அங்கீகாரம் பெற்றவன் பாக்கியமுடையவனாவான்' (அத் 19:55)

பிரபஞ்சத்தில்தான் ரப்பின் அனுமதி பெறாத பொருளே இல்லை. காரணம், அந்த ரப்பின் ருபூபிய்யத் ஆன (ரட்சகன் ஆன) தன்மையை நிலைநிறுத்தியிருப்பது அதுதான். இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. அஃயான் ஒவ்வொன்றும் தன் சொந்த ரப்பினால் ஜீவிதம் பெற்றவை, ஒன்று மறைந்தால் மற்றதும் மறைந்து விடும். 'ருபூபிய்யத்தின் (ரட்சகத் தன்மையின்) ரகசியம் நீ' என்றார்கள் ஸஹல் துஸ்தரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்.

அஃயான்களுக்கு இவ்வுலகிலும், (திரையுலகான) நடு உலகிலும், வரவிருக்கும் உலகிலும் ஜீவிதமுண்டு. ருபூபிய்யத்தும் ஜீவித்திருக்கும். அஃயானின் செய் அதில் வெளிப்பாடாகும் அதன் ரப்பின் செயல்தான்.

ஒரு பொருளின் செயல் அதற்கான ரப்பின் பொறுப்பிலுள்ளது என்பது உணரப்படும் போது அதுவும் அதன் ரப்பும் திருப்தி அடைகின்றன. காரணம், தான் செய் ஒரு பொருளால் அதைச் செய்தவனும் திருப்தி அடைகிறான். 'ஒவ்வொரு பொருளுக்கும் இறைவன் அதற்குத் தேவையானதைத் தந்து, (அது தன் பாதையில் முன்னேற) அதற்கு வழிகாட்டியுள்ளான்' என்று இறைவனே அருளியுள்ளான். இதனால் ஒரு பொருளு; கூடுதலாவதோ குறைவதோ இல்லை.

இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் ரப்பை உணர்ந்தவர்களாய் இருந்தார்கள். அந்த ரப்பு ரப்புகளுக்கெல்லாம் ரப்பு ஆவான். ஒரு ரப்பு ரப்பு ஒன்றின் ரப்பு ஆக இருப்பதால் இன்னொன்றின் ரப்பாகவும் இருக்க வேண்டும் என்பதில்லை. உதாரணமாக 'முழில்லு' (வழி தவறச் செய்வோன்) என்பதன் சிருஷ்டியானது 'ஹாதி' (நேர்பாதையில் நடத்துவொன்) என்பதில் அங்கீகாரம் பெற்றதாக இருக்க இயலாது.

(தனஸ்ஸுலாத்தின் முதல்படியான) அஹதிய்யத்தில் அல்லாஹ்வை 'ரப்பு' என்று சொல்ல முடியாது. இப்படிவத்தில் தஜல்லி இல்லை. இவன் தன்னைத்தானே நோட்டமிடுபவனாக இருக்கிறான். இறைவனுடைய தஜல்லி கொண்டு அவனை நீங்கள் பார்க்க முடிந்தால் அவனுடைய அஹதிய்யத் மறைந்து விடுகிறது. இத்தரிசனையில் பார்ப்பவன் - பார்க்கப்பட்டவன் என்ற பந்தம் உண்டாகி விடுகிறது. இந்த அஹதிய்யத் நிலையிலோ அத்தகைய தொடர்புகள் கிடையாது. இறைவன் தன்னைத் தான் காணும்போது அவனே பார்ப்பவன், அவனே பார்க்கப்பட்டவன்.

எனவே, ரப்புல் அர்பாபின் செயல் இயல்புக்கு இணைந்த செயல்உணர்வு இருந்தாலன்றி ஒரு பொருள் பூரணமானதாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹாதி என்ற தங்கள் ரப்பின் ஒப்புதலைப் பெற்றிருந்தார்கள். அதன் மூலம் ரப்புல் அர்பாபின் ஒப்புதலையும் பெற்றிருந்தார்கள்.

'நப்ஸெ முத்மயின்னா' நிலையை அடைந்த யாருமே தன் ரப்பின் ஒப்புதலைப் பெற முடியும். இந்த நப்ஸை விளித்துத்தான்

فَادْخُلِىْ فِىْ عِبٰدِىْۙ‏ وَادْخُلِىْ جَنَّتِى

' என் அடியார்கள் கூட்டத்தில் சேர்வாயாக, என் ஜன்னத் என்னும் சுவனத்தில் புகவாயாக!' (அத் 89:29,30) என்று இறைவனும் கூறியுள்ளான்.

(ஜன்னத் என்ற பதம் 'ஜுன்' என்பதிலிருந்து வந்தது என்று ஷைகு அவர்கள் பொருள் கொள்கிறார்கள். 'ஜுன்' என்றால் கவசம் அல்லது திரை என்று பொருள்) இந்த நப்ஸெ முத்மயின்னா 'ஹாதி'யைத் தன் ரப்பு ஆக ஒப்புக் கொண்டுள்ளது. இவ்வாறு ரப்புல் அர்பாபின் ஒப்புதலை அது பெற்றுள்ளது. இந்த ஜன்னத்திலே அடியான் தந் ரப்பைத் தன்னில் மறைத்து வைத்திருப்பான். எனவே, தன் நப்ஸை இனம் காண்பவன் தன் ரப்பையும் இனம் கண்டு கொள்வான். இதனால் நீ உன் நப்ஸினுல் புகும்போது நீ இந்த ஜன்னத்தில் (ஜன்னத்துல் தாத்தில்) புகுபவன் ஆகிறாய்.

நீயே அடியான், நீயே அதன் ரப்பு.

அதில் நீயே அதன் அடியான்!

நீயே ரப்பு, நீயே அதன் அடியான்!

اَلَسْتُ بِرَبِّكُمْ‌ؕ قَالُوْا بَلٰى‌ۛۚ

'அலஸ்து பி ரப்பிகும்' என்ற வினாவுக்கு வாக்குறுதியளித்தவன் நீயே! (திருமறை அத்தியாயம் 7: 172 கூறுகிறது ' நான் உங்கள் ரப்பு அல்லவா?' என்று மீதாக் நாளில் 'இறைவன் ஆத்மாக்களிடம் கேட்டான். அவை ஆம்', அவ்வாறு நாங்கள் சாட்சியம் பகர்கிறோம்' என்று வாக்குறுதியளித்தன.

**விளக்கக் குறிப்பு:** மொத்தம் இருபத்தி எட்டு அஸ்மாய இலாஹி பெயர்கள் உண்டு. இவை அவற்றுக்கு நேரான அஸ்மாயெ கியானியின் அர்பாப் (ஊட்டி வளர்ப்பவை) ஆகும். இந்த அஸ்மாயெ கியானிப் பெயர்கள் இருபத்தி எட்டும் முன்னவற்றின் மர்பூப் (ஊட்டி வளர்க்கப்படுபவை) ஆகும். மொத்தமான இவைதாம் பிரதானமான அர்பாபும் (ஊட்டி வளர்ப்பவை, ஆட்சி செலுத்துபவை) மர்பூபும் (ஊட்டி வளர்க்கப்படுபவை, ஆட்சி செலுத்தப்படுபவை) ஆகும். இவற்றின் உட்பிரிவுகளோ எண்ணற்றவை.

கடல் மணலை விட எண்ணற்றவை. இப்பிரபஞ்சம் வெளிப்படையான மர்பூபாத்தை (ரட்சிக்கப்படுவதை) கொண்டவை, அதன் அர்பாப் மறைந்துள்ளது. இந்த அர்பாப் அல்லது அஸ்மாக்கள் அல்லது ஹகீகத்தே முஹம்மதிய்யாவின் வெளிப்பாடுகள்தாம். ஒவ்வொரு மர்பூபும் தன் ரப்பிலிருந்து வெளி வருகிறது. உதாரணமாக, மிருகங்கள் 'முதில்லு'(இழிவடையச் செய்வோன்) என்ற ரப்பிலிருந்து வெளிவந்தன. மருக இயல் வாய்ந்த மனிதன் இதே 'முதில்லு'விலிருந்து படைக்கப்பட்டவன் என்று கொள்ளலாம்.

சம்பூரணத்துவம் அடைந்த மனிதன் ஹாதி (நேரிய பாதையில் நடத்துவொன்) என்ற ரப்பிலிருந்து வெளியாக்கப்பட்டவனாய் இருப்பான். சிறந்த குணங்கள் உடையவனும், மிருக குணங்கள் உடையவனும் தமதுரப்புகளின் இயல்பை அறிவார்களாயின் முதில்லு என்பதும், ஹாதி என்பதும் ஒரே மூலஸ்தானத்திலிருந்து வெளிப்படுபவை தாம் என்பதை உணர்வார்களாயின் மூலஸ்தானத்தை அவர்கள் நெருங்கியதும் அவர்கள் ஒன்றாக ஆகிவிடுகின்றனர்.

முதில்லு என்ற நாமத்தின் மர்பூப் தன் மூலஸ்தானம் ரப்புல் அர்பாபிலிருந்து வந்தது என்பதை உணருமாயின் அது ஹாதியின் அடியானாக ஆகிவிடும். இந்த மூலஸ்தானத்தை அடையாது அது தன் சொந்த ரப்பின் நீரோட்டத்திலேயே நீந்திக் கொண்டிருக்குமாயின், தன் சொந்த ரப்பினால் ஒப்புக் கொள்ளப்பட்டதாயும் மற்ற ரப்புகளால் ஒப்புக் கொள்ளப்படாததாயும் இருக்கிறது. அதன் ரப்பு அதை ஒப்புக் கொண்டு இயக்கி விட்டு விடுகிறது.

رَضِىَ اللهُ عَنْهُمْ وَرَضُوْا عَنْهُ

'அல்லாஹ் அவர்களிடம் மனம் பொருந்துவான், அவர்களும் அவனிடம் மனம் பொருந்துவார்கள்' (அத் 5:119)

அது இதை உணருமாயின் அது ரப்புல் அர்பாப் என்னும் நீரோட்டத்தின்பால் அடித்துச் செல்லப்பட்டு அலீ (உன்னதமாக்கப்பட்டது) என்ற பெயரை எடுத்துக் கொள்கிறது.

அலீ என்பது அல்லாஹ்வின் திருநாமங்களுள் ஒன்றாகும். இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இப்பதவியை அடைந்திருந்தார்கள். 'மேலும் (அவர்கள் காலமான பின்னும்) அவர்கள்பெயர்கள் பிரஸ்தாபிக்கப்படும் போதெல்லாம் இன்றளவும் 'அலைஹிமிஸ்ஸலாம்' என்று பிரஸ்தாபிக்கப்பட்டு கண்ணியமாகக் குறிப்பிடச் செய்தோம்' (அத் 19:50) அவர் தம் வாக்குறுதியில் உண்மையானவர்.... தன் இரட்சகன் அதிகத் திருப்தி அடைந்தோருள் ஒருவர்' (அத் 19:54,55ன் பகுதிகள்)

வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் உண்மையாக நடந்து கொண்டது இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய குணங்களுள் ஒன்றாகும். அவர்கள் அலி என்ற நாமத்தின் பதவியை அடைந்து விட்டார்கள் என்பதற்கு இது ஒரு சமிக்ஞையாகும். நபி பெருமான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இஸ்மாயீல் நபி முன்னோடி ஆவார்கள். நபிபெருமானாரோ இப்பதவியைப் பூரணமாக அடையப் பெற்றிருந்தவர்கள். இதற்கு

மேலுள்ள பதவி தாத்துடையது. அங்கே சகல அஸ்மாக்கள், சிபத்துகள் எல்லாம் நாஸ்தியாகி விடுகின்றன. இந்தத் தானத்தில் தாத்து தன்னைத்தானே நோட்டமிடுவதாக இருக்கிறது. மற்றதான தன்மைக்கு இங்கு இடமே இல்லை. எனவேதான் திவ்விய தரிசனம் அஸ்மாக்களின் (அல்லது) அர்பாப்களின் படிவத்தில்தான் உண்டு. தாத்தின் தானத்தில் இல்லை என்று ஷைகுல் அக்பர் சொல்கிறார்கள்.

மர்பூப் இஸ்மு தன் ரப்பு இஸ்மில் மறைந்து கொள்கிறது. (எனவேதான், ஜன்னத் என்ற பதம் ஜுன் (கவசம் அல்லது திரை) என்பதிலிருந்து வந்தது என்று ஷைகுல் அக்பர் பொருள் கொள்கிறார்கள். அது அதில் மறைந்ததும் அதுவே ரப்பு ஆகிவிடுகிறது. தன்னை இறைவனில் இழக்கும் குறிப்பிட்ட அம்சம் இந்த ரப்பு. இவ்வாறு மறைந்ததும் அது பனா (நாஸ்தி) ஆகி, பிரபஞ்சத்தையே தன் வெளிப்பாடாக காண்கிறது.

## அத்தியாயம் 8

## யாகூப் நபியின் ஞானம்

சன்மார்க்கம் இரண்டு வகைப்படும். இறைவனால் மெய்ஞ்ஞானம் அருளப்பட்டவர்களுக்கும்,அவர்கள் மூலம் மெய்ஞ்ஞானம் எய்தியவர்களுக்கும் இறைவன் பக்கம் இருந்து கிடைக்கும் சன்மார்க்கம் ஒன்று. மற்றது இறைவனுக்குத் தெரியும்படியாக மனிதனிடமிருந்துள்ள சன்மார்க்கம். முந்திய வகைச் சன்மார்க்கமே இறைவனால் ஏற்கப்பட்டது. 'இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது சந்ததியினருக்கு இந்தச் சன்மார்க்கத்தையே விதியாக்கினார்கள்.

يٰبَنِىَّ اِنَّ اللّٰهَ اصْطَفٰى لَـكُمُ الدِّيْنَ فَلَا تَمُوْتُنَّ اِلَّا وَاَنْـتُمْ مُّسْلِمُوْنَؕ

'என் சந்ததியினரே, இறைவன் இந்தச் சன்மார்க்கத்தை உங்களுக்கு அருளியுள்ளான். அதனால், அவனுக்குப் பணிவானவர்களாக அன்றி (முஸ்லிம்களாக அன்றி) நீங்கள் மரிக்க வேண்டாம்!' (அத் 2:132)

இந்தச் சன்மார்க்கம் அவர்களுக்கு ஏற்கனவே அறிமுகமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவே

اِنَّ الدِّيْنَ عِنْدَ اللّٰهِ الْاِسْلَامُ

'அல்லாஹ்வின் மார்க்கம் இஸ்லாம் ஆகும்' (அத் 3:19) என்பதில் சொல்லப்பட்டுள்ளதும் ஆகும்.

அதாவது, சிருஷ்டிகள் சிருஷ்டியாளனுக்குப் பணிவரை இது குறிக்கிறது. இவ்வாறு அடிமை தன் எஜமானனுக்குப் பணிவதுதான் அடிமையின் சன்மார்க்கமாகும். இறைவனிடமிருந்து வந்துள்ள சன்மார்க்கம் இறைவனுடைய சன்மார்க்க நெறிமுறை(ஷரீஅத்) ஆகும். இறைவனிடமிருந்து (ஜிப்ரயீல்) கொணர்ந்த தொழுகை இதில் அடங்கியதுதான். இந்த ஷரீஅத்



www.sufimanzil.org

படி ஒழுகி, தன் வாழ்க்கையை அதற்கேற்ப அமைத்துக் கொள்பவன் பாக்கியமுடையவன் ஆவான்.

சன்மார்க்கம் அல்லாஹ்விடமிருந்து வந்தது, ஆனால் அதன் ஜீவிதம் அடியானிடமிருந்து உண்டாவதாகும். அதற்கும் அடியானுக்கும் உணர்வையும் உதிப்பையும் உண்டாக்கித் தருபவன் அல்லாஹ்வேதான். இறைவனுடைய அஸ்மாக்கள் அவனுடைய செயல்களால் நிதரிசனமாவது போல, சன்மார்க்கம் உங்கள் செயல்களால் நிதரிசனமாக வேண்டும். இவ்வாறு நீங்களே இறைவனுடைய அஸ்மாக்களாக ஆகிவிடுகிறீர்கள்.

ஷரீஅத்தின்படி நீங்கள் பணிந்து ஒழுகி வருவீர்களாயின், இறைவனை நோக்கி நீங்கள் உயர்த்தப்பட்டவர்கள் ஆவீர்கள். ஆனால், துறவு மனிதனிடமிருந்து உண்டானது.

'அவர்கள் தமது மனம்போன போக்கிலான துறவு வாழ்வைப் புதமையாகச் சிருஷ்டித்துக் கொண்டுள்ளனர்' (அத் 57:27)

அதனால் அவர்களுள் பலர் சன்மார்க்க வரம்புக்குப் புறம்பானவர்கள் (பாஸிக்) ஆகி விட்டனர். சன்மார்க்கம் நல்ல சன்மானங்களைத் தரும். அது மகிழ்வை உண்டாக்கும். எனவேதான்,

رَضِىَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوْا عَنْهُ

'அல்லாஹ் அவர்களிடம் மனம் பொருந்துவான், அவர்களும் அல்லாஹ்வோடு மனம் பொருந்துவார்கள்'(அத்5:119) என்று அருளப்பட்டுள்ளது.

இந்தச் சன்மானங்கள் இறைவனுடைய ஜீவிதம் என்னும் கண்ணாடியில் உண்டான தஜல்லியாத்துக்களாக இருக்கின்றன. இறைவனுடைய அறிவிலுண்டான அஃயான்கள் பல்வேறு புதிய புதிய படிவங்களில் தம்மை வெளியாக்கிக் காட்டிக் கொண்டேயிருக்கின்றன. அவற்றுக்கான சாத்தியமான ஜீவிதத்தில் அவற்றின் உள்ளமை பெறும் படிவங்களில் இவை தம்மை வெளியாக்கிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப இறைவனுடைய தஜல்லியும் மாறுபடும். தஜல்லியின் அளவுக்கேற்ப அடியான் மீது அதன் எதிரொலியும் கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கும்.

எனவே, இறைவன் தனக்குத்தானே நல்லதையும், அதற்கு மாற்றமானதையும் அருளுகிறான். அவனுக்குத் தனக்குத்தானே சன்மானங்களையும் தண்டனைகளையும் கொடுத்துக் கொள்கிறான். அஃயான்களின் படித்தரங்களுக்குக் கீழேயுள்ள நிலைகளில் தன்னைத்தானே அவன் புகழவோ இகழவோ செய்கிறான். அறிவு அறியப்படுபவனைப் பொறுத்தது. அஃயான்கள் சூனியமானவையாய் இருந்தன. அறிவிலுள்ள அஃயான்களின் படிவங்களில், இறைவனின் ஜீவிதம் தோற்றமாயிற்று. இவ்வாறு ருசிப்பவன் யார், ருசியாதவன் யார் என்பதை நீ அறிந்து கொள்கிறாய்.

வைத்தியர் மனிதனுடைய இயல்பின் பணியாளனாய் இருப்பதுபோல் ஒரு ரஸூல் (தூதர்) இறைவனுடைய கட்டளையின் அடியார் ஆவார். சந்தர்ப்பத்துக்கு ஏறு;ப வைத்தியர் வியாதியை

கூடுதலாக்குவதன் மூலமோ, குறைவாக்குவதன் மூலமோ இயற்கையைக் கட்டுப்படுத்துவார். அவர் இயற்கையின் ஆலோசகர் அல்லது மந்திரியாக இருக்கிறார்.

இதுபோன்ற நிலையில்தான் ஒரு நபியும் இருக்கிறார். இறைவனுடைய அறிவில் உள்ளது யாது என்பதை அவர் சில சமயங்களில் அறிகிறார், சில சமயங்களில் அறிய முடிவதில்லை. அறிந்தால் தெய்வச் சித்தப்படி நடந்து கொள்கிறார். அறியாவிட்டால் பொதுவான முறையில் இறைவன் கட்டளையிடுவதைப் பார்க்கிறார். குறித்த அம்சம் அவனால் விரும்பப்படவில்லை என்பதை புரிந்து அதை விட்டு விலகிக் கொள்கிறார். இவ்வாறுள்ளதே பாவம் எனப்படும்.

இதனாலேயே நபி பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்க்ள, 'ஹூது அத்தியாயம் என்னைக் கிழவனாக ஆக்கிவிட்டது' என்று. ஏனெனில், திருமறையிலிருந்து இறக்கப்பட்ட 'ஹூது அத்தியாயத்தின் பிற்பகுதி, 'உங்களுக்கு கட்டளையிடப் பட்டதை ஒழுங்காக நிறைவேற்றி வாருங்கள்' என்ற கட்டளைத் தாங்கியதாக இருக்கிறது.

இக்கட்டளை நபிபெருமானாரை அவர்கள் முதுமை அடையும் முன்னரே முதுமையடைந்தவர்களாக ஆக்கிவிட்டது. ஏனெனில், இறைவனுடைய சித்தப்படி என்ன நடக்கும், நடவாது என்பதை அவர்கள் அறியமாட்டார்களல்லவா! சிலர் ஆத்மீக ஞானதிருஷ்டியால் இறைவனுடைய அறிவிலுள்ளது என்ன என்பதை அறிந்து அதன்படி நடப்பார்கள். ஆயிரத்தில் ஒன்றில்தான் இவ்வாறு நடக்கும். இது மிகவும் மாறும் நிலையாகும்.

قُلْ مَا كُنْتُ بِدْعًا مِّنَ الرُّسُلِ وَمَآ اَدْرِىْ مَا يُفْعَلُ بِىْ وَلَا بِكُمْؕ اِنْ اَتَّبِعُ اِلَّا مَا يُوْحٰٓى اِلَـىَّ وَمَاۤ اَنَا اِلَّا نَذِيْرٌ مُّبِيْنٌ

'இறைவனிடமிருந்து நான் என்ன நடைமுறையை அடைவேன், நீங்கள் என்ன நடைமுறையை எதிர் நோக்குவீர்கள் என்பதை நான் அறிய மாட்டேன் என்று (நபியே நீர்) சொல்வீராக! (அத் 46:9)

என்பதுதான் நபி பெருமானாருக்கு இறைவன் புறத்தால் வந்துள்ள உத்திரவாகும். இவ்விசயம் பற்றி திரைக்கிடை செய்யப்பட்டுள்ள விளக்கம் இது.

**விளக்கக் குறிப்பு**: இந்த அத்தியாயம் 'ஹிக்மத்தே ரூஹிய்யா' (ஆத்மாவின் ஞானம்) என்பது பற்றி விவரிக்கிறது. யாகூப் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ரூஹுல்லாஹ்வின் விஷயத்தில் நம்பிக்கை வைக்காத மனநிலை இருக்கவே கூடாது என்று வற்புறத்தி வந்தவர்கள்

اِنَّهٗ لَا يَايْــَٔسُ مِنْ رَّوْحِ اللّٰهِ اِلَّا الْقَوْمُ الْكٰفِرُوْنَ

'ரூஹுல்லாஹ்விடம் நம்பிக்கை இழக்க வேண்டாம்' (அத் 12:87) என்று சொன்னதுடன், சமய அனுஷ்டானங்களையும் அவர்கள் வற்புறுத்தி வந்தார்கள்.

யாகூப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆலம் மிதால் (சூக்கும உலகம்) ஆலம் அர்வாஹ் (ஆத்ம உலகம்) ஆகியவைப் பற்றிய காட்சி காணும் ஞான திருஷ்டி (கஷ்பு) பெற்றிருந்தார்கள். தமது புதல்வர் யூசுப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கண்ட கனவின் பொருள் என்ன என்பதை இதன் மூலம் விளங்கிக் கொண்டதால் அவர்கள் அதுபற்றி மற்ற சகோதரர்களிடம் சொல்ல வேண்டாம் என்று யூசுப் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தடுத்து விட்டார்கள்.

சன்மார்க்கம் இரண்டு வகைப்படும என்று ஷைகுல் அக்பர் விளக்குகிறார்கள். ஒன்று, நபிமார்கள் மூலம் இறைவனிடமிருந்து நேரடியாக வந்தது. இது இறைவனுக்கு அடிபணிவதாகும். (இதுவே இஸ்லாம் எனப்படும்.

ஜனங்களை இறைவன் பாதையில் நடத்திச் செல்லும் சன்மார்க் நெறி முறையை (ஷரீஅத்தை) இது தன்னகத்தே கொண்டது. இவ்வாறு தமக்கான ஒழுக்க முறைகளைக் கொண்ட சமயங்கள் இறைவனிடமிருந்து வந்தவை. ஷைகுல் அக்பர் குறிப்பிடும் இன்னொரு வகை சன்மார்க்கம் நேரடியாக மனிதனிடமிருந்தே வந்துள்ள ரஹ்பானியத் என்ற துறவு முறையாகும்.

'துறவு சம்பந்தப்பட்டவரை, அவர்கள் அதைப் புதமையாகக் கண்டுபிடித்துக் கொண்டனர், நாம் அவர்களுக்கு அதை விதியாக்கவில்லை. அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இதை தடுக்கின்றனர்' அஃயான்கள் இறைவனுடைய அறிவில் இருந்தன என்றும், அதைவிட்டு அவை வெளிவரவே இல்லை என்றும் ஷைகுல் அக்பர் கருதுகிறார்கள். அடுத்த படித்தரத்தில் இறைவனுடைய அஸ்மாக்கள் வெளியாயின. இவை அஃயான்களாக வெளிப்பட்டன.

கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட இவ்வெளிப்பாடு மும்கினுல் உஜூது (சாத்தியமான ஜீவிதம்) எனப்பட்டது. அறிவிலுண்டான அஃயான்களுக்கு அவற்றுக்கே உரித்தான தனித்தன்மைகள் உண்டு. ஜீவிதம் என்னும் தஜல்லி அவற்றின் மீது பட்டதும் தமக்கே உரிய ஜமாலியான ஜலாலியான தனித்த தன்மைகளுடன் அவை வெளிப்படலாயின. எனவே, மும்கினுல் உஜூதில் அஃயானின் நிலையில் துயரப்படுவதோ இன்பப் படுவதோ இறைவனேயாகும்.

ஜனங்களுக்கு நேர்வழி காட்டவே நபிமார்கள் அனுப்பப்பட்டனர். அவர்களுடைய அழைப்பு சமூகம் முழவதற்கும் பொதுவானதாகவே இருந்திருக்கிறது. தனிப்பட்டவர்களை நேர்பாதையில் அழைத்தது சில சமயங்களில் பயன்தராது போனதும்உண்டு.

இறைவனுடைய பொதுப்படையான கட்டளைகளை அனுசரித்து அவர்கள் ஜனங்களுக்கும் உத்திரவிட்டு வந்தனர். இவை மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது. நபிமார்கள் வழங்கிய சட்டதிட்டம் சமூகம் முழுவதுக்குமானது. எனவே, அது பயனுள்ளவையாகவே இருக்க முடியும். வைத்தியர்களோ ஒரு சமயத்தில் ஒரு நோயாளியைத்தான் கவனிக்க இயலும். எனினும், இரண்டிலும் முறை வேறாயினும், நோக்கம் ஒன்றாகவே இருந்தது.

மேலும், செய்தியைத் தெரிவிப்பதுதான் நபிமார்களின் கடமை. அஃயான்கள் அவர்களுக்குச் சாதகமாக இருந்தால் அதனால் நல்ல பயன் உண்டாகும் இன்றேல் ஜனங்களை அவர்கள்

அவர்கள் போக்கில் போக விட்டு விடுகின்றனர். அஃயான்கள் அவர்களுக்குச் சாதகமாக இருந்தால்கூட பிரார்த்தனை அவசியமாகும். ஏனெனில், கேட்காமல் கொடுக்கப்படுவதில்லை. எனவே, 'என்னிடமே கேளுங்கள், உங்கள் பிரார்த்தனை ஏற்கப்படும்' (அத் 40:60) என்று திருமறை கூறுகிறது.

பிரார்த்தனை வார்த்தைகளால் ஆனதாகவோ, தனது மன நிலையாலோ, தன் இயல்பாலோ ஆனதாக இருக்கலாம். அஃயான்களின் இயல்புகளே பிரார்த்தனையாக இருக்கலாம். எனவே, நபிபெருமானாருக்கு இடப்பட்ட உத்திரவு,

إِنَّكَ لَا تَهْدِىْ مَنْ اَحْبَبْتَ وَلٰكِنَّ اللّٰهَ يَهْدِىْ مَنْ يَّشَاۤءُ

'நீர் விரும்பியவர்களை நீர் நேர்வழியில் செலுத்திட முடியாது. அல்லாஹ் தான் நாடியவர்களை நேர்வழிப்படுத்துகிறான்' (அத்28:56) என்பதாகும்.

அஃயானில் என்ன இருக்கிறது என்பதை இறைவனே அறிந்தவன். 'பலாபலன்களைக் கருதாது நீர் உமது கடமையைச் செய்யும்' என்று இறைவன் நபி பெருமானாருக்கு உத்திரவிட்டுள்ளான். இதனால் ஷைகுல் அக்பர் சுட்டிக் காட்டியதுபோல் பெருமானார் முதுமைப் பருவம் அடையும் முன்னரே முதுமை எய்தி விட்டார்கள்.

## அத்தியாயம் 9

## யூசுபு நபியின் ஞானம்

இவ்வகை ஞானம் சுடர் வீசுவது என்பது வரம்புக்கு உட்டபட்ட எண்ணத்தில் வெளிச்சம் உதயமாவதாகும். இவ்வாறு வெளிச்சம் உதயமாவது 'வஹி' (வெளிப்பாடு) இறங்குவதற்கு முன்னறிவிப்பாகும். உண்மைக் கனவுகளோடு நபி பெருமானாருக்கு வஹி இறங்கத் தொடங்கியதாக ஆயிஷா நாயகி தெரிவிக்கிறார்கள். இக்கனவுகள் காலை இளம் வெளிச்சம்போல் தெளிவானவையாய் இருந்தன. இவை ஆறு மாதங்கள் தொடர்படியாய் வந்தன. அதன்பின்னரே அமரர் வந்தார். எனவேதான், நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள், 'ஜனங்கள் தூக்கத்தில் இருக்கின்றனர். மரணம் வரும்போது விழித்துக் கொள்வார்கள்' என்று.

கனவில் தோற்றப்படுபவை அனைத்துக்கும் விளக்கம் அவசியம். மனிதனனி; வாழ்க்கை கனவுள் கனவுபோல் விளங்குகிறது. கனவில்பொருள்கள் ஓர் உருவில் வரும். உண்மையில் அவை வேறு வேறு உருவில் தோன்றும். அறிவு பாலின் உருவில் தோற்றமளித்தது, அது 'வஹி' (தெய்வ வெளிப்பாடு) இறங்க இருப்பதை குறிப்பதாக அவர்கள் விளங்கிக் கொண்டார்கள். வஹி வரும்போது சாதாரணமான சூழலை விட்டும் அவர்கள் அப்பால் ஆக்கப்பட்டுப் போர்வைகள் அவர்களின் மீது போர்த்தப்படுவதுண்டு.

இச்சந்தர்ப்பங்களில் அவர்களோடு இருந்தவர்களின் பார்வையை விட்டும் அவர்கள் மறைந்து விடுவதுண்டு. இவற்றை அவர்கள் எண்ண உலகில் உணரலானார்கள். இப்போது அவர்கள் தூங்குவதாகவோ, கனவு காண்பதாகவோ சொல்ல முடியாது. இந்த எண்ண உலகுக்குத்தான் அமரரும் வஹியுடன் வந்தார். அவர்கள் அவரைத் தங்கள் கண்களால் கண்டு, ஜிப்ரயீல் என்று இனம் புரிந்து கொண்டார்கள்.

யூசுபு நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொன்னார்கள்: பதினொரு நட்சத்திரங்குளம், சூரியனும், சந்திரனும் என்முன் பணியக் கண்டேன்' என்று. இவற்றில் அவர்கள் தங்கள் சகோதரர்களையும், தந்தையையும், அத்தையையும் கண்டார்கள். இக்கனவு அவர்களுடைய இச்சையிலிருந்தோ அவர்களோடு கனவில் சம்பந்தப்பட்டோரின் இச்சையிலிருந்தோ உண்டானதன்று. இக்கனவில் தாங்கள் தோன்றியது பற்றி பிந்தியவர்களுக்கு எதுவும் தெரியாது.

யூசுப் நபி அவர்களுக்கே இப்படிவங்களின் தாத்பரியம் யாது என்பது தெரியாது. அவர்கள் தாம் கண்டதைத் தங்கள் தந்தை யாகூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் சொன்னார்கள். இதன் பொருளை அறிந்ததால், அவ்விபரத்தை யூசுப் நபி தங்கள் சகோதரர்களிடம் தெரிவிக்க வேண்டாம் என்று தடுத்துவிட்டார்கள். இக்கனவு பின்னர் எண்ண உலகிலிருந்து ஜடதத்துவ உலகில் நனவாக உருவெடுத்தது.

நபி பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்: 'ஜனங்கள் நித்திரையிலுள்ளார்கள்' என்று. இக்கனவு நனவானதும் யூசுப் நபி சொன்னார்கள்:

وَقَالَ يَآبَتِ هٰذَا تَاْوِيْلُ رُءْيَاى مِنْ قَبْلُ قَدْ جَعَلَهَا رَبِّىْ حَقًّا

'முன்னர் நான் கண்ட கனவுக்கு இதுவே தாத்பரியம். என் இறைவன் அதை உண்மையாகச் செய்துவிட்டான்' (அத் 12:100) என்று.

அதாவது இது எண்ண உலகில் தங்கியிருந்தபின், ஜடவுலகில் நனவாகியிருக்கிறது. இது ஒரு மனிதன் தான் கனவில் கண்ட ஒன்றுக்குக் கனவிலேயே விளக்கம் கொடுத்துக் கொள்வதும் விழிப்படைந்ததும் அக்கனவுக்குத் தான் இன்னபடி என்று (கனவிலேயே) வியாக்கியானம் செய்துள்ளதாகவும், இறைவன் அதைப் புலன்களின் உலகில் தரிபட வைத்துள்ளான் என்றும் சொல்வது போன்றதாம். ஆனால், நபிபெருமானார் இவ்வுலகை கனவு என்றும் மறு உலகை யதார்த்தமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இது எவ்வாறு உண்மை என்பதை இங்கே விளக்குகிறேன்.

உலகம் என்ற பெயராலோ, அல்லாஹ்வின் மற்றதான தன்மை (ஙைர்) என்ற பெயராலோ அழைக்கப்படும் எதற்கும் இறைவனோடு உள்ள தொடர்பு, நிழலுக்கும் அசலுக்கும் உள்ள தொடர்பு போன்றதாகும். அது இறைவனுடைய பிரதிபிம்பம் ஆகும். இந்தப் பிரதிபிம்பம் (வித்தில் விருட்சம் மறைந்துள்ளதுபோல்) மறைவானதாகவும், இருக்கலாம், நேரடியாகச் செயல்படுவதாகவும் இருக்கலாம். இந்தப் பிரதிபிம்பம் இறைவனின் ஒளியின் நிழலாகும். அது



www.sufimanzil.org

சாத்தியமான ஜீவிதத்தின் யதார்த்தங்கள் மீதான தெய்வ ஜீவிதமாகும். தூரத்திலுள்ள ஒரு மலை இருண்டதாகத் தெரிகிறது.

ஆனால் உண்மையிலோ அவ்வாறில்லை, தூரம் காரணமாக அவ்விதம் தோன்றுகிறது. இதுபொல் தூரம் காணரமாக வானம் நீலமாகத் தெரிகிறது. நமது யதார்த்தங்கள் (அஃயான்கள்) தமது சூனியமான நிலை காரணமாக ஒளி பெற்றிருக்கவில்லை. அவை தெய்வ அறிவில் தரிபட்டவையாயினும், தமக்குச்சொந்தமான ஜீவிதம் அவற்றுக்கு இல்லை. ஜீவிதம் என்பதே வெளிச்சம்தான். இறைவன் சொன்னான்,

اَلَمْ تَرَ اِلٰى رَبِّكَ كَيْفَ مَدَّ الظِّلَّ ۚ

'உங்கள் இறைவன் தன் நிழலை எவ்வாறு நீளச் செய்கிறான் என்பதை நீங்கள் காணவில்லையா?'(அத் 25:45) என்று.

'அவன் நாடினால் அதை அவன் அசைவற்றதாக ஆக்கிவிட்டிருப்பான்' (அதே வசனம்) என்றும் அவன் தெரிவிக்கிறான். அதாவது அதைத் தன் உள்ளமையுள் மறைத்திருப்பான், என்றாவது, இவ்வாறு நீங்கள் காண்பவை யாவும் அஃயான்கள்தாம், (இறைவன் அறிவில் பொருள்களின் யதார்த்தமாய் இருப்பவைதாம்.) அவற்றின் மீது, இறைவனின் ஜீவிதம் பரந்துள்ளது. ஜீவிதம் சம்பந்தப்பட்டவரை அது அவனுடைய ஜீவிதமாகும். உருவங்கள் சம்பந்தப்பட்டவரை அவை அஃயான்கள் ஆகும். ஜீவிதம் சம்பந்தப்பட்டவரை அவை பிரதி பிம்பங்களாகும். உருவங்கள் சம்பந்தப்பட்டவரை அவை உலகம் - அல்லாஹ்வை அன்றியுள்ளது ஆகும்.

இவ்வாறு உலகுக்குத் தன் சொந்தமான ஜீவிதம் கிடையாது. இறைவன் மீது அது அதிகப்படியானதன்று. அவனுக்குப் புறம்பானது என்ற முறையில் அது விசித்திரமானதுதான். நிழல் அதற்கு உரியவனை விட்டுத் தனியாய் நிற்பதெங்கே? இறைவன் சிற்றண்டமாகவும், பேரண்டமாகவும் பரிசுத்தமானவனாகவும், அதிகப் பரிசுத்தமானவனாகவும் விளங்குகின்றான்.

பாட்டில் எந்த நிறத்திலுள்ளதோ அதே நிறத்தில் வெளிச்சம் அதில் தோற்றமளிக்கிறது. அதற்குத் தன் சொந்தமானதுமில்லை. புலப்படும் வெளிச்சம் பாட்டில் கண்ணாடியின் பிரதிபிம்பமே. தன் இதயத்தைப் பரிசுத்தமாக்குபவனகத்தே இறைவனுடைய உதிப்புகள் ஏராளமாகவும், தெளிவாகவும் இருக்கும். இவ்வாறு நம்மிடை இறைவனைக் கண்ணாகவும் பார்வையாகவும் கொண்டவர்கள் உண்டு.

இறைவனின் தஜல்லி (சுடரொளி) பாயும் அவர்களுடைய 'அஃயான்'(யதார்த்தம்) அதனால் சற்றும் பாதிக்கப்படாமல் இருக்கிறது. 'அவன் கேள்வியாகவும், அவன் பார்வையாகவும் ஆகிவிடுகிறேன்' என்று இறைவனே அருளியுள்ளானன்றோ! இத்தகைய அடியான் மற்ற அடியார்களை விட இறைவனுக்கு நெருக்கமானவனாக ஆகிவிடுகிறான்.

இவ்வாறு நீயும், உன் உணர்வுகளும் வெறும் எண்ணங்களே, உலகம் எண்ணத்துள் எண்ணமாகும். இறைவனின் உள்ளமை (தாத்து) சம்பந்தப்பட்டவரை ஜீவிதமே இறைவன்தான்.

ஏனெனில், அது அதன் யதார்த்தமான தாத்தையே சுட்டிக் காட்டுகிறது. அவனுடைய அஸ்மாக்கள் சம்பந்தப்பட்டவரையோ அது முற்றும் 'தாத்' அல்ல, அஸ்மாக்கள் பல, வேறுபாடானவை, ஒன்றுடன் ஒன்று எதிரிடையானவையும் கூட (உதாரணம்: ளாகிர் வெளிப்படையானவன் பாத்தின் (அகமியமானவன்) அவ்வல் ((முதலானவன்) ஆகிர் (இறுதியானவன்). பெயரிடப்பட்டவன் சம்பந்தப்பட்டவரை ஒரு திருநாமம் மற்றொன்றைப் போன்றதே. இதுவே சத்தியம். நினைவு சம்பந்தப்பட்டவரை ஒன்று மற்றதின் ;ஙைர்' (மற்றதான தன்மை) ஆகும்.

இவ்வாறு இறைவனுடைய 'தாத்து' (உள்ளமை) மகா புனிதமானது. மகா பரிசுத்தமானது. அவன் ஜீவிதம் அவன் உள்ளமையே. அதுவே ஏகத்துவம். நினைவில் இருப்பது எதுவோ அது பன்மையாகும். இதில் தன்னை தரிபடுத்துபவன் உலகைச் சேர்ந்தவனாவான்.

முன்னதில் தன்னை தரிபடுத்துபவன் இவ்வுலகின் தேவையற்றவனாக இறைவனுக்கு அருகில் ஆகிவிடுவான். ஆனால், இறைவனுடைய அம்சங்கள் (அஸ்மாக்கள்) சம்பந்தப்பட்டவரை அவன் அவனுக்கு அருகிலாக மாட்டான். ஏனெனில், தன் அஸ்மாக்களை விட்டும் இறைவன் தேவையற்றவன். இறைவன் தன் 'தாத்து' சம்பந்தப்பட்டவரை தனித்தவன்,

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ‌ۚ اَللّٰهُ الصَّمَدُ‌ۚ لَمْ يَلِدْ وَلَمْ يُوْلَدْ ۙ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ

நபியே சொல்வீராக! அல்லாஹ் ஒருவன், அவன் தேவையற்றவன், அவன் பெறுவதுமில்லை, பெறப்படுவதுமில்லை. அவன் ஒப்புவமை அற்றவன் (அத் 112:1-4)

இவ்வாறு அவன் 'தாத்து' ஒன்றே. அவன் கல்யாண குணங்கள் பலவாம்.அவன் தாத்து நம்முடைய தேவையற்றதான நிலையில் அதற்குப் பரிபூரண ஏகமானது' என்று பெயர். அது கல்யாண குணங்களையும் திருநாமங்களையும் வெளியாக்கும்போது பன்மையிடை ஒருமையுடையதாக விளங்குகிறது. இவ்விரண்டு அம்சங்களும் 'அஹது' என்ற பெயரால் பொதியப்பட்டுள்ளன. நமதுஅ:யான்கள் அவனுடைய நிழல் அல்லது அவன்மீது பிரதிபலிக்கும் ஒளி. ஜீவிதம் சம்பந்தப்பட்டவரை அவனே நம் எதார்த்தம். வரம்புகள் சம்பந்தப்பட்டவரை அவந் மநது யதார்த்தமல்லன்.

**விளக்க உரை:** இந்த அத்தியாயம் 'ஹிக்மத்தே நூரிய்யா' ஒளியின் அறிவு பற்றி விளக்குகிறது. முன் அத்தியாயத்தில் விபரித்தபடி மனிதன் சன்மார்க்க நெறிமுறைகளின் படியான வணக்கங்களில் பூணிப்புடன் ஈடுபட்டதும் சூக்கும உலகின் வெளிச்சமும், அதன் விந்தைகளும் அவனுக்கு உதயமாகும். யூசுப் நபி அவர்கள் இந்த நிலையை அடைந்திருந்தார்கள். இதன் மர்மங்கள் அவர்களுக்கு விளங்கியபடியால் கனவுகளின் தாத்பரியங்களை அவர்கள் விளக்க முடிந்தது. (கனவுகள் எண்ண உலகின் பிரதிபிம்பம்தானே!)

இறைவனைத் தவிர்த்துள்ள மற்றயாவும் (மாஸிவல்லாஹ்) இறைவனுடைய ஒளியின் பிரதிபிம்பம்தான். 'வெளிச்சம் பொருள்களைக் கண்டறிகிறது. பொருள்கள் வெளிச்சத்தைக்

கண்டறியவில்லை.' யாவும் வெளிச்சத்தினால் ஆனவைதாம். சில வெளிப்பாடுகள் - தனஜ்ஜுலாத்துகள் மற்றவற்றை விட ஒளியுடன் விளங்கும். உதாரணமாக, ஆத்மீக சூக்கும உலகைவிட ஒளியுள்ளதாயும், சூக்கும உலகு ஜடதத்துவ உலகை விட ஒளியுடையதாகவும் இருக்கின்றன. ஜடதத்துவ உலகிலுள்ளவர்கள் சில சமயங்களில் தமது உண்மையான கனவுகளில் பூத உடலால் உண்டாகுபவைகளில் அன்று., சூக்கும உலகு சம்பந்தப்பட்டவற்றைக் காண்கின்றனர்.

உண்மைக் கனவுகளில் காணப்படும் காட்சிகள் ஒன்று அவற்றின் யதார்த்தமான நிலையில் இருக்கும். அல்லது விளக்கம் தேவைப்படும் விளங்காத நிலையில் இருக்கும். அவை கனவு காண்பவரின் சித்தத்தால் உண்டானவையாகவோ, கனவு காணப்படுவதன் சித்தத்தால் உண்டானதாகவோ அல்லது இரண்டும் சேர்ந்து உண்டானதாகவோ இருக்கலாம். நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தோன்றியது இவ்வாறுதான். இரண்டின் சித்தமும் இல்லாமல் உண்டாகும் கனவும் உண்டு. யூசுப் நபி தங்கள் சகோதரர்கள் ,தந்தையார் பற்றிக் கனவு கண்டது இத்தகையது.

இவ்வுலகம் இறைவனுடைய ஒளியின் பிரதிபிம்பம்தான். ஒளி (நூர்) இறைவனுடைய பெயர்களுள் ஒன்றாகும்.

اَللّٰهُ نُوْرُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ

'அல்லாஹ் வானங்களுடையவும், பூமியுடையவும் ஒளி ஆவான்' (அத் 24:35)

உள்ளமையின் (தாத்தின் ஒளி இறைவனுடைய எண்ணத்திலுண்டான படிவங்கள் மீது சுடர் வீசி, அப்படிவங்களுக்கேற்ற முறையில் தன்னை வெளியாக்கிக் காட்டிற்று. இவ்வாறு அது புற ஜீவிதமுடையதாயிற்று.

மெய்ஞ்ஞானிகள் விவரிக்கும் முதல் நான்கு வெளிப்பாடுகளான இல்மு (அறிவு), நூர்(ஒளி), உஜூது (ஜீவிதம்), ஷுஹூது (நோட்டம்) ஆகிய ஒன்று மற்றொன்றின் இடத்துக்கு மாறக்கூடியதாய் இருந்தது. தன்னில் ஸிபத்துகளை மறைத்துக் கொண்ள்ள தாத்தை ஷைகுல் அக்பர் வித்தில் மரம் மறைந்திருப்பதற்கு உவமையாகக் காட்டுகிறார்கள். அதுவே பரிசுத்த தாத்து ஆகும்.

பின்னர் அந்த தாத்தில் கல்யாண குணங்கள் தோற்றப்படலாயின. சம்பூரணத்துக்கு உரியவையான இக்கல்யாண குணங்களுடன் கூடிய தாத்துதான் அல்லாஹ் எனப்பட்டது. கல்யாண குணங்கள் (சிபத்துகள்) திருநாமங்களுக்கு (அஸ்மாக்களுக்கு) இடம் உண்டாக்கித் தந்தன. அஸ்மாக்களுள் சில (சிருஷ்டியாளன், விதிப்பவன் என்பது போன்று) நிபந்தனைக்கு உட்பட்டவை. வேறு சில (புனிதமானவன், பரிசுத்தமானவன் என்பது போன்று) நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்டவை.

முதல் வகை அஸ்மாக்கள் ரப்பு (ரட்சகன்) ஆகும். இவற்றுக்கு 'மர்பூப்' (ரட்சிக்கப்படுபவை) தேவை. ரட்சிக்கப்படுபவையின்றி இவற்றின் வேலைகள் வெளிப்பட முடியாது. எனவே, தமக்கு இணைந்த உருவங்களை இவை உண்டாக்குகின்றன. இவ்வுருவங்கள் எண்ணத்தில் மட்டும் உள்ளவையே, 'அவை ஜீவிதத்தின் வாசனையை முகர்ந்துபாராதவை' பந்தா (கட்டுப்பட்டவை) என்ற இப்படிவங்களில் இந்த அர்பாப்கள் (ரப்பின் பன்மை) தம்மை வெளியாக்கிக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பந்தா தானாக உள்ள நிலையில் ஒன்றுமில்லாததாகும்.

'நிச்சயமாக நீரும் மரணிப்பவரே, அவர்களும் மரணிப்பவர்களே' (அத் 38:30) என்று திருமறை கூறுகிறது.

அர்ஷின் ஸ்தானத்திற்கு கீழே அல்லாஹ்வின் அஸ்மாக்கள் மட்டுமெ புறத்தே வெளிப்பாடுடையவையாக இருக்கின்றன. ஜீவிதத்தின் இப்பகுதி 'தஷ்பீஹ்' எனப்படும்.

அர்ஷுக்கு மேலேயுள்ள ஜீவிதம் 'தன்ஸீஹ்' எனப்படும். ஆனால், அர்ஷுக்குக் கீழே தஷ்பீஹில் தன்ஸீஹும், தன்ஸீஹில் தஷ்பீஹும் உண்டு.

காரணம், எந்த தாத்திலிருந்து ஸிபத்துகள் வெளியாகின்றனவோ, அது இன்றி அந்த ஸிபத்துகள் இல்லையன்றோ! தன்னில் ஊடாடியுள்ள தண்ணீர் இல்லாமல் பனிக்கட்டி ஏது? இவ்வாறு எண்ணப்படிவங்கள் சம்பந்தப்பட்டவரை உலகம் வெறும் கற்பனையானதாகவும், ஸிபத்தின் வெளிப்பாடுகள் சம்பந்தப்பட்டவரை அவை யதார்த்தமானவையாகவும் இருக்கின்றன. சிபத்துகள் தாத்தைப் போன்று யதார்த்தமானவை, சில சமயம் அவை தாத்தில் மறைந்துள்ளன.

மறைவான உலகினுள் பார்வையைச் செலுத்தக் கூடிய இஸ்லாமிய மெய்ஞ்ஞா விளக்கம் வேறு எந்த பழைய புதிய தத்துவ விளக்கங்களிலும் காணக் கிடைக்காததாகும்.

## அத்தியாயம் 10

## ஹூத் நபியின் ஞானம்

مَا مِنْ دَآبَّةٍ اِلَّا هُوَ اٰخِذٌ ۢبِنَاصِيَتِهَا ؕ اِنَّ رَبِّىْ عَلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ

'சகல ஜீவராசிகளின் குடுமியும் ரப்பிடமே உள்ளது, நிச்சயமாக எனது ரட்சகன் நேரான பாதையிலுள்ளான்' (அத் 11:56).

இவ்வாறு (நேரிய) பாதையில் நடப்பவன் ஒவ்வொருவனும் நிந்திக்கப்பட்டவனுமல்லன், வழிதவளியவனுமல்லன். இறைவனுடைய கண்டனமும் கோபமும் தாற்காலிகமானவை. கடைசியில் அவன் கருணையே யாவையும் பொதிந்து நிற்கிறது. அல்லாஹ்வை

அன்றியுள்ளவை (மாஸிவல்லாஹ்) தங்கள் இச்சைப்படி அசைய முடியாதவை, நேர் பாதையிலுள்ள தமது ரப்புக்கு வழிபட்டே நடப்பவை.

'இல்மெ-தெளக்கி' (இறைவனுடைய சுடர் வெளிப்பாடுகளை நோட்டமிடுவது கொண்டு அவனைப் பற்றிக் கிட்டும் மெய்ஞ்ஞானம்) பல்வேறு மனிதர்களில் பல்வேறு வகைப்பட்டவனாக இருக்கின்றன. அவர்கள் யாவருடைய மூலஸ்தானமும் ஒன்றாய் இருந்தும் அவரவர் இயல்புக்கு ஏற்ப அவை வேறுபடுகின்றன. அவன் கேட்கும் கேள்வியாகவும், அவன் பார்க்கும் பார்வையாகவும் நான் ஆகிவிடுகிறேன்' என்று இறைவனே அருளியுள்ளானல்லவா! இதிலிருந்து இறைவனுடைய 'நான்-தன்மை' தான் அடியானின் அவயங்களில் நின்று நிலவுகிறது. ஒவ்வொரு அங்கத்துக்கும் அதற்கே உரிய 'இல்மெ-தெளக்கி' உண்டு என்பதும் தெளிவாகிறதன்றோ!

இவ்வாறு 'நான்-தன்மை' ஒன்று, அங்கங்கள் பல. அவற்றின் உணர்வுகள் எண்ணற்றவை. இது தண்ணீர் ஒன்றாயும் அதன் ருசி மண்ணுக்கேற்பப் பலவாயும் இருப்பது போன்றதாகும். இது மெய்ஞ்ஞானப் பயிற்சி மூலம் 'சுலூக்' மூலம் கிடைப்பதாகும். 'சுலூக்' என்றால் நடப்பது என்று நேரடியான பொருள். இது ஆத்மாவுக்கு உணவை ஊட்டுகிறது.

'பாவாத்மாக்களை நாம் துரத்துவோம்' என்று இறைவன் கூறியுள்ளான். மேற்குக் காற்றைக் கொண்டு பாவாத்மாக்கள் சேரவேண்டிய இடத்தில் அவர்களைச் சேர்ப்பான் என்பது இதன் பொருளாகும். மேற்குக் காற்று என்பது அழிவை உண்டாக்கும் காற்றாகும். நபி பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள், 'கிழக்குக் காற்றால் நான் வளம் பெற்றேன். மேற்குக் காற்றால் ஆது கூட்டத்தினர் நாசமாக்கப்பட்டனர்' என்று. மேற்குக் காற்று என்பது பாவத்தின் சின்னமாகும். இறைவன் பாவாத்மாக்களையும், அவர்களுடைய இம்மையின் இச்சாபாசங்களையும், குடுமியைப் பிடித்துத் தூக்கி ஜஹன்னம் என்ற நரகில் வீசுவான். இந்த ஜஹன்னம் என்பது இறைவனுக்கு நேர் மறு துரவத்தில் அத்துணை தூரத்தில் உள்ளது.

ஆனால், அங்கே அவர்கள் இறைவனுடைய அண்மையை அடைந்து விட்டனர். அவர்கள் தங்கள் செயல்கள் காரணமாக அவர்களுடைய ரப்பினால் அங்கே வழிநடத்தப்பட்டனர். இவ்வாறு அவர்கள் தங்கள் ரப்பின் நேர் பாதையிலுள்ளனர். அவர்கள் அங்கே தங்கள் இச்சையாகப் போகவில்லை. அவனால் குடுமியைப் பிடித்துத் தள்ளப்பட்டனர். இவ்வாறு குடுமி அவன் கையில் போனதன் மூலம் அவனுக்கு அருகாமையில் ஆகிவிட்டனர். இறைவன் சொல்கிறான்,

وَنَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْكُمْ وَلٰكِنْ لَّا تُبْصِرُوْنَ

'(காலமானவர்களுக்கு) உங்களை விட நாம் மிக அருகிலுள்ளோம். ஆனால், நீங்கள் காணவில்லை' (அத் 56:85) என்று.

மரணித்தவன் திரை அகற்றப்பட்ட காரணத்தால் பார்க்கிறான். இதில் நேர்மையாளர்கள், தீயவர்கள் என்ற பாகுபாடு காட்டப்படுவதில்லை. இறைவனுடைய 'இருக்கிறான் - தன்மை' அடியானின் சகல அவயங்களிலம் ஊடுருவுகிறது. அதன் யதார்த்தமாக ஆகி விடுகிறது. இவ்வாறு அடியான் ரப்பு ஆகவும், இறைவன் கற்பனை உலகில் உணரக்கூடியவனாகவும் உள்ளனர். 'இறைவன் என்பது உணரக்கூடியதாயும் உலகம் என்பது உண்டென்று கற்பிக்கக் கூடியதாயும் உள்ளன'.

மெய் விசுவாசிகளும், ஞானதிருஷ்டியுள்ளவர்களும் இவ்வுலகிலேயே அவனை நோட்டமிடுகின்றனர். இதற்குப் புறம்பே உள்ளவர்கள் இறைவன் இன்னபடியுள்ளான் என்று திட்டப்படுத்திக் கொள்வர். உலகை இவர்கள் நோட்டமிடுபவர். இதற்கு வெளியிலுள்ளவர்கள் இறைவன் இன்னபடியானவன் ஊகமும், உலகம் இன்னபடியானது என்ற நேரடி நோட்டமும் அடைவர்.

எனினும், இறைவன் தன் நப்ஸையே தன்னுடைய 'கைர்' (அன்னியமான தன்மை) என்றும், சில செயல்களை தீயவை, விலக்கப்பட்டவை என்றும் கூறியுள்ளான். 'கைர்' (அன்னியம்) ஆக தோற்றமாகும் புறத்தோற்றங்களின் பயனாகவே தீய செயல்கள் உண்டாகின்றன. பொருள்களின் யதார்த்தம் இறைவனாவான். நாம் அவற்றின் புறத் தோற்றங்கள் ஆவோம். 'கைர்' (அன்னியம்) ஆன தன்மை சொல்கிறது, 'கேள்வி ஜைதினுடையது' என்று. மெய்ஞ்ஞானி சொல்கிறார் அது இறைவனுடையது என்று. கேள்வி, பேச்சுப் போன்ற மற்ற சக்திகளின் விஷயத்திலும் உண்மையாகும்.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தொட்டு முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரையுள்ள நபிமார்களின் அஃயான்களின் யதார்த்தங்களை அல்லாஹுத்தஆலா எனக்கு உணர்த்தியபோது நான் குர்துபாவில் இருந்தேன். அது ஹிஜ்ரி 586. குழுமியிருந்த நபிமார்களில் ஹூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தான் என்னிடம் பேசினார்கள். அந்தக் கூட்டம் கூட்டப்பட்ட நோக்கத்தைத எனக்கு எடுத்தியம்பினார்கள். (ஷைகுல் அக்பரின் மாபெரும் கிரந்தமான 'புத்தூஹாத்துல் மக்கிய்யா'வில் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டதன் நோக்கம் இவர்கள் விலாயெத்தெ முஹம்மதிய்யா என்ற தெய்வநேயத்தின் கடைசி ஒலியாக நியமிக்கப்பட்டதை அறிவிப்பதற்காகவே என்று தெரிவித்துள்ளார்கள்.)

அவர்கள் சிறந்த அறிவாளியாகவும், அழகு மிக்கவர்களாகவும் இருந்தார்கள். இனிய பேச்சுடையவர்கள் சிறந்த மெய்ஞ்ஞானி. அவர்கள் சிறந்த மெய்ஞ்ஞானி என்ற என் முடிவுக்கு இந்த அத்தியாயத்தின் தலைப்பிலுள்ள திருக்குர்ஆன் வசனமே காரணமாகும். சகல ஜீவராசிகளின் குடுமியும் ரப்பிடமே உள்ளது. என் ரப்பு நேரான பாதையிலுள்ளான்' திருமறை மூலம் நமக்கு வந்துள்ள இதை விட வேறு சிறந்த செய்தி வேறு எதுவும் இருக்க முடியாது. இதற்கான விளக்கம், 'இறைவன் காதுகள், கண்கள், பாதங்கள், நாவு ஆகியவற்றின் யதார்த்தமானவன்' என்பதில் இருக்கிறது. அதாவது அவன் தன் அடியானின் உடல், ஆத்மீகப் புலன்களின் யதார்த்தமாய் உள்ளான்.

'நிராகரிக்கும் காபிர்களையன்றி என் அத்தாட்சிகளை மறுப்பவர்கள் யாருமில்லை' (அத் 29:17)

தன்ஸீஹாயினும், தஷ்பீஹிலாயினும் சகல அடையாளங்களும் இறைவனைக் குறிப்பவையாகவே உள்ளன.

வரம்பற்றதின் முதல் குறிப்பு: வரம்பு 'அமா' எனப்படும். மேலேயும் கீழேயும் காற்று இல்லாத ஒரு மேகம் போன்றது இது. சிருஷ்டிகளைச் சிருஷ்டிக்குமன் இறைவன் இதிலிருந்தான். இரண்டாவது குறிப்பு அர்ஷ்(விதானம்) ஆகும். பின்னர் வானிலும் பூமியிலும் அவன் இறங்கியதாகச் சொல்லப்படுகிறது. நம் அனைவருடைய யதார்த்தமும் அவனாகவே இருக்கிறான் என்றும் சொல்லப்பட்டுள்ளது. 'அவன் எந்தப் பொருளுடைய மாதிரியிலும் இல்லை' என்ற திருமறை வசனப்படி அவன் சகலவற்றின் எதார்த்தமாகவே இருக்கிறான். அவன் இப்படியில்லாவிட்டால் எந்தப் பொருளும் ஜீவித்திருக்க முடியாது. இவ்வுலகிலுள்ள யாவும் அவன் வதனமாகும். பார்ப்பவனும் பார்க்கப்படுபவனும் அவனே, உலகின் ஆத்மா அவனே! இறைவனுடைய பார்வை கொண்டு தன்னில் அவனைக் காண்பவர் மெய்ஞ்ஞானி ஆவார். நியாயத் தீர்ப்பு நாளில் தன் கண்களால் அவனைக் கண்டு கொள்ளலாம் என்று எதிர்பார்ப்பவன் ஜாஹில்(அறிவிலி) ஆவான். தன்னை வணங்குபவர்களுக்கு இறைவன் அவர்களுடைய நம்பிக்கையின் உருவில் வெளிப்படுகிறான்.

ஆனால், நீங்கள் எந்த உருவிலும் அவனைக் கட்டுப்படுத்தக் கூடாது. சகல வரம்புகளுக்கும் அவன் அப்பாற்பட்டவன். எனவே,

فَاَيْنَمَا تُوَلُّوْا فَثَمَّ وَجْهُ اللّٰهِ

'நீங்கள் எங்கே திரும்பினாலும் அங்கே இறைவனுடைய வதனம் இருக்கிறது'(அத்2:115)

என்பதால் வதனம் என்பது அவனுடைய தாத்தைக் குறிக்கிறது. அதுவே அவனடைய யதார்த்தம். யாவிலும் எங்கும் இருப்பது அதுவே. எனவே, இந்தக் குறகிய காலவாழ்வில் இந்த யதார்த்தத்தை நோட்டமிடத் தவற வேண்டாம் என்று அவன் மெய்ஞ்ஞானிகளை எச்சரிக்கிறான். தன் உயிர் எப்போது பிரியும் என்பதை அடியான் அறியமாட்டானன்றோ! இவ்வாறு நோட்டமிட்டவாறு மறைபவன், அவ்வாறு நோட்டமிடாது மறைபவனைவிட முற்றும் வேறுபட்டவனாவான்.

இறைவனுடைய அடியார்கள் தங்கள் தொழுகையில் புனித மஸ்ஜிதுல் ஹறாமை நோக்கித் திரும்பி நிற்கின்றனர். இதிலும் இறைவனுடைய அம்சம் ஒன்று உண்டு. அதனுள் அவனை அவர்கள் கட்டுப்படுத்தவில்லை. அந்தத் திசைக்கு உய்த்துணரல் காரணமாக மரியாதை காட்டுகின்றனர்.

இவ்வாறு யாவரும் நேரான பாதையிலுள்ளனர். இதிலுள்ளவர்கள் வெகுமதியை அடைந்து கொள்வர். வெகுமதியை அடைபவர்கள் பாக்கியசாலிகள் ஆவர். அவர்களுள் சிலருகு;கு முதலில் சிறிது காலம் இது நிறுத்தி வைக்கப்பட்டுப் பின்னர் கிட்டுவதுண்டு. இவ்வாறு நல்ல

மனிதரும்சிறிது நேரம் ஜஹன்னத்தில் தங்குவதுண்டு. அங்கும் அவருக்கு ஆஸ்வாசமுண்டு. அவர் நிலைமை இன்பமானதாக ஆனதும் அவருடைய வேதனைகள் மறைந்து விடுகின்றன. அல்லாஹ்வே நன்கு அறிந்தவன்.

**விளக்கக் குறிப்பு:** இந்த அத்தியாயத்தில் ஷைகுல் அக்பர் அவர்கள் 'தௌஹீதே அஸ்மாயிய்யா(அஸ்மாக்களிலுள்ள ஏகத்துவம்) என்பது பற்றி விவரித்துள்ளார்கள். அஸ்மாக்கள் பன்மையானவனாயினும் தாத்து ஒன்றே. அதாவது, இறைவனையன்றி வேறு யாரும் ஜீவிதத்துடனே இல்லை என்பதே இதன் பொருளாகும்.

ஹூது அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தலையாய பிரச்சாரம் பற்றி இதில் குறிப்பிட்டு பேசப்பட்டுள்ளது. அதாவது, தன் குடமி தன் ரப்பின் கையில் இல்லாத நிலையிலுள்ள சிருஷ்டிப் பொருள் எதுவுமில்லை. இறைவன் தன்னைப் பல்வேறு வகைகளான அம்சங்களில் வெளிப்படுத்திக் காட்டுகிறான் என்ற உபதேசமாகும். ஒவ்வொரு அம்சமும் இறைவனின் ஒரு இஸ்மு ஆகும்.

அது குறித்த இயல்பின் ரப்பு ஆகவும் விளங்குகிறது. அந்த ரப்பு தன் ஆட்சிக்கு உட்பட்ட அந்த மர்பூபின் குடுமியைத் தன் கையில் வைத்துள்ளது. இதே மர்பூப் அந்த ரப்பினால் ஒப்புக் கொள்ளப்பட்டதாகும். இந்த ரப்பு நேரிய பாதையிலுள்ளான்.(அலா சிராத்தில் முஸ்தகீம்) ஆனால், இவற்றில் (ரப்பில்) ஒன்று மற்றதற்கு முரணானதாக இருக்கலாம். 'முத்தகிம்' (பழிவாங்குவோன்) என்ற ரப்பின் மர்பூப் பழிவாங்கும் செயலைச் செய்யும் இந்த ரப்பு கபூர் (மன்னிப்போன்) என்ற ரப்பின் மாற்றமான தன்மையுடையதாக இருக்கிறதன்றோ! இவை இரண்டுமே கடைசியில் ரப்புல் அர்பாப்(ரப்புகளின் ரப்பு) ஆன அல்லாஹ்வில் சங்கமமாகி விடுகின்றன.

ஷைகுல் அக்பர் சொல்வதை இவ்வாறு தொகுக்கலாம். உலகை சிருஷ்டிக்குமன் அல்லாஹ் 'அமா'வில் இருந்தான். இது முதல் வரம்பு அல்லது முதல் குறிப்பு எனப்படும். தாத்து என்ற பெயர் அல்லாஹ்வின் உள்ளமைக்கு (யதார்த்தத்துக்கு) கொடுக்கப்பட்ட பெயராகும். 'தனஸ்ஸுலாத்' என்ற இறக்கத்தில் தாத்து அஃயான்களை வெளியிடுகிறது. அவற்றுக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பு, அவற்றுக்கு ஒன்றுடன் ஒன்றுக்கு உள்ள தொடர்பும் வெளியாகின்றன. இந்தத் தொடர்புகளினதும் அடையாளங்களினதும் கூட்டினால் உண்டானது இவ்வுலகு.

'உரூஜ்' என்னும் ஏற்றத்தில் இந்த அடையாளங்கள் மறைந்து விடுகின்றன. கன்ஜுல் மக்பி (மறைவான பொக்கிஷம்) ஆன நிலையிலிருந்து இறைவன் அமாவின் நிலைக்கு வந்தான். இந்த மறைவான பொக்கிஷத்தில் உலகின் யதார்த்தங்களும் (அஃயான்கள்) மறைந்திருந்தன. இந்த யதார்த்தங்கள் தாங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று தாத்திடம் பிரார்த்தித்தன.

தாத்து தன்மீது தான் கொண்ட பிரியத்தால் அவற்றின் வேண்டுதலை ஏற்றது. தன் ஜீவிதத்தை இந்த அஃயான்கள் மீது விரித்து, அன்பின் மருவுதலான மூச்சை ஊதிற்று. இதுவே முதல் தஜல்லி எனப்பட்டது. அண்ட சாசரங்கள் மீதும் தாத்து கொண்ட பெருங்கருணையை இது

காட்டியதால் இதற்கு 'ரஹ்மான்' (அளவற்ற கருணையாளன், கேட்கப்பட்டது என்பதற்காகக் கொடுப்பவன்) என்ற பெயர் உண்டாயிற்று.

தாத்தின் மூச்சு ஊதப்பட்டது சகல சம்பவங்களுக்கும் அடிப்படையானது ' உலகின் நிகழ்ச்சிகள் யாவுக்கும் இது தாயானது. இரண்டாவது தஜல்லியிலே சிபத்துகள் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளலாயின. மூன்றாவது தஜல்லியிலே அஸ்மாக்கள் தலை தூக்கின. நிபந்தனைக்கு உட்பட்ட அஸ்மாக்கள் தாங்கள் வெளிப்படத் தங்களுகு;கு எதிரானவற்றை அடையவேண்டியதாய் இருந்தது. இவ்வாறு அவை ரப்பு ஆகவும், அவை நிலைபெற உதவியவை மர்பூப் ஆகவும் விளங்கின.

'ஒவ்வொரு ரப்பும் தன் மர்பூபின் குடுமியைத் தன் கையில் வைத்துள்ளது. அதை இழுத்துப் பாதையில் நிதானமாகச் செல்ல வைக்கிறது' என்று ஷைகுல் அக்பர் இந்த அத்தியாயத்திலுள்ள திருமறை வசனத்தை வைத்து வியாக்கியானம் செய்கிறார்கள்.

சுலூக் இரண்டு வகைப்படும். முறைப்படியானது, ஆத்மீகமானது. முந்தியது சடங்குகள் சம்பிரதாயங்களை அனுஷ்டித்தல், பிந்தியது தாத்தின் ஏகத்துவத்தையும் அந்த தாத்தின் அம்சங்களான அஸ்மாக்களின் ஏகத்துவத்தையும்,அதன் அப்ஆல்கள் என்ற செயல்பளின் நடைமுறையையும் உய்த்துணரும் முயற்சியாகும்.

அதாவது, தனி நபர்களுடைய செயல்கள் அவற்றுக்கு இறைவனையே தலையாய மூலஸ்தனமாகக் கொண்டுள்ளன என்பதைக் காண்பதாம். இதனால் தன்னை பனா (நாஸ்தி) ஆக்கி, பகாவில் (நித்தியத்துவத்தில்) வெளியாவதாம்.

முறைப்படியான (முதல்வகை) சுலூக்கை இல்முல் அர்ஜுல்(நடக்கும் கலை)என்றும், ஆத்மீகமானதை (இரண்டாவது வகையை) தௌக்கு (பரவசத்தால் உண்டாகும் ஞானம்) என்றும் ஷைகுல் அக்பர் அழைக்கிறார்கள். இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்தியம்பிவிட்டு முந்தியதும் பிந்தியதைப் போன்ற லட்சியமே உடையது என்று விளக்குகிறார்கள்.

ஆது கூட்டத்தினர் இறைவனின் 'கைர்'(மற்றது) ஆன தன்மையை விசுவாசித்தனர். அவர்கள் மேற்கத்தியக் காற்றால் அழிக்கப்பட்டனர். தங்கள் நப்ஸ் காரணமாக மேற்கத்தியக் காற்றால் துரத்தப்பட்டவர்களின் உடலும் அது போன்றே சின்னாபின்னமாயிற்று. அதாவது, அவர்கள் தங்கள் நப்ஸினால் இறைவனை விட்டு நேர்எதிர் திசையிலுள்ள ஜஹன்னம் என்ற பாழ் நரகுக்கு விரட்டப்பட்டு விட்டனர்.

## அத்தியாயம் 11

## ஸாலிஹ் நபியின் ஞானம்

பிராணிகளில் சவாரி செய்வது நபிமார்கள் சிலருடைய அற்புதமாகும். (பிராணிகளிடையுள்ள) இன வேற்றுமை அவற்றின் பாதை (சுலூக்கின் பாதை)யால் உண்டாவதுதான்.

(சன்மார்க்கத்தைப்) பின்பற்றுவோர் சிலர் இப்பாதைகள் மூலம் சத்தியத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்கின்றனர். இந்த சவாரி மிருகங்களைப் பயன்படுத்தி (உடல் எனும்) இருண்ட சமவெளியில் உழல்கின்றனர்.

இறைவனளவில் ஒட்டிக் கொள்பவர்கள் (இறைவனை) நோட்டமிடுவோர் ஆவர். சமவெளியில் உழல்பவர்கள் திரையிடப்பட்டவர்களாவர். (பாடல்)

வெளிப்பாடு என்னும் விசயம் ஒற்றையைப் பொறுத்ததாயுள்ளது. இந்த ஒற்றையே சத்தியத் தன்மையாகும். ஆரம்பத்தில் ஒற்றையான தன்மை மூன்றாகும். மேலே போகப்போக சத்தியத் தன்மை யாவையும் பொதிந்து கொள்கிறது.

إِنَّمَآ أَمْرُهُۥٓ إِذَآ أَرَادَ شَيْـًٔا أَنْ يَقُولَ لَهُۥ كُنْ فَيَكُونُ

'ஒன்றை நாம் உண்டாக்க நாடும்போது, அதனிடம் 'ஆகுக' என்கிறோம். அது ஆகிவிடுகிறது.' (அத்36:82)

தாத்து ஆனது இவ்வாறு தன் தனித்துவத்தின் நாட்டத்தில் அல்லது தீர்மானத்தில் ஒன்றை ஆகுக என்றதும் அது ஆகிவிடுகிறது. ஒருபொருள் (ஷைஃ)தன் யதார்த்தமான அஃயானின் நிலையில் இருந்து கொண்டு உத்திரவைக் கேட்டதும், அதற்குப் பணிந்து வெளிப்பாடானதாக ஆகிறது. இப்போது அதில் இறைவனின் மூன்று அம்சங்களும் அப் பொருளின் மூன்று அம்சங்களில் வெளிப்பட்டன.

இவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டதன் மூன்று அம்சங்கள் சிருஷ்டியாளனின் மூன்று அம்சங்கள் மூலம் ஸ்திரமாக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று அம்சங்களும் அதுதான் வெளிப்பட வேண்டும் என்ற நாட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை. இந்த இயல்புகள் அதில் இல்லையாயின் அது வெளிப்பாடாயிருக்காது. தோற்றப்பட வேண்டும் என்ற இயல்பு பொருளுடையது.

இறைவன் சம்பந்தப்பட்டது அவனுடைய உத்திரவுதான். எனவே 'நாம் ஒன்றை ஆக்க நாடினால் அதை நோக்கி 'ஆகுக' என்கிறோம். உடனே அது ஆகிவிடுகிறது' என்று இறைவன் அருளியுள்ளான்.

எஜமானன் தன் பணியாளனை 'எழுந்திரு' என்று உத்திரவிடுகிறான். பணியாள் எழுந்து நிற்கிறான். அடியானின் 'எழுந்து நிற்கும்' அம்சத்துக்கும் எஜமானனுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஒரு பொருள் சிருஷ்டிக்கப்பட சிருஷ்டியாளனிடமிருந்து மூன்று விசயங்களும் சிருஷ்டியிடமிருந்து மூன்று விசயங்களும் அவசியமாகும். அக, புற வெளிப்பாடுகளின் யதார்த்தம் சத்தியத்துவம் ஆகும். இதுவே சாலிஹ் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பெற்ற ஞானமாகும்.

அவர்களுடைய கூட்டத்தாருக்கு அவர்களுடைய வாக்குறுதியை நிறைவேற்ற இறைவன் மூன்று நாள் தவணை கொடுத்தான். அதில் தவறினால் அவர்கள் அழிந்து படுவார்கள் என்றும்

அறிவித்தான். முதல் நாள் அவர்களுடைய முகம் வெளிறியது. இரண்டாம் நாள் சிவந்தது. மூன்றாம் நாள் கறுப்பாகியது. பின்னர் அவர்கள் அழிந்து போயினர்.

**விளக்கக் குறிப்பு** : ஸாலிஹ் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பற்றிய விபரம் திருமறையில் பதினோராம் அத்தியாயம் ஆறாம் பிரிவில் தரப்பட்டுள்ளது. தமூது மக்கள் கூட்டத்தினரை நேர்வழிப்படுத்த ஸாலிஹ் நபி அனுப்பப்பட்டார்கள். ஹூத் நபிக்கும் இப்றாஹீம் நபிக்கும் இடைப்பட்ட காலத்தில் இவர்கள் வாழ்ந்திருந்தார்கள். ஒரு மரச்சட்டத்தை அவர்கள் பெண் ஒட்டகம் ஆக மாற்றினார்கள். இது அவர்கள் நிகழ்த்திய அற்புதமாகும்.

அல்லாஹ்வின் திருநாமமான 'அல்பத்தாஹ்' (திறப்போன்) என்பதன் வெளிப்பாடாக ஆனவர்கள் அவர்கள். காண முடியாத எத்துணை கொந்தளிப்புகளால் இந்த ஆலம் உருப்பெற்றது என்ற விபரம் இந்த அத்தியாயத்தில் ஷைகுல் அக்பர் அவர்களால் விவரிக்கப்பட்டுள்ளது. நபிமார்களுடைய 'சுலூக்'கை அவர்கள் விவரித்துள்ளார்கள்.

இவர்களுள் சிலருடைய 'சுலூக்' ஜலால் என்ற தீவிரமான தன்மையைச் சார்ந்தது. இவர்களுடைய சவாரி மிருகங்கள் இவர்களுடைய சின்னங்களாக விளங்கின. ஹூத் நபியின் பெண் ஒட்டகம் இல்யாஸ் நபியின் குதிரை இவை இந்த இறைநேயர்களின் 'சுலூக்'கின் பாதை எத்தகையது என்பதைக் குறிக்கின்றன. இந்த நபிமார்கள் இறைவனுடைய தன்ஸீஹை (குணமற்ற தன்மையை) நோக்கி நெருக்கமாகி வந்தனர்.

ஈஸா நபியின் வாகனமான கோவேறு கழுதை அவர்கள் இறைவனுடைய சாத்வீகமான (ஜமால்) ஆன போக்கிலான 'சுலூக்'கின் பாதைக்குச் சின்னமாக விளங்கிற்று. இது இறைவனுடைய தஷ்பீஹை (குணமுள்ள தன்மையை) நோக்கிய பயணமாகும். முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வாகனம் ஜலாலும் ஜமாலும் கலந்த ஒன்றாகும். மிஃராஜ் இரவில் அவர்கள் பிரயாணப்பட்ட புராக் என்ற வாகனம் பெண் முகத்தின் அழகையும் நாற்கால் பிராணியின் உடல் அமைப்பையும் உடையதாக இருந்தது.

நபிமார்கள் பொதுவாகத் தங்கள் உடல் மீதே 'சுலூக்' எனும் பிரயாணம் நடத்துவது வழக்கம். நப்ஸ் மீது ஆத்மாவும், உடல் மீது நப்ஸும் வாகனமாக இருந்து இந்த 'ஸுலூக்' நடைபெறும். ஒரு வாகனம் இல்லாமல் பிரயாணம் செய்வது சாத்தியமில்லை. ஆனால், உடல் எனும் வாகனம் நம்மை இருள் எனும் கோட்டைக்குக் கொண்டுபோய் விடும் அபாயமுண்டு.

இறைவனின் தாத்து ஒரு 'பர்ள்' (பிரிக்க முடியாத மொத்தம்) என்றும், மொத்தமானது தன்னில் தானே நோட்டமிட்டதும் அது தன்னை அறிபவன், அறியப்பட்டது என்று இரண்டாகக் கண்டது என்றும் -யாவும் ஒரு முழுசாக இதைக் கண்டது என்று ஷைகுல் அக்பர் கூறுகிறார்கள்.

அறிபவன் அஃயான்களை நோக்கி குன் (ஆகுக) என்ற உத்திரவை வெளியிட்டான். அவை தத்தம் இயல்புக்கு ஏற்ற உருவில் 'ஆகி' விட்டன. அஃயான்கள் தாமே தனியான முறையில் அவனுடைய எண்ணப்படிவங்களே. அவை அதம் (ஒன்றுமில்லாத) தன்மையுடையவை.

எனவே, தாத்தில் காணமுடியாத இயல்புகளை அவற்றில் காண்கிறோம். தொழுவது கீழ்ப்படிவது போன்றவை இதற்க உதாரணங்களாம். இவ்வாறு அவை 'குன்' என்ற கட்டளையைக் கேட்டு அதற்குப் பணிந்தன. ஒரு மனிதன் இன்னொருவனுக்கு உத்திரவு ஒன்றை வெளியிடும்போது அது நிறைவேற்றப் படலாம். அல்லது நிறைவேற்றாமலும் விடப்படலாம். ஆனால் அவன் அதைத் தனக்கே வெளியிட்டுக் கொள்ளும்போது அது தவறாது நிறைவேற்றப்படுகிறது.

தாத்து, தனது ஸிபாத்துகளை அஃயான்கள் மூலம் வெளியிட்டது கொண்டு, அஃயான்களோடு தனக்குள்ள தொடர்பை அது ஸ்திரப்படுத்திக் கொண்டு விட்டது. இவ்வாறு அஃயான் அவன் அத்தாட்சி (ஆயத்) ஆகவும், கட்டுப்பட்ட ஜீவிதமுடையதாகவும் ஆகிவிட்டது. இக்கட்டுப்பாட்டுக்குள்ளானவன் தன் தொடர்பைக் காப்பாற்றப் பாடுபட்டுவரும் வரை அவன் நல்லதே செய்கிறான். இத்தொடர்புக்குப் பாதகமான எதை அவன் செய்தாலும் அவன் தீமையின் பக்கம் சாய்ந்தவன் ஆகிவிடுகிறான்.

இவ்வாறு 'அஃயான்' எதை எதை நாடிக் கேட்டதோ அதையெல்லாம் இறைவன் ஜீவிதத்துக்குக் கொணர்ந்து விட்டான்.

وَمَآ اَصَابَكَ مِنْ سَيِّئَةٍ فَمِنْ نَّفْسِكَ ؕ □مَآ اَصَابَكَ مِنْ حَسَنَةٍ فَمِنَ اللّٰهِ

'நீ செய்யும் எந்த நன்மையும் இறைவனிடமிருந்து வருவதாகும். நீ செய்யும் எந்தத் தீமையும் உன்னகத்தேயிருந்து உண்டாவதாகும்.' (அத் 4:79)

இவ்வாறாக, ஜீவிதம் இறைவனிடமிருந்து வந்தாலும், நன்மை தீமை என்பது அஸ்மாக்களின் வெளிப்பாடுகளால் உண்டாவது - அடியானிடமிருந்தே எழுகிறது. தாத்து அஸ்மாக்களுக்கும் மேலேயுள்ளது, பரிசுத்தமும் புனிதமுமானது.

'அவர்கள் சொல்லும் வருணனைகளுக்கு அப்பாற்பட்டவனான அவனுக்கே சகல புகழும், அவனே மகா உன்னதமானவன்' (அத் 6:101).

அஸ்மாக்களிலும் அஸ்மாயெ - ஜமாலி என்பவை அஸ்மாயெ ஜலாலியை மிகைத்தவையாய் இருக்கின்றன.

'என் கருணை என் கோபத்தை மிகைத்ததாய் இருக்கிறது'. 'என் கருணை யாவையும் பொதிந்ததாய் இருக்கிறது' (அத் 41:7)

எனவே, தன் அஸ்மாக்கள் சம்பந்தப்பட்டவரை அவன் யாவுக்குமே நன்மையானவனாக விளங்குகிறான்.

இந்தத் தொடர்புகள் ஸூபியாக்களால் இஃத்திபாராத் (கற்பனையான சுட்டிக் காட்டுதல்கள்) என்று அழைக்கப்படுகின்றன. இல்மு, நூர், உஜூது, ஷுஹூது ஆகிய நான்கு தன்மைகளை

ஸூபியாக்கள் குறிப்பிடுகின்றனர். முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஒளி இவர்களுடைய செய்தியில் காணக் கூடியதாயுள்ளது.

ஸாலிஹ் நபி அலைஹிஸ்ஸலாம் தமூது கூட்டத்தாருக்குச் செய்த மூன்று நாள் எச்சரிக்கை சம்பந்தமான விசயங்களை ஷைகுல் அக்பர் விவரித்துள்ளார்கள்.

## அத்தியாயம் 12

## ஷுஐபு நபியின் ஞானம்

மெய்ஞ்ஞானியின் இதயம் (கல்பு) இறைவனுடைய கருணையை விட பரந்தது. ஏனெனில் அதில் இறைவனே இருக்கிறான். ஆனால், அவன் தன் கருணையுள் அடக்கமானவனன்று. இறைவன் கருணையைப் பொழிபவன் ஆவான், கருணை தன் மீது பொழியப்படுபவன் அன்று. இது சாதாரண மக்களைப் பொறுத்தவரையும் உண்டான விசய விளக்கமாகும். ஞானநாதர்கள் சம்பந்தப்பட்டவரையோ அவன் கருணையுள் அவன் அடங்கியவனாவான். ஏனெனில், அவன் தன் உள்ளமையால் (தாத்தினால்) மூச்சை ஊதினான்.

யதார்த்தத்தில் அவனுடைய திருநாமங்கள் (அஸ்மாக்கள்) அஹதியத்தின் படிவத்தில் அவனுடைய உள்ளமை (தாத்) ஆகும். உலூஹிய்யத்துக்கு (உலூஹிய்யத் : இறைவனுடைய சொந்த நாமங்கள், ஜீவியமானவன், பரிசுத்தன், என்றுமிருப்பவன் போன்றவை. இவற்றை உடையவனைத் தொழ தொழுவோன் வேண்டும். ரட்சகனின் ரட்சகத்தனத்தைப் பெற ரட்சிக்கப்படுவோன் அவசியமாகும்.) மஃலூதிய்யத் அவசியம், ருபூபிய்யத்துக்கு மர்பூபிய்யத் தேவையாகும்.

உள்ளமை (தாத்து) இவையாவையும் விட்டு அப்பாலானது. ருபூபிய்யத்தின் யதார்த்தம் தாத்து. ஆகவே இருந்தாலும் கூட அது தனித்தது என்று சொல்ல முடியாது. அஃயான்களோடு இறைவன் தொடர்பு கொண்டதே தன் ரட்சகத்தனத்தாலும், தன் அன்பாலும் கருணையாலுமேயாகும். அவனுடைய அன்பை வெளியிடும் முயற்சியாகவே அவனுடைய முதல் மூச்சு வெளியாயிற்று.

அது அவனுடைய ரஹ்மான் (கருணையாளன்) என்னும் பெயருடன் தொடர்புடையது. இவ்வாறு கருணை சகல பொருட்களையும் சூழ்ந்துள்ளது. இவ்வாறே மற்ற அஸ்மாயெ இலாஹி யாவும் தாம் தாம் வெளிப்பாடாவதை விரும்பின. அவன் கருணை யாவையும் பொதிந்தது. சகல பொருட்களின் யதார்த்தமான இறைவனையும் அது சூழ்ந்துள்ளது. கல்பைவிடவோ, அல்லது அதற்கு சமமானதை விடவோ அது பரந்தது. தஜல்லியாத்தின் தருணத்தில் இறைவன் தன்னைப் படிவத்தில் வெளிப்படச் செய்கிறான். ஹதீதில் சொல்லப்பட்டுள்ளதுபோல் அவன் தன்னைப் படிவம் விட்டு படிவம் தன்னைத் தானே மாற்றிக் கொள்கிறான்.

மனிதனுடைய இதயத்தில் இறைவன் இருப்பின் அங்கே அவனையன்றியுள்ள எதற்கும் இடம் இருக்க முடியாது. அதாவது, மனிதனின் இதயம், இறைவனால் நிறைவு பெற்றதாக

ஆகிவிடுகிறது. இறைவனுடைய தஜல்லியால் கட்டுண்டவன் சிருஷ்டிப் பொருள் மீது தன் கவனத்தைத் திருப்ப முடியாது. மெய்ஞ்ஞானியின் இதயத்தின் ஒரு மூலையிலேனும் அர்ஷும் அதற்குக் கீழேயுள்ளதும் இருக்குமாயின் அவர் அதை உணர்ந்தவராக இருக்கமாட்டார் என்று அபூ யஜீது பிஸ்தாமி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கிறார்கள்.

இறைவன் தன்னைப் பல்வேறு படிவங்களில் வெளிப்படுத்தும்போது அப்படிவங்களுக்கு ஏற்ப மெய்ஞ்ஞானியின் இதயமும் விரிவடையவோ சுருங்கவோ செய்யும். ஏனெனில், இதயத்தில் எந்தப் பகுதியும் தஜல்லியால் ஆட்கொள்ளப்படாமல் இருப்பதில்லை. மெய்ஞ்ஞானியின் இதயம் ஒரு மோதிரத்திலுள்ள கல்லின் டால் அடித்தல் போன்று இருக்கிறது. இந்த டால் அடித்தல் கல்லின் அளவையும் படிவத்தையும் போன்றே சதுரமாகவோ, முக்கோணமாகவோ, வட்டமாகவோ இருக்கிறது.

அடியானின் இயல்புக்கு ஏற்றமுறையில் இறைவனுடைய வெளிப்பாடுகள் உள்ளன என்ற கோட்பாடுக்கு இது முரணானது ஆகும். ஏனெனில், இறைவன் தன் தஜல்லியை வெளியாக்கும் அதே படிவத்தில் அடியான் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறான் என்று சொல்லப்படுவதுண்டு. இது அவ்வாறன்று. இறைவனுக்கு இரண்டு வகை தஜல்லியாத்துகள் உண்டு. ஒன்று மறைவானது, மற்றது பகிரங்கமானது.

முதலாவது தஜல்லியால் இறைவன் தான் 'பைளெ அக்தஸ்' என்னும் மிகவும் புனிதமான காருண்யத்தால் அடியானிடம் அவனுடைய இதயம் இருக்க வேண்டிய இயல்பை உண்டாக்குகிறான். ஷஹாதத்தின் தஜல்லியில் மெய்ஞ்ஞானியின் இதயம் தஜல்லியின் படிவத்தை அடைந்து கொள்கிறது. இறைவனுடைய பைளெ முகத்தஸ் என்னும் புனிதக் கருணையால் அந்த இதயம் விரிவடையவோ, சுருங்கவோ செய்யும். இப்போது அடியான் தன் நம்பிக்கையின் உருவில் இறைவனைக் காண்கிறான். இறைவன் தன் அடியானின் இதயத்தில் இருக்கிறான் என்பதன் பொருள் இதுதான். இறைவனைக் குறிப்பிட்ட ஒரு படிவத்துக்குள் கட்டுப்படுத்துபவன் சகல படிவங்களிலும் அவனைக் காண மாட்டான்.

முழுமையானவனாக அவனைக் காண்பவன் சகல படிவங்களிலும் அவனைக் காண்பான். அவனுடைய தஜல்லியாத்துகள் எண்ணற்றவையாய் இருப்பதுபோல் இந்த அடியான் அவனை எண்ணற்ற வழியில் பிரார்த்திப்பதும் சாத்தியமாகி விடும். இத்தகைய நிலையை எய்திய மெய்ஞ்ஞானி அதிகமதிகமான ஞானத்தையே வேண்டுவார்,

وَقُلْ رَّبِّ زِدْنِىْ عِلْمًا

'இறைவா, என் ஞானத்தை அதிகரிக்கச் செய்தருள்' (அத் 20:114) என்று இறைவனிடம் பிரார்த்திப்பார்.

இந்த ஞானத்தில் சிருஷ்டியாளனுக்கும் சிருஷ்டிக்கும் இடையிலுள்ள கோடு அழிக்கப்படுகிறது. 'அவன் நடக்கும் காலாக நான் ஆகிவிடுகிறேன். அவன் தொழில்படும் கையாக நான் ஆகிவிடுகிறேன், அவன் பேசும் நாவாக நான் ஆகிவிடுகிறேன்' என்று இறைவனே

அருளியுள்ளான். இதிலிருந்து, புற ஜீவிதமே அவன் என்றோ, புற ஜீவிதமே சிருஷ்டிக்கப்பட்டது என்றோ நீ கூறலாம். இவ்வாறு ஒரு தொடர்பில் பார்த்தால் அவன் சத்தியமானவனாக இருக்கிறான்.

இன்னொரு தொடர்பிலே, சிருஷ்டிக்கப்பட்டதாகத் தோற்றமாகிறான். ஆனால், இரண்டிலுமே தாத்து (தெய்வ உள்ளமை) ஒன்றுதான். தஜல்லியை உண்டாக்கியவனுடைய திருவதனம் அந்த தஜல்லியை ஏற்றுக் கொள்பவனுடைய வதனமாகவும் இருக்கிறது. தஜல்லியை உண்டாக்கியவனும் அவனே, அதை ஏற்றுக் கொண்டவனும் அவனே. எனவே, அவன் ஜீவிதத்தோடு தொடர்பு கொண்ட தாத்து, அவனுடைய அழகிய திருநாமங்கள் (அஸ்மாவுல் ஹுஸ்னா) மூலம் புலப்படும்.; இவ்வுலகுடன் தொடர்பு கொண்ட தாத்து எத்தகைய விந்தையானது என்பதைச் சிந்தனை செய்து பார்!

அவனுடைய தாத்தையன்றி வேறு தாத்து இல்லை, ஒளியே அவன் யதார்த்தம், இருளும் மருளும் கூட அவனே.

இறைவன் கூறியுள்ளான், 'இதில் (திருமறையில்) கல்பு உள்ள மனிதனுக்கு நற்போதனையுள்ளது' என்று. அறிவுள்ளவனுக்கன்று. கல்பானது படிவங்களாகவும், குணப் பெயர்களாகவும் தன்னைத்தானே சுற்றுகிறது. அறிவு மனிதனை ஒரே மனநிலையில் கட்டுப்படுத்துகிறது. ஒருவனுடைய அறிவு மற்றவனுடைய அறிவை மறுதளிக்கவே உதவுகிறது. கல்பு உடையவனோ ஏகனை இம்மையில் பல்வேறு படிவங்களில் காண்கிறான், இறைவனின் தாத்தைத் தன் தாத்திலேயே காண்கிறான். இவ்வாறு இறைவன் தானே ஆரிப் (ஞானி) ஆகவும் இருக்கிறான். ஜாஹில் (வழி தவறியவன்) ஆகவும் இருக்கிறான்.

கல்புடையவன் எண்ணமும் உடையவன். 'இறைவனை நீங்கள் காண்பது போன்றே அவனை வணங்குங்கள்' என்று நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியுள்ளார்கள். எண்ணத்திலிருந்து எழுதுவது இது, எண்ணக்கலையே இது. ஷுஐபு நபியோடு தொடர்புடையது இது. ஒவ்வோர் எண்ணமும் ஒரு கிளையாகும். திரை அகற்றப்பட்டதும் விசுவாசியின் விசுவாசத்துக்கும் ஏற்ற முறையில் ஒவ்வொரு எண்ணத்திலும் இறைவன் தோற்றமாவான்.

சில சமயம் ஷரீஅத் சம்பந்தப்பட்டவரை விசுவாசியின் நம்பிக்கைக்கு முரணான முறையில் அவன் தோற்றமாகலாம். 'அவர்கள் நினைத்துப் பார்த்திராதவையும் இறைவனிடமிருந்து அவர்களுக்குத் தோற்றமாகும்' என்று இறைவன் அருளியுள்ளான். ஒரு பாவாத்மா தன் பாவங்களுக்காகப் பாவ மன்னிப்பு வேண்டி மீளாத நிலையில் இறந்து விட்டால் அவன் எக்காரணம் கொண்டும் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்று முஃதஜிலாக்கள் கூறுகின்றனர். ஆனால், இந்தக் கூற்றுக்கும் முரணாக இறைவனின் கருணை அவனைச் சூழலாம். இறைவன் ஆசி அவன் மீது இறங்கலாம். அவன் நினைத்தே பார்த்திராதது அவனைச் சூழலாம். அவனுடைய அசல் நம்பிக்கை குறைந்தே போகலாம். மரணத்துக்குப் பின் மனிதன் தன் மேல்நோக்கிய பயணத்தில் சதாவும் முன்னேறிக் கொண்டே இருப்பான். இந்த

முன்னேற்றம் இலகுவில் தெரிவதாக இருக்காது. எனவே, சொர்க்கவாசிகள் தங்கள் ஆத்ம உணவை அடையப் பெற்றோமே!' என்று கூறுவர்.

قَالُوْا هٰذَا الَّذِىْ رُزِقْنَا مِنْ قَبْلُ وَاُتُوْا بِهٖ مُتَشَابِهًا

'அதுபோன்ற உணவு அவர்களுக்கு அளிக்கப்படும்' (அத் 2:25)

யாவும் கைவல்யமான ஞானி பலவானதில் ஏகத்தைக் காண்கிறார். அஸ்மாக்கள் என்னும் திருநாமங்கள் பல. அவற்றின்; அடிப்படையான ஏகமான தன்மையோ ஒன்றுதான். சகல அஸ்மாக்களிலும் அடியான் இறைவனைக் காணும் காட்சி ஒன்றுதான். அது சாரத்தையே உணர்த்துகிறது. எனவேதான் தொடர்பில் ஒருவன் என்பதை உணர்பவன், தான் காரமாகவும் இருப்பதைக் கண்டுக் கொள்வான். 'தன் நப்ஸை அறிந்தவன் தன் இறைவனை அறிந்து கொண்டான்'.

அதாவது, அவனுடைய நப்ஸ் இறைவனின் படிவத்தில் உண்டானது. அடியான் இறைவனின் யதார்த்தமானவன். ஜனங்களுள் நபிமார்கள், ஒலிமார்கள், மாபெரும் ஞானநாதர்களையன்றி மற்றோர் இதை அறிய மாட்டார்கள். திவ்விய சிந்தனை இங்கே முடிவடைவதில்லை. நீடிப்பானது சதாவும் மாறிக் கொண்டே இருக்கும். உலகம் நீடிப்பிலுள்ளது. எனவே, அது ஒவ்வொரு கணமும் மாறிக் கொண்டே இருக்கிறது.

بَلْ هُمْ فِىْ لَبْسٍ مِّنْ خَلْقٍ جَدِيْدٍ

'புதிதாகத் தம்மை சிருஷ்டித்தது யார் என்பது பற்றி அவை ஐயப்பாட்டிலுள்ளன' (அத் 50:15)

அவை நீடிக்கப்பட்டவற்றின் கதம்பமே சத்து ஆகும். நீடிக்கப்பட்டவை சத்தின் எல்லைகளாம். ஒவ்வொருக் கணமும் இறைவன் தன் தஜல்லியாத்துகள் என்ற ஒளிப் பாய்ச்சதலை அனுப்பிக் கொண்டிருப்பதை ஞான திருஷ்டியுடையோர் (கஷ்பு கண்ணுடையோர்) காண்கின்றனர்.

ஒரு தஜல்லி மறைவதென்பது 'பனா' (நாஸ்தி) ஆகும். இன்னொன்று மறைவது 'பகா' (நித்தியத்துவம்) ஆகும். 'பனா' ஒவ்வொருக் கணமும் உலகை அழிக்கிறது. 'பகா' ஒவ்வொருக் கணமும் உலகைப் புனர் நிர்மாணம ;செய்து கொண்டிருக்கிறது.

விளக்கக் குறிப்பு: ஹழ்ரத் சுஐபு அலைஹிஸ்ஸலாம் அவர்கள ஹழ்ரத் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வழித் தோன்றல், அவர்கள் வமிசத்தில் ஐந்தாம் தலைமுறையைச் சார்ந்தவர்கள். ஹிஜாஸைச் சேர்ந்த மதாயின் நகரில் பிரச்சாரம் செய்வதற்காக அவர்கள் அனுப்பப்பட்டார்கள். நிறுவை, அளவை சம்பந்தப்பட்டவற்றில் ஜனங்கள் நாணயத்தோடு நடந்து கொள்ள வேண்டும் என்று அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். (அத் 11:84-95) 'ஷுஐபு' என்ற பதம் 'ஷு∴பா' என்பதிலிருந்து உண்டானதாகும். 'ஷு∴பா' என்றால் கிளை என்று பொருள்.

நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நேர்மையைக் கடைப்பிடிக்குமாறும், யாவிலும் இறைவனை மனத்தில் கொள்ளுமாறும் போதனை செய்தார்கள். அவர்களுடைய அகமியம் 'கல்பு' ஆகும். அது ளாஹிர் (புற உலகு), பாத்தின் (அக உலகு) ஆகிய இரண்டையும் சூழ்ந்ததாகும். அதாவது, அஸ்மாக்களும் அவற்றின் புறத்தோற்றங்களுமாம். 'மெய்ஞ்ஞானியின் கல்பு' தன் சுழற்சியால் தெய்வீகப் படிவங்களின் செயல்பாடுகளையும், இறக்கங்களை (தனஜ்ஜுலாத்துகளை)யும் இனம் கண்டு கொள்கிறது. கீழ் வகையான பிராணிகளிடம் இருக்கும் இதயம் இதை உணர மாட்டாது.

ஆத்மா அஹதிய்யத்தின் படிவமாய் இருப்பது போன்று, வாஹிதிய்யத்தின் நிலையில் அதுதானே அஸ்மாவாகத் திகழ்கிறது. இந்த கல்பில் இறைவன் அடங்கிவிடுகிறான். 'வானங்களாலும் பூமியாலும் என்னைத் தம்முள் அடக்கிக் கொள்ள முடியாது, மெய்விசுவாசியின் இதயத்தில் நான் அடங்கி விடுகிறேன்' என்று அவனே அருளியுள்ளான்.

அல்லாஹ்வின் தஜல்லி இதயத்தில் ஒளி பாய்ச்சும் போது அது அதை உணருகிறது. இவ்வாறு அது அந்தத் தஜல்லியைத் தன்னுள் தாங்கிக் கொள்கிறது. இது ஒரு பாத்திரம் தண்ணீரைத் தாங்குவதைப் போன்ற கருத்திலல்ல. அஸ்மா சம்பந்தப்பட்டவரை இறைவனின் நற்கருணையே அவனைச் சூழ்ந்து கொள்கிறது.

நப்ஸெ ரஹ்மானி என்ற புனித மூச்சு மூலம் அவன் இவ்வுலகை வெளிப்படுத்தினான். அதனால் அவன் ரஹ்மத் என்னும் கருணை அஸ்மாவைச் சூழ்ந்து கொள்கிறது. 'என் கருணை சகல பொருள்களையும் சூழ்ந்து கொள்கிறது' என்ற அவன் அறிவிப்பில் 'பொருள்கள்' என்பதில் அஸ்மாக்களும் அஃயான்களும் அடங்கும்.

نَبِّئْ عِبَادِىٓ اَنِّىٓ اَنَا الْغَفُوْرُ الرَّحِيْمُ

'இறைவன் தன் அடியார்களிடம் கருணைமிக்கவன்'. 'நான் மன்னிப்பவன், கருணையாளன் என்பதை என் அடியார்களுக்கு அறிவிப்பீராக' (அத் 15:49)

தாத்து என்னும் உள்ளமை சம்பந்தப்பட்டவரை அஸ்மாக்களின் ஒன்றான தன்மை தாத்தேயாகும்.

அஸ்மாக்களின் பலவான தன்மை சம்பந்தப்பட்டவரையோ அவை தாத்துக்கு அன்னியமானவையாகும். தாத்து சம்பந்தப்பட்டவரை, 'அது சுயேச்சையானது.' அஸ்மாக்களோ அஃயான்களில் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள வேட்கையுடையவையாய் இருக்கின்றன. இந்த வேட்கை அவன் மூச்சு ஊதப்படுவதன் மூலம் தீருகிறது. தயாளவானுடைய கொடுக்கும் தாகம் வாயிலில் நிற்கும் யாசகனுக்கு யாதும் கொடுப்பதால் தணிவது போன்றது இது. இவ்வாறு மூச்சு ஊதப்படுவதல் அஸ்மா நிம்மதியடைகிறது, அஃயானின் தேட்டம் பூர்த்தியாகும் வரை அஸ்மாக்கள் கிளர்ச்சி உடையவையாகவே இருக்கின்றன. இவ்வாறு அல்லாஹ்வின் கருணை கல்புடையதையும் விட யாவையும் சூழ்ந்து அகண்டமானதாகும்.

ஞானியின் இயல்புக்கு ஏற்ற அளவு இறைவனுடைய தஜல்லி அவரில் சுடர் பாய்ச்சுகிறது. பாத்திரத்தின் படிவத்தையே அதில் தங்கும் திரவமும் ஏற்றுக் கொள்கிறது. பாத்திரம் முற்றும் நிரம்பியதானதும், அதற்கு அதிகம் அதில் திரவம் தங்க இடம் இல்லாது போகிறது.

அஹதிய்யத்தின் தஜல்லியாத்துத் தம்மீது படும் ஞானி 'தன்' தன்மை மறந்தவர் ஆகிறார். தாத்தையன்றி மற்றவை பற்றிய எந்த உணர்வும் அவருக்கு இருப்பதில்லை. 'பனா' ஆன நிலையை அவர் எய்திவிடுகிறார். 'தாத்து' மட்டும் அத்தாட்சியாக மீதமாய் இருக்கிறது. இருமையான தன்மை மறைந்ததும், அல்லாஹ் இருக்கிறான் என்ற உணர்வே மிஞ்சுகிறது. இதுவே 'பகா'வின் யதார்த்த நிலையாகும்.

திசைகாட்டும் கருவியின் முள்ளைப்போல் கல்பும் வெளிப்பாட்டுப் படிவங்கள் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குத் தாவிக் கொண்டேயிருக்கிறது. இதன்மூலம் இறைவன் சகல படிவங்களிலும் இருக்கிறான் என்பதை மெய்ஞ்ஞனரி கண்டு கொள்கிறார். முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களில் அல்லாஹ் பக்தியுடையவனாகவும் அறிந்தவனாகவும் தோற்றமாகிறான், அபூஜஹலில் சுயநலமியாகக் காட்சியளிக்கிறான்.

மனிதன் தான் எதிர்பார்த்ததற்கு முரணான வகையில், மரணத்துக்குப் பின்னர் இறைவனை இரண்டு வழிகளில் காண்பான். இறைவனுடைய வதனத்தைத் தன் வதனததின் படிவத்தில் அவன் காண்பான். ஏனெனில், சகல படிவங்களும் இறைவனுடைய படிவங்கள்தான்.

وَمَنْ كَانَ فِىْ هٰذِهٖ اَعْمٰى فَهُوَ فِى الْاٰخِرَةِ

'இம்மையில் குருடானவன், மறுமையிலும் குருடனாகவே இருப்பான்' (அத் 17:72)

அல்லது இறைவனை அவன் வேறு ஏதாவது எதிர்பாராத படிவம் ஒன்றில் காண்பான். ஏனெனில், புலனாவது யாவும் இறைவனிடமிருந்து வருவதாம், தொகுத்தறிவது ஆலம் (உலகம்) ஆகும். அந்த உலகம் அஸ்மாவின் தஜல்லியாத்துதான். 'யதார்த்தம் புலனுக்கு உணர்த்தப்படுகிறது. சிருஷ்டி தொகுத்தறியப்பட்டது.'

இம்மையில் உள்ள பொருட்கள் யாவும், மறுமையில் உள்ள பொருட்கள் யாவும் அல்லாஹ்வின் அஸ்மாக்களின் படிவங்களே ஆகும். அவனுடைய ஞானத்தில் அடக்கமான அஸ்மாக்கள் 'அஸ்மாயெ-இலாஹி' (தெய்வீக கல்யாண குணங்கள்) எனப்பட்டன. புறத்தே அவை வெளிப்படையாக, அவறுக்கு நேரடியான லௌகீகப் பெயர்கள்- இவை 'அஸ்மாயெ கியானி' எனப்படும் - தேவைப் படுகின்றன. அப்போது இந்த அஸ்மாயெ கியானி ஞானத்தில் தோற்றமாகி, தாங்கள் வெளிப்படையாகப் பிரார்த்தித்தன. கல்யாண குணங்களின் தஜல்லியாத்து அவற்றின் மீது சுடர் வீசிற்று. உடனே அவை பொருட்களாயின. இதுவே, ஆத்மீகச் சேர்க்கை அல்லது படிவங்களின் நிகாஹ் (திருமணம்) எனப்படும். இதை ஸூபியாக்கள் 'இஸ்துவாஜ்' என்பர். இவையே ஆத்மீக ஆதமும் ஹவ்வாவும் ஆகும்.

படிவங்கள் யதார்த்தத்தின் அறிவிலுண்டான யதார்த்தமான எல்லைகள் அல்லது வரம்புகள் ஆகும். இவ்வாறு ஒருவகையில் அவையே தாம் யதார்த்தமாகவும் இருக்கின்றன. படிவங்களில் யதார்த்தத்தைக் காண்பவன் யதார்த்தத்தையேக் காண்பவன் ஆவான். 'நான் பொருள்' ஐக் காணவில்லை. ஆனால் அத்துடன் இறைவனைக் காண்கிறேன்' என்று ஹழ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மொழிந்தார்கள்.

எனினும், 'நான் இறைவனின் ஞானத்தில் ஒரு படிவமாய் இருந்தேன். அந்தப் படிவத்தின் மீது இறைவன் தன் கல்யாண குணத்தைப் பொழிந்ததும் நான் 'பொருள் ஆனேன்' என்று ஷைகுல் அக்பர் கூறுகிறார்கள். எல்லாப் பொருள்களுமே யதார்த்தத்தின் படிவங்கள் அல்லது எல்லைகளே ஆகும். புறத்தன்மை சம்பந்தப்பட்டவரை பொருள்கள் யதார்த்தத்தை விட்டும் தனியானவைதாம், அதாவது அவை கட்டுப்பட்டவை (பந்தா) ஆகும். அகத்தன்மை சம்பந்தப்பட்டவரையோ அவை யதார்த்தமே (ஹக்கே) ஆகும்.

இறைவன் தன் ஞானத்தில் இறங்கியதும் முதன்முதலில் தோற்றமான படிவம் முஹம்மதின் யதார்த்தம் (ஹகீகத்தெ முஹம்மதீ) எனப்பட்டது. (இதுவே 'வஹ்தத்' ஆகும்) இந்தப் படிவம் நாஸ்தியாவதற்கோ மறைவதற்கோ உரியதன்று, இது அவன் சொந்த 'வஜ்ஹ்' வதனம் ஆகும். அவனுக்கு இது என்றும் பிரசன்னமாகவே இருக்கும். ஆனால், நிபந்தனைக்கு உட்பட்ட அஸ்மாக்களின் படிவங்கள் மறையக் கூடியவை.

كُلُّ شَىْءٍ هَالِكٌ اِلَّا وَجْهَهٗ

'அவன் வதனம் (வஜ்ஹ்) தவிர மற்ற யாவும் (படிவங்களும்) நாஸ்தியாகுபவைதாம்' (அத் 28:88) என்று திருமறை இயம்புகிறது.

## அத்தியாயம் 13

## லூத் நபியின் ஞானம்

## (பஸெ-லூத்திய்யா)

மலக் என்றால் கடுமை என்று பொருள்படும. மலீக் என்றால் கடுமையானவன் அல்லது பலமானவன் எனப்படும். லூத் நபியின் வாய்மொழியாக திருமறையிலே, 'எனக்குப் பலமிருந்திருப்பின், நான் பலமான இனத்தாரின் பாதுகாப்பை நாடியிருப்பேன்' என்று குறிக்கப்பட்டுள்ளது. எனவே தான் நம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்: 'நம் சகோதரர் லூத் மீது அல்லாஹுத்தஆலாவின் நல்லாசி உண்டாவதாக. அவர் 'ஷதீத்' மூலமானது என்ற அல்லாஹ்வின் இஸ்மின் பாதுகாப்பைத் தேடிக் கொண்டவர் ஆவார்' என்று இந்தப் பலம் 'ஹிம்மத் (மனோபலம்) ஆகும். இதற்குப் பின்னர் வந்த நபிமார்கள் அனைவரும் தமது இனத்துப் பலவான்களின் பாதுகாப்பில் இருந்து வந்தனர். உதாரணமாக நபி பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது சிறிய தந்தை அபூதாலிபின் பாதுகாப்பில் இருந்தார்கள்.

اَللهُ الَّذِىْ خَلَقَكُمْ مِّنْ ضُعْفٍ ثُمَّ جَعَلَ مِنْۢ بَعْدِ ضُعْفٍ قُوَّةً ثُمَّ جَعَلَ مِنْۢ بَعْدِ قُوَّةٍ ضُعْفًا وَّشَيْبَةً

'இறைவன் மனிதனைப் பலஹீனனாகப் படைத்தான், பின்னர் அவனைப் பலவானாக ஆக்கினான், பின்னர் அவனை மீண்டும் பலஹீனனாகவும், நரைதிரை முதிர்ந்தவனாகவும் ஆக்கினான்.' (அத் 30:54)

அதாவது, மனிதன் இறைவனுடைய ஞானம் பற்றி அறிந்தபின் வேறு எதையும் அறியான். ஒவ்வொரு நபியும், தாம் நாற்பது வயதை எய்திய பின்னரே நபித்துவம் வழங்கப்பட்டனர். அப்போது அவர்கள் உடலில் பலஹீனம் உண்டாக ஆரம்பித்து விட்டிருக்கும். ஒரு நபியின் தெய்வ ஞானம் மிகைப்பட மிகைப்பட அவர்கள் தமது மனோசக்தியைப் பிரயோகிக்கவும் அதிகமாக விரும்புவதில்லை.

ஏனெனில், அந்த நிலையில் அவர்கள் இறைவனின் அடியாராகச் சேவை செய்யத் தொடங்குகிறார்கள். மேலும், மனோசக்தி பிரயோகிக்கப்படும் பொருள், அதைப் பிரயோகிப்பவருடன் ஒன்றாகNவு ஆகிவிடுகிறது. ஷைகு அபூ அப்தில்லாஹ் இப்னு முஹம்மது பையாஜ் ரஹிமஹுல்லாஹ், ஷைகு அபூதாவூது இப்னு ஷிப்லீ ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம் வினவினார்கள், அவர்கள் ஏன் தங்கள் மனோபலத்தைப் பிரயோகிப்பதில்லை?' என்று. இதற்கு இறைவன் தன் சித்தப்படி செய்யட்டும் என்று விட்டுவிட்டதாகப் பின்னவர்கள் பதிலளித்தார்கள்.

فَاتَّخِذْهُ وَكِيْلًا

'அவனையே உங்கள் வக்கீல் ஆக ஆக்கிக் கொள்ளுங்கள்' (அத் 73:9)

وَاَنْفِقُوْا مِمَّا جَعَلَـكُمْ مُّسْتَخْلَفِيْنَ فِيْهِ

'உங்களுக்கு அவனால் அதிகார வரம்பளிக்கப்பட்டுள்ள பொருள்களிலிருந்து செலவிடுங்கள்' (அத் 57:7)

என்ற திருவசனங்களின் பொருளை மனத்தில் கொண்ட அந்தப் பெரியார் அவ்வாறு பதிலளித்தார்கள். எனவே, இந்தச் சித்தாந்தத்தைப் பின்பற்றும் யாரும் தமது மனோபலத்தைப் பிரயோகிப்பது எங்ஙனம்?

தெய்வஞானம் மிகைதத மெய்ஞ்ஞானி தாம் பலஹீனமான சிருஷ்டியாக இருப்பதைக் கண்டு கொள்கிறார். இந்த அடிமைத்தனமான (உபூதிய்யத்தின்) நிலையில் நபி பெருமான் ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்,

وَمَآ اَدْرِىْ مَا يُفْعَلُ بِىْ وَلَا بِكُمْ‌ؕ

'நானோ நீங்களோ எவ்வாறு நடத்தப்படுவோம் என்பதை நான் அறியேன், எனக்கு வெளியாக்கித் தரப்பட்டதைத் தான் நான் அப்படியே பின்பற்றுகிறேன்' (அத் 46:9) என்று. இவ்வாறு அவர்கள் முன்னாலேயே அறிந்திருக்கும் சக்தியை மறுத்தார்கள்.

தமது பலஹீனத்தையும் பணிவையும் ஒப்புக் கொண்டார்கள். அற்புதங்களை நிகழ்த்துமாறு திட்டவட்டமாக 'வஹி'அறிவிக்கப்பட்டால்தான் அவ்விதம் செய்தார்கள். தாங்கள் தனிப்பட்ட முறையில் அதைவிட்டும் ஒதுங்கிக் கொண்டார்கள்.

மெய்ஞ்ஞானத்தில் பக்குவமடையாதவர்கள் இந்த சக்தியைப் பிரயோகிப்பார்கள், மெய்ஞ்ஞானத்தில் பக்குவமடைந்தவர்கள் இதைக் கைவிட்டு விடுவார்கள். ஆரிபு ஒருவர் நிர்ப்பந்தம் ஏற்பட்டாலன்றி இந்த சக்தியை பிரயோகிக்க மாட்டார். தம்மை பின்பற்றுபவர்களை தம் இறைவனின் திருத்தூதர்தாம் என்று நம்பவைக்க ஒரு நபிக்கு இது அவசியமானதாகவே இருக்கிறது. ஆனால், ஒலிமார்களுடைய நிலை இதுவன்று. ஈமானின் (மெய்விசுவாசத்தின்) ஒளியுடையவர்கள் மட்டுமே நபியை ஒப்புக் கொள்கின்றனர். அதனால் நபியும் அற்புதங்கள் நிகழ்த்தாமல் ஒதுங்கிக் கொள்ளவே விரும்புகிறார்கள்.

முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விசயத்தில் அவர்கள் தமது சிறிய தந்தையார் அபூதாலிபை இஸ்லாத்தில் ஆக்காதது பற்றித் துயரப்பட்ட சமயம், இறைவன் அருளினான்,

'நீர் விரும்பியவரை நீர் நேர்வழியில் நடத்தாட்டிவிட முடியாது. ஆனால், இறைவன் தான் நாடியவர்களை நேர்வழியில் செலுத்துகிறான்' (அத் 28:56) என்று.

மனோ சக்திக்கு ஏதாவது எதிரொலி இருந்திருப்பின் நபிபெருமானார் அதைச் சாதித்திருக்க முடியும். ஒரு நபி தங்களால் அறிவிக்குமாறு உத்திரவிடப்பட்ட செய்தியை ஜனங்களுக்கு எட்டச் செய்கிறார்கள். இறைவனே அவர்களை மனம் மாற்றுகிறான். 'நற்செய்தியை ஏற்பவர்கள் யார் என்பதை நன்கு அறிந்தவன் அல்லாஹ்வேயாவான்' 'அஃயானெ தாபிதா' நிலையிலிலேயே ஞானத்தை விரும்பும் தம் இயல்பை வெளிப்படுத்தியர்வர்கள் இவர்கள். இதன்மூலம் அறிவுக்கு அறியப்பட்டவன் இன்றியமையாதவன் என்பது நிலைநாட்டப்பட்டதாகிறது.

எனவே இறைவன் அருளினான்,

وَمَآ اَنَا بِظَلَّامٍ لِّلْعَبِيْدِ

'என் சிருஷ்டிகள் மீது நான் கொடுமை இழைக்க மாட்டேன் (அத் 50:29) என்று.

அவற்றை இறைவன் அவற்றின் ஆசைக்கு ஏற்ப சிருஷ்டித்துள்ளான். ஆனால், 'அவை தாம் ஒன்றை ஒன்று கொடுமைப்படுத்திக் கொள்கின்றன' என்றும் அவன் தெரிவித்துள்ளான்.

விளக்கக் குறிப்பு: லூத் நபி அலைஹிஸ்ஸலாம் இப்றாஹீம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மருமகன் ஆவார்கள். தாங்கள் வாழ்ந்த மக்களிடை அவர்களுக்கு எந்த

அதிகாரமும், செல்வாக்கும் இல்லாமல் இருந்தார்கள். அந்த இனத்தார் கூடா ஒழுக்கம் உடைய தீய மக்கள் கூட்டத்தாராவர். கொள்ளையடிப்பதில் கைதேர்ந்தவர்கள். லூத் நபியின் நல்லுபதேசத்தை அவர்கள் செவி ஏற்கவில்லை.

லூத் நபியிடம் அற்புதம் நிகழ்த்தும் சக்தியிருந்தும், அவர்கள் அதைப் பிரயோகிக்கவில்லை. மெய்ஞ்ஞானத்தில் சம்பூரணம் அடையும்போது, மகான்கள் தமது மனோ சகத்தியைப் பற்றி அக்கறைக் காட்டுவதில்லை. எனவே, அவர்கள் தமக்கு உதவியாளர்களை (அன்ஸார்களை) அனுப்புமாறு இறைவனிடம் அவர்கள் பிரார்த்தித்தார்கள். அப்போது இறைவன் அவர்களைப் பாதுகாக்கத் தன் தூதர்களை அனுப்பினான். (ஹூத் அத்தி 11:77)

லூத் நபியின் வாயிலில் இருவரைக் குருடர்களாக அடித்த இருவரும் அந்த இரண்டு தூதுவர்களும் ஆவர்.

இந்த அத்தியாயத்தை ஷைகுல் அக்பர் அவர்கள், நன்மை-தீமையின் ஆரம்பத்தையும் நபிமார்கள் இவ்வுலகில் தோன்ற நேர்ந்த அவசியத்தையும் விவரிக்கப் பயன்படுத்தியுள்ளார்கள்.

ஜீவிதம் இறைவனுடையது, சிருஷ்டிக்கப்பட்டவற்றுக்கு ஜீவிதமில்லை. சிருஷ்டியின் ஆரம்பம் பலஹீனமானது. உங்களைப் பலஹீனராகப் படைத்த இறைவன் ஒருவனே' (அத்30:54) இதனால் பலஹீனமும், பணிவும் மனிதனில் இரண்டறக் கலந்துள்ளன. நாற்பது வயதுவரை மனிதனுடைய உடல் சக்திகள் தலைதூக்கி நிற்கின்றன.

ஆனால், தலையில் நரை மயிர்கள் தோன்றத தொடங்கியதும் அந்த சக்திகள் பலம் குன்றத் தொடங்குகின்றன. லூத் நபி அலைஹிஸ்ஸலாம் பலம் குன்றிய நிலையில் இருந்தார்கள். தங்களுக்கு உதவியாளர்களை அனுப்புமாறு அவர்கள் இறைவனிடம் இறைஞ்சினார்கள். 'அஃயானெ தாபிதா'விலேயே நன்மை தீமைகள் அமைந்து போய்விட்டன.

அங்கே அறிவு அறியப்பட்டவனின் தேவையை நாடியதாக நிற்கிறது. மதிநுட்பத்தில் சிந்தனை நியதிகள் தூண்களாக இருப்பதுபோல, அஃயான்கள் அறிவியல் தூண்கள் போல் நிற்கின்றன. அஃயான்களுள் ஒன்று தன்னை வெளிப்படுத்திக் கொள்ள நாடியபோது நாஸ்தியானதிலிருந்து (அதமிலிருந்து) தனக்கு நேரடியான ஒன்றின் தேவையை நாடியதாக ஆகிவிடுகிறது.

உதாரணமாக 'ரஜ்ஜாக்' (ரிஜ்கு அளிப்பவன்) என்ற திருநாமம் தன்னை வெளியாக்க நாடியபோது, 'மர்ஜூக்' (ரிஜ்கு அளிக்கப்படுபவன்)' என்ற பெயர் ஒன்றுமில்லாததிலிருந்து உருப்பெற வேண்டுவதாய் இருக்கிறது. 'ரஜ்ஜாக்' என்ற திருநாமத்தில் எண்ணத்தால் உண்டானதுதான் இந்தப் படிவம். இது யதார்த்தத்தில் நாஸ்தியானதுதான். ஆனால், 'ரஜ்ஜாக்' என்ற படிவமோ இறைவனுடைய இஸ்முகளில் ஒன்றாகும்.

அது இறைவனுடைய 'தாத்தே' (உள்ளமையே)தான். ஒன்றில் அறியப்பட்டவனும், அறிவும் ஒன்றானதால், அறிவு அறியப்பட்டவனுடைய தேவையற்றதாக இருக்கிறது. மற்றதில் அஃயான்கள் தம்மை வெளிப்படுத்த நாடிய நிலையல் அந்தரங்கமான அஃயான்கள் (அஃயானெ பாத்தினி) வெளிப்படையான அஃயான்களாக (அஃயானெ ளாஹிரி) ஆகவேண்டிய நிலையில்,

அறியப்பட்டவன் அறிய விரும்பிய தன்மையானதாக இருக்கிறான். அதாவது, அறியப்பட்டதற்கு தனி இயல்பு இல்லை. அது வெறும் சூனியமானதாகும்.

இறைவனுடைய நடைமுறைகள் அவன் பிரதிநிதிகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. ஜனங்களிடை இறைவன் தன் நபிமார்களை அனுப்பி வைப்பதன் நோக்கம் நன்மை தீமைகளைப் பிரித்துக் காட்டுவதற்குத்தான். யாரையும் இதைப் பின்பற்றுங்கள் அதைப் பின்பற்ற வேண்டாம் என்று வற்புறுத்துவதற்காக அன்று. நபிபெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவுமாறு தங்கள் சிறிய தந்தையார் அபூதாலிபைக் கேட்க மட்டுமே செய்யலாம். அந்த வேண்டுகோள் பயன்தராதது பற்றி துயரப்பட வேண்டியதில்லை.

ஒரு மனிதனுடைய செயல் அவனுடைய 'அஃயானெ தாபிதா' (இறைவனுடைய அறிவில் உண்டான படிவங்கள்)வின் இயல்புக்கு ஏற்றதாகவே இருக்கும். அஃயான்கள் சில, நல்லியல்புகள் உடையவை, வேறு சில தீய இயல்புகள் உடையவை (இந்த இயல்புகளை மாற்றும் சக்தி தனக்கு இருந்தும் கூட) இறைவன் இந்த இயல்புகளின் தேவைக்கு முரணான அமைப்புகளை உண்டாக்குவதில்லை. அப்படி உண்டாக்கினால் அவனுடைய 'ஹக்கீம்' (யாவும் அறிந்தவன்) என்ற திருநாமம் அர்த்தமற்றதாக ஆகிவிடும்.

நபிமார்கள் அனுப்பப்பட்ட இன்னொரு குறிக்கோள், மனிதனை அவன் இயல்போடு ஒட்டிய மார்க்கத்தில் பூரணமடையச் செய்வதற்காகவாகும். இதனால் நல்லுபதேசம் கேட்டும் செவிமடுக்காத பாவத்துக்காக தீய இயல்புள்ளவர்கள் இன்றும் மோசமான நிலையை எய்துகின்றனர். நல்லியல்புள்ளவர்களோ அந்த நல்லுபதேசங்களின்ப நடந்து மேலும் சிரேஷ்டமடைகின்றனர். நபிமார்களை அனுப்பியதன் மூலம் தன் சிருஷ்டிகளிடம் அல்லாஹ் தான் கொண்டுள்ள அன்பையும் வெளிப்படுத்தியுள்ளான்.

## அத்தியாயம் 14

## உஜைர் நபியின் ஞானம்

'களா'(விதிப்பு) என்பது பொருள்களை நோக்கி அல்லாஹ் இடும் கட்டளையாகும். பொருள்கள் பற்றிய அவனுடைய ஞானம் பொருள்களின் இயல்புகளுக்கு இயன்ற அளவினதாக இருக்கும். 'கத்ரு' (தீர்ப்பு) என்பது பொருள்கள் அஃயானெ தாபிதாவில் எப்படி இருந்தனவோ அவ்வாறு வெளிப்பாடாகக் குறிக்கப்பட்ட காலமாகும். உத்தரவிடப்பட்டதன் தேவையை நாடியவனான உத்திரவிடுபவன், இவ்வாறு உத்திரவிடப்பட்டவனாகவும் ஆகிவிடுகிறான்.

நபிமார்கள் தமது நபித்துவம் காரணமாகத் தாங்கள் அனுப்பப்பட்ட கூட்டத்தாரின் தேவைகளை அறிந்தவர்களாக இருக்கிறார்கள். இந்தத் தேவைகளுக்குத் தக்க அளவு அவர்கள் அறிவும் அதிகமாகவோ குறைவாகவோ இருக்கும். மக்கள் கூட்டங்களின் தேவைகள் பல்வேறு வகையினதாக இருக்கும். அதற்கேற்ப நபிமார்களின் படித்தரங்களும் அவர்களுடைய அறிவுத்தரங்களும் வேற்றுமைப்படும்.

تِلْكَ الرُّسُلُ فَضَّلْنَا بَعْضَهُمْ عَلٰى بَعْضٍ

'இந்தத் தூதர்களுள் சிலருக்கு மற்றவர்களை விட அதிகச் சலுகை அளித்துள்ளோம்.' (அத் 2:253)

وَلَقَدْ فَضَّلْنَا بَعْضَ النَّبِيِّنَ عَلٰى بَعْضٍ

'ஒரு நபியை விட இன்னொருவருக்கு நாம் அதிகச் சலுகை அளித்துள்ளோம்.' (அத்17:55)

சிருஷ்டிக்கப்பட்டவற்றின் விசயத்தில் அல்லாஹுத்தஆலா அருளியுள்ளான்,

وَاللّٰهُ فَضَّلَ بَعْضَكُمْ عَلٰى بَعْضٍ فِى الرِّزْقِ

'உணவு அளிக்கும் விசயத்தில் நாம் உங்களிடை ஒருவரை இன்னொருவரைவிடச் சலுகையுடையவராக ஆக்கியுள்ளோம்.' (அத் 16:71) என்று.

உணவு இரண்டு வகைப்படும். ஒன்று அறிவு,ஞானம் போன்ற ஆத்மீக உணவு. மற்றது வயிற்றுக்கான சாதம், பானம் போன்றது.

وَمَا نُنَزِّلُهٗٓ اِلَّا بِقَدَرٍ مَّعْلُوْمٍ

உணவை நாம் அறியப்பட்ட ஒரு குறித்த அளவிலன்றி (அதற்கு அதிகமான) அனுப்பவில்லை' (அத் 15:21) என்றும்

இறைவன் அருளியுள்ளான். இந்த 'அறியப்பட்ட குறிப்பிட்ட அளவுதான்' சிருஷ்டிக்கப்பட்டதற்கு நியாயமாகத் தேவைப்படுவதாகும். சிருஷ்டிக்கப்பட்டதால் தனக்குத் தெரிவிக்கப்பட்டதை இறைவன் உத்திரவிடுகிறான். காலத்தை நிர்ணயிப்பது சிருஷ்டியேதான். இவ்வாறு களா, அறிவு, எண்ணம் யாவும் கத்ரையே நாடியவையாய் இருக்கின்றன. இதுபற்றிய அறிவு பூரணமானமான மெய்ஞ்ஞானம் பெற்றவர்களுக்கே உண்டாகும்.

இந்தச் சம்பூரண அறிவை அடையப்பெற்றவர்கள் (என்ன வரப்போகிறது என்பதை அறிந்திருந்தபடியால்) பூரணமான நிம்மதியிலும், (இன்னதான் வரப்போகிறது என்பதை அறிந்துவிட்டபடியால்) அதிகமான துயரத்திலும் மூழ்கி இருப்பார்கள். 'வஹி'யின் (தெய்வ அறிவிப்பின்) மூலம் நபிமார்கள் இந்த அறிவை எய்தியதும் அவர்களுள் இதயம் எந்த பகுத்தறிவுமின்றி ஒளிமயமாக ஆகிவிடும். பகுத்தறிவு இந்த அறிவு விசயத்தில் எதுவுமே செய்ய இயலாது என்பதையும், ஸௌகும் (லயிப்பும்) வஜ்தும் (பரவசமும்) தாம் தங்களை முன்னேறச் செய்ய முடியும் என்பதையும் அவர்கள் நன்கறிந்திருந்தனர். இதனால் சம்பூரண மனிதர் 'தஜல்லியாத்' என்ற தெய்வச் சுடர் ஒளி பாய்ச்சுதலையே பூரணமாக நம்பி இருந்தார். ஏனெனில், மனிதனுடைய சடதத்துவ, மனக்கண் முன் உண்டான திரைகளை இறைவன் அகற்றிவிடவில்லையல்லவா!

உஜைர் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஞான திருஷ்டியின் (கஷ்பின்) மூலமன்றி, ஜடதத்துவ அறிவின் மூலம் அறிவைப் பெற முயன்ற காரணத்தால் இறைவனுடைய கண்டனத்துக்கு ஆளானார்கள்.

'மரணத்துக்குப் பின் அந்த (ஊர்) ஜனங்களே இறைவன் உயிர்ப்பித்திருப்பது எங்ஙனம்?' (அத் 2:259) என்று.

இது இப்றாஹீம் நபி அலைஹிஸ்ஸலாம்,

وَاِذْ قَالَ اِبْرٰهٖمُ رَبِّ اَرِنِىْ كَيْفَ تُحْىِ الْمَوْتٰى ؕ

'எனது இறைவா, மரணித்தவர்களை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கிறாய் என்பதை எனக்கு காட்டியருள்!' (அத் 2:260) என்று கேட்டது போன்ற கேள்வியேதான்.

இத்தகைய வினாக்களுக்குச் சொற்களின் மூலமாகயன்றி, செயல்களின் மூலமே பதில் அளிக்கப்படுகின்றன. இறைவன் உஜைர் நபியை நூறு ஆண்டுகள் மரணித்தவர்களாக வைத்திருந்து பின்னர் உயிர்த்தெழுப்பினான். 'பார்த்தீரா, நாம் எவ்வாறு எலும்புகளை ஒன்று சேர்த்து, அதன் சதையைப் போர்த்துகிறோம்' என்று.

அஃயானெ தாபிதாவின் யதார்த்தங்களை நோட்டமிடுவது கொண்டு கிடைக்க வேண்டிய பதிலுக்கான கேள்வியை உஜைர் நபி இவ்வாறு கேட்டுவிட்டார்கள். இறைவன்தான் இவ்வாறு செய்ய முடியும் அவனுடைய திருநாமங்கள் அஃயான்களுக்குத துறவுகோல்களாகும்!. இறைவன் தன் அடியார்களுள் ஒரு சிலரிடமே இந்தத் துறவு கோலைக் கொடுக்கிறான்.

உஜைர் நபிமீது இறைவன் கோபமானதும், அதற்கான காரணத்தை அவர்கள் புரிந்து கொண்டார்கள். அதாவது, தாங்கள் விரும்பியது சிருஷ்டிக்கப்பட்டவற்றுக்கு சாத்தியப்படாத ஒன்று என்று உணர்ந்தார்கள். ஒரு ஹதீதின்படி உஜைர் நபியிடம் இறைவன் கூறினான், வியப்பை விட்டும் நீர் ஒதுங்கவில்லையானால், நபிமார்களின் பட்டியலிலிருந்து உமது பெயரையே நாம் அகற்றிவிடுவோம்' என்று.

அதாவது, உமக்கு வஹி அனுப்புவதை நிறுத்திவிட்டு, உமது சக்திக்கு ஏற்ற அளவில் தஜல்லிய்யாத்துகளை அனுப்புவேன், இந்தத் தஜல்லியிலாவது இவ்விசயத்தை நீர் கண்டு கொள்ளாவிடின், உமக்கு அதற்கான சக்தியில்லை என்று நீர் புரிந்து கொள்ளலாம்.

விலாயத் என்பது நபிமார்களையும், ஒலிமார்களையும் பொதிந்ததாகும். விலாயத் என்றும் முடிவதில்லை. நபித்துவம் ஷரீஅத்துடன் தொடர்புள்ளது. ஒவ்வொரு புதிய நபி வந்ததுடனும் அது முடிவாகிவிடும். எனவேதான் நபிபெருமானார் அருளினார்கள், 'எனக்குப் பின்னர் நபி கிடையாது.ரஸூலும் (வேதம் கொணர்பவரும்) கிடையாது' என்று.

'எனக்குப் பின்னர் வேறு சம்பூரண மனிதர் இல்லை' என்பதுதான் இந்த ஹதீதின் தாத்பரியமாகும். இது ஒலிமார்களான தெய்வநேயர்களின் உணர்வை நசுக்கி விட்டது.

அல்லாஹுதஆலாவின் அழகிய திருநாமங்களுள் ஒன்று 'ஒலி' என்பது, ஆனால் நபி என்றோ, ரஸூல் என்றோஅவருக்கும் பெயர் இருக்கவில்லை. இவை சம்பூரண மனிதர்களுக்காக ஒதுக்கப்பட்டவை என்பதே இதன் தாத்பரியமாகும்.

ஒரு ஒலியின் விலாயத் அவருடைய நுபுவ்வத்தை விடச் சிறந்ததாகும். ஆனால், பூரணமான இடத்திலிருந்து பார்த்தால், விலாயத் நுபுவ்வத்தை விட உயர்ந்ததன்று. கஷ்பு என்ற ஞான திருஷ்டியுடன் தொடர்புள்ளது என்ற முறையில் விலாயத் நுபுவ்வத்தின் சக அம்சமாகும். அது என்றும் முடிவடையாதது. இதனால்தான் நபி பெருமானார், 'எனது இறைவா, என் அறிவை அதிகப்படுத்தியருள்!' என்று பிரார்த்தித்தார்கள்.

**விளக்கக் குறிப்பு:** உஜைர் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நூறாண்டுகள் மரணமுற்று இருந்தபின் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டதும், தங்களுக்கு அருளப்பட்ட சட்டதிட்டங்களைக் கணக்கர்களிடம் கூறி எழுதச் சொன்னார்கள் என்று சொல்லப்படுகிறது. அத்தியாயம் 11 ஆயத் 30 ல் யூதர்கள் உஜைர் நபியை ஆண்டவனின் புதல்வன் என்று கூறிய விபரம் மட்டும்தான் காணக்கிடக்கிறது. திருமறை விரிவுரையாளர்கள் கஸஸூல் அன்பியா என்ற நபிமார் சரிதையை தழுவி அவர்கள் நூறாண்டுகளுக்குப் பின் உயிர்ப்பிக்கப்பட்ட விருத்தாந்தத்தைச் சேர்த்துள்ளனர்.

இந்த அத்தியாயத்தில் அஃயானெ தாபிதாவின் மறைவான உலகின், பகுதியை ஊடுருவ முயல்வதன் பலாபலன்களை ஷெய்குல் அக்பர் அவர்கள் விவரிக்கிறார்கள். இந்த மறைவான உலகின் ஞானம் இறைவனுடையதாகும். அவனால் அனுமதிக்கப்பட்ட அவன் அடியார்களில் குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் இது அருளப்படுகிறது. இந்த ஞானம் 'ஸிர்ருப் கதீர்' (தெய்வத் தீர்ப்பு பற்றிய ரகசியம்) எனப்படும்.

ஒரு கிராமத்துக்குப் பக்கமாகப் போக நேர்ந்த உஜைர் நபி சொன்னார்கள், 'இந்த மரணித்தபின் இறைவன் எப்படி இவர்களை உயிர்ப்பித்திருக்க முடியும்?' என்று. அஃயான்களையும், அவற்றின் இயல்புகளையும் பற்றிய ஞானத்தைப் பெறுவதுதான் களாவின் அகமியம் ஆகும். பொதுப்படையான சித்தாந்தம் ஒன்றை குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட ஒரு விசயத்தில் பிரயோகித்துப்பார்ப்பதுதான் 'கத்ரு' ஆகும்.

அஹதிய்யத்தின் படித்தரத்தில் அறிவும் அறியப்பட்டவனும் நாஸ்தியாகிவிடுகின்றன. அறியப்பட்டவன் தோற்றமானதும், அறிவும் தோற்றப்பட்டுவிடுகிறது. இயல்புகள் வெளிப்படும் காலையில் அவை 'அஸ்மாயெ இலாஹி' எனும் படிவங்களாகவே தோற்றமாகின்றன. இவை நம்மை 'அஸ்மாயெ கியானி' எனும் படிவங்களில் காண விரும்பின. 'அஸ்மாயெ இலாஹி' படிவங்கள் எடுக்கத் தொடங்கிய அதே சமயம் அஸ்மாயெ கியானியும் படிவங்கள் எடுக்கலாயின. இவ்வாறு சிருஷ்டிக்கும் தொழில் ஆரம்பமாயிற்று.

'களா' எனும் தெய்வ விதிப்பைப் பற்றிய ஞானம் அருளப்பெற்றவர் தமக்கு வரஇருப்பது இன்னதுதான் என்று அறிந்ததால் மனநிம்மதியும், அல்லாஹ்வின் அறிவில் ஏற்கனவே திட்டமாக்கப்பட்டதை மாற்ற இயலாறு என்ற உணர்வில் அதை அறிந்தது பற்றித் துயரமும்

அடைகிறார். உஜைர் நபியின் கேள்வி அவர்களுடைய வியப்பைக் காட்டுவதாயிற்று. எனவே அவர்கள் நூறுஆண்டுகள் மரணித்த நிலையில் வைக்கப்பட்டிருந்து பிறகு உயிர் பெற்றெழுந்தார்கள்.

'கத்ரு' பற்றிய ஞானம் தஜல்லியாத்தின் மூலமே தான் ஏற்பட வேண்டும். சிந்தனையாலோ, பகுத்துணர்வதாலோ அது உண்டாகாது. அதனாலேNயு நபி பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'இறைவா, என் அறிவை அதிகமாக்கியருள்' என்று பிரார்த்தித்தார்கள். அல்லாஹ்வின் ஹுவல் ளாஹிர், (அவன் பகிரங்கமானவன்) என்ற பெயரின் உள்ளமை பற்றிய அறிவை நாம் அறிய தஜல்லியாத்துகள் மூலம்தான் இயலும். இந்தப் பகிரங்கமான நிலை சடதத்துவ உலகிலாயினும் சரி, மிதால் உலகிலாயினும் சரி, ஆத்மாக்களின் உலகிலாயினும் சரி தஜல்லிய்யாத்துகளின் மேல் இவை புலனாகமாட்டா.

வாழ்க்கையின் எந்த அம்சத்திலுள்ள பொருளுடைய யதார்த்தத்தையும் ஊடுருவிக் காண இத்தகைய ஒளிச்சுடர் வீசுதல் அவசியமானதாகும். தமது விளக்கம் பற்றிய காரணம் தாங்கள் செய்த ஆராய்ச்சிகள் தாம் என்று சிலர் எண்ணலாம், ஆனால் இது அப்படியன்று. நம்முடைய ஆராய்ச்சிகளின் ஒரு நிலையில் இந்த யதார்த்தங்கள் இறைவனிடமிருந்து நமக்கு கைவல்யமாகின்றன. 'ஹுவல் பாத்தின்' (அவன் அந்தரங்கமானவன்) என்ற பெயரின் உள்ளமை திறக்கப்படாது முத்திரையிடப்பட்ட கிதாபாகவே இருந்து விடுகிறது. (ஷைகுல் அக்பரின் 'புதூஹாத்துல் மக்கிய்யா)

## அத்தியாயம் 15

## ஈஸா நபியின் ஞானம்

ஜீவன் என்னும் ரூஹின் சக்தி எப்படிப்பட்டது என்றால், அது ஒரு பொருளைத் தொட்டால் உடனே அந்தபொருள் புத்துயிர் பெற்று விடும். இதை அறிந்த சாமிரி, தூதர் ஜிப்ரயீலின் பாதங்களின் அடியிலிருந்து ஒரு பிடி மண்ணை எடுத்து, கன்றுக் குட்டிச் சிலையின் வாயில் வீசினான். உடனே அது 'உம்மே' என்று சப்தம் கொடுத்தது. அதை அவன் வேறு எந்தப் பிராணி உருவின் வாயில் போட்டாலும், உடனே அந்தப் பிராணியின் சப்தத்தை அது வெளியிட்டிருக்கும்.

உதாரணமாக அது குதிரையின் சிலையாக இருந்திருப்பின் அந்த மண் தன் வாயில் பட்டதும் அது கனைத்திருக்கும். அது தவளையின் பொம்மையாக இருந்திருப்பின் தவளையின் கொர் கொர் சப்தத்தை வெளியிட்டிருக்கும். பொருள்களில் பொதிந்து நிற்கும் இறைவனின் ஜீவனின் பகுதி 'நாஸூத்' எனப்படும். நாஸூத் என்பது ஜீவன் நிலைநிற்கும் தலத்தின் பெயர். இதே நாஸூத் தன் ஜீவனோடு சேர்ந்த நிலையில் ஜீவன் (ரூஹ்) என்றும் சொல்லப்படும்.

ஈஸா நபி அலைஹிஸ்ஸலாம் ரூஹுல்லாஹ் (அல்லாஹ்வின் ஜீவன்) என்ற அழைக்கப்பட்டார்கள். ரஸூலெ அமீன் என்னும் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் மரியமின் முன்

தோற்றமானதும் அவருக்கு எதிராக மரியம் தம் உளப்பூர்வமாகத் தங்கள் பலம் அனைத்தையும் திரட்டி இறைவனிடம் பிரார்த்தித்தார்கள். இத்தகையை நிலை ரூஹெ மஃனவீ எனப்படும்.

அப்போதே ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனுடைய வார்த்தையை ஊதியிருப்பார்களாயின் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அந்தக் கணமே அங்கே தோன்றியிருப்பார்கள். ஆனால், அவர்களுடைய இயல்பின் வேகம் காரணமாக உலகத்தால் அவர்களைத் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. அன்னையின் நிம்மதியற்ற தன்மை அவர்கள் உடல் முழுவதும் வியாபித்திருக்கும்.

ஜிப்ரயீல், தாம் இறைவனுடைய தூதர் என்றும், தாம் புனிதமான புதல்வனை அவர்களுக்குத் தரவே வந்ததாகவும் தெரிவித்த பின்னரே மரியம் அவர்களிடம் உண்டான அமைதியின்மை இதயத்தின் நிம்மதியாக மாற்றமாயிற்று. அவர்களுடைய இதயம் திறக்கப்பட்டது. நபிமார்கள் தெய்வ மொழியைத் தமது உம்மத்துகளின் இதயங்களில் ஊதுவதுபோல, ஜிப்ரயீல் இறைவனுடைய வார்த்தையை மரியத்தின் மனத்தில் ஊதினார்கள். இவ்வாறு ஈஸா அலைஹிஸ்ஸலாம் மரியத்தில் ஊதப்பட்ட இறைவனுடைய வார்த்தையாகவும், அவன் ஜீவன் ஆகவும் இருக்கிறார்கள். (அத் 4:171)

அவர்களுடைய சடலம் மரியத்தின் வியர்வையாலும், ஜிப்ரயீலின் எண்ண ஈரத்தாலும் ஆன கலவையாக இருந்தது.

இரண்டு காரணங்களுக்காக ஈஸா மனித உருவில் இருந்தார்கள். ஒன்று அவர்கள் அன்னையார் பக்கமிருந்து உண்டானது. மற்றது ஜிப்ரயீல் மனித உருவில் தோன்றியதால் உண்டானது. அவர்கள் மரித்தவர்களை உயிர்ப்பித்தபோது, அவர்கள் இறைவனுடைய ஜீவன் ஆகவே இருந்தார்கள். ஏனெனில், உயிர்ப்பிப்பது அல்லாஹ்வின் தொழிலே அன்றி மனிதனுடையது அன்று. ஜீவனை ஊதுவது ஈஸாவின் வேலையாக இருந்தது.

இவ்வாறு அவர்கள் பிறந்த விதத்தை அவர்கள் யதார்த்தமாகவே எண்பித்துக் காட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய உண்மையான மூலத்திலிருந்து அவர்கள் 'மரணித்தோரை உயிர்ப்பித்தார்கள்'. அவர்களுடைய கற்பனையான மூலத்திலிருந்து அவர்கள் '(களிமண் உருவில்) அவர்கள் தங்கள் மூச்சை ஊதினார்கள். அது இறைவன் கட்டளையில் உயிருள்ள பறவையாக ஆகிவிட்டது.' (4:171) இறைவனுடைய கட்டளையால் அவர்கள் குருடர்களுக்குப் பார்வையும், குஷ்டரோகிகளுக்கு நோய் நிவாரணமும் தந்தார்கள்.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் இரண்டு அம்சங்கள் குடி கொண்டிருந்தன. ஒன்று அவர்கள் அன்னையாரிடமிருந்து அடையப் பெற்றது. அது பூரணமான பணிவான குணமாக இருந்தது. அதனாலேயே அவர்கள், 'வலக் கன்னத்தில் அடிக்கப்பட்டால் இடக் கன்னத்தைத் திருப்பிக் காட்டுங்கள்' என்று உபதேசித்தார்கள். மற்ற அம்சம் ஜிப்ரயீலிடமிருந்து அடையப்பெற்றது.

அதனால் அவர்கள் இறந்தவர்களை உயிர்ப்பித்தார்கள். ஜிப்ரயீல் மனித உருவில் இல்லாது வேறு ஏதேனும் உருவில் (மரியத்தின் முன்) தோன்றியிருப்பார்களாயின், ஈஸா அலைஹிஸ்ஸலாம் மரித்தவர்களை எழுப்புமுன் அந்த உருவில் அவர்கள் ஆகிக் கொள்ள வேண்டியதாக இருந்திருக்கும். ஜிப்ரயீல் தங்களுடைய ஒளிமயமான உருவில் தோற்றமாகியிருந்தால், ஈஸா அலைஹிஸ்ஸலாம் இறைவனுடைய ஒளியான உருவை மேற்கொள்ள வேண்டுவதாக இருந்திருக்கும்.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் இறந்த ஒருவனை உயிர்ப்பித்ததும், அவன் பேசுவது வழக்கம். ஏனென்றால் ஜனங்கள் தங்கள் முன் கண்கட்டி வித்தை காட்டப்பட்டதாக எண்ணக் கூடாதே என்பதற்காக அவர்கள் தாங்கள் உயிர்ப்பித்தவனைப் பேசவும் வைத்தார்கள். ஆனால் ஜனங்கள் அவர்களை இறைவனுடைய அவதாரம் என்றே கூறத் தலைப்பட்டனர்.

இதனால் இறைவன் சொன்னான்,

لَقَدْ كَفَرَ الَّذِيْنَ قَالُوْٓا اِنَّ اللّٰهَ هُوَ الْمَسِيْحُ ابْنُ مَرْيَمَ

'மரியத்தின் புதல்வர் ஈஸாவை அல்லாஹ் என்றவர்கள் உண்மையை மறைத்தவர்கள் ஆவர்' (அத் 5:17)

என்று. ஈஸா இறைவன் என்றோ, ஈஸா மரியத்தின் புதல்வர் என்றோ அவர்கள் கூறியிருப்பார்களாயின் அது உண்மையை மறைப்பதாகாது. அதாவது, அவர்கள் தெய்வீகத் தன்மையை ஈஸாவின் உருவத்தின் மீதே சாட்டியவர்கள் ஆவர். சிலர் அவர்கள் பிறப்பை மரியத்தோடு கட்டுப்படுத்தி மரியத்தின் புதல்வர் என்று அவர்களை அழைத்தனர். சிலர் அவர்கள் பறவைப் பொம்மைகளுள் உயிர் ஊதியது கண்டு ஜிப்ரயீலுக்கு அவர்களை உவமைப்படுத்தி, அவர்களை 'அல்லாஹ்வின் வார்த்தை' என்றனர்.

மற்றும் சிலர் அவர்கள் மரணித்தவர்களுக்கு உயிர் கொடுப்பது கண்டு அவர்களை 'ரூஹுல்லாஹ்' (அல்லாஹ்வின் ஜீவன்) என்றனர். இந்த வேற்றுமைகள் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் விசயத்தில் மட்டும்தான் எழுந்துள்ளன. மற்றவர்கள் விசயத்தில் உடல் நன்கு வளர்ச்சி அடைந்த பின்னரே உயிர் அதில் ஊதப்பட்டது.

فَاِذَا سَوَّيْتُهٗ وَنَفَخْتُ فِيْهِ مِنْ رُّوْحِىْ

'(ஆதத்தின்) உடலை தகுந்த பருவமுடையதாக நான் ஆக்கியதும் அவரில் நான் என் மூச்சை ஊதினேன்' (அத் 38:72) என்று இறைவன் அருளியுள்ளான்.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விசயத்திலோ அவர்களில் மூச்சு ஊதப்படும்போதே அது முதிர்ச்சி அடைந்து கொண்டது. சிருஷ்டிக்கப்பட்ட யாவும் அல்லாஹ்வின் வார்த்தைகள்தாம், அவை என்றும் நாஸ்தியாவதில்லை. ஏனெனில், அவையாவும் 'குன்' (ஆகுக) என்ற

உத்திரவின்படி தோற்றமானவை. இறைவன் தான் 'குன்' என்ற சொன்ன பொருளில் தன்னை வெளிப்படுத்திக் காட்டுகிறான். இறைவனுடைய 'தாத்து' (உள்ளமை) மட்டும் என்றும் வெளிப்படுவதோ அறியப்படுவதோ இல்லை. இவ்வாறு இறைவன் 'குன்' என்ற வார்த்தையைப் பேசுபவன், சிருஷ்டிப்பவன், உயிர்ப்பிப்பவன் ஆவான். பேசுபவன் இறைவன் என்றும், அடியளனே சிருஷ்டிக்கப்படுபவன், உயிர் கொடுப்பவன் என்றும் சிலர் கூறுகின்றனர்.

அபூயஜீது பிஸ்தாமி ரஹிமஹுல்லாஹ் அவர்களைப் போன்ற ஆத்ம விகசிதம் உடையவர்களுக்Nகு இது தெளிவாகும். அபூயஜீது ரஹிமஹுல்லாஹ் அவர்கள் செத்த எறும்பில் தங்கள் மூச்சை ஊதி அதற்கு உயிர் உண்டாக்கினார்கள். அதை உயிர் உண்டாக்கியது யார் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

மரணித்தவர்களை எழுப்புவதன் லௌகீக அம்சம் இது. தெய்வ அறிவின் உதவியால் மரணித்தவர்களுக்கு உயிர் ஊட்டுவது ஆத்மீக அம்சமாகும்.

اَوَمَنْ كَانَ مَيْتًا فَاَحْيَيْنٰهُ وَجَعَلْنَا لَهٗ نُوْرًا يَّمْشِىْ بِهٖ فِى النَّاسِ

'இந்த மனிதன் மரணித்திருந்து, அவனுக்கு நாம் மீண்டும் உயிரளித்து, மனிதர்களிடை அவன் நடப்பதற்கான ஒளியையும் நாம் அளிக்கவில்லையா?' (அத்6:122)

என்று இறைவனே வினவுவதை நாம் நினைவில் வைப்போம்.

இறைவனுடைய நப்ஸ் (தனித்தன்மை) ஆவது நப்ஸே ரஹ்மானி (புனித மூச்சு) ஆகும். நப்ஸே ரஹ்மானி சிருஷ்டியாளனின் படிவத்தில் இவ்வுலகம் தோற்றமாயிற்று. சிருஷ்டிப்பதில் சிருஷ்டியாளன் தன் இரண்டு கைகளையும் பயன்படுத்தினான். அத்தகைய சிருஷ்டியின் பலாபலனை நாம் இப்பிரபஞ்சத்தில் காண்கிறோம். மனிதனிடமுள்ள வேறுபட்ட குணங்களுக்குக் காரணம் இவ்வாறு அவன் இறைவனுடைய இரண்டு கரங்களாலும் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதுதான்.

இதனால் மனிதன் 'பஷர்' (தொடப்பட்டவன், அச்சில் வார்க்கப்பட்டவன்) என்ற பெயர் பெற்றான். இது இறைவன் மனிதனுக்கு அருளிய விசேசமான அருட்கொடையாகும். இதனால்தான் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முன் அடிபணிய மறுத்த ஒருவனை நோக்கி இறைவன் சொன்னான்,

قَالَ يٰۤاِبْلِيْسُ مَا مَنَعَكَ اَنْ تَسْجُدَ لِمَا خَلَقْتُ بِيَدَىَّ‌ ؕ اَسْتَكْبَرْتَ اَمْ كُنْتَ مِنَ الْعَالِيْنَ

'என் இரண்டு கைகளாலும் நான் சிருஷ்டித்த, ஒருவர் முன் அடிபணியாது உன்னைத் தடுத்தது எது? நீ அகந்தையைக் காட்டினாய். இல்லியூன்களைவிட நீ உயர்ந்தவனா?' என்று. (அத் 38:75)

இல்லியூன்கள் என்பது ஒளியால் படைக்கப்பட்ட அமரர்கள் ஆவர்.

வானின் பல்வேறு மண்டலங்களிலும் உள்ள அமரர்களும் தத்தமது மண்டலங்களுக்கு உரிய மூலப் பொருள்களால் படைக்கப்பட்டுள்ளனர். மனிதன் இறைவனுடைய ஜலால் ஜமால் என்னும் இரண்டு கரங்களாலும் படைக்கப்பட்டதால் அவன், மூலப் பொருள்களிலிருந்து படைக்கப்பட்டவற்றை விட உயர்ந்தவனாய் இருக்கிறான். ஆனால், திருமறையின்படி அவன் இல்லியூன்களை விடத் தாழ்ந்தவனாக இருக்கிறான். எனவே, இறைவனுடைய மூச்சைப் புரிந்து கொள்ள விழைபவர் பிரபஞ்ச இயக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

'தன் நப்ஸை அறிந்தவன் இறைவனை அறிந்தான்'. பிரபஞ்ச இயக்கம் இறைவனுடைய மூச்சின் புற இயக்கத்தையே குறிப்பதாகும். நிபந்தனைக்கு உரிய தெய்வ நாமங்கள் தாம் வெளியாக்கப்பட துடிதுடித்துக் கொண்டு இருந்தன. அவற்றின் முயற்சியைப் புறத்தோற்றம் உடையவையாக ஆக்கியதன் மூலம் இறைவன் அவற்றின் பதற்றத்தை அகற்றினான். அவற்றின் புறத்தோற்றங்களுக்கு அவன் தன் மூச்சால் உருக் கொடுத்தான். ஆதம் உயிர் பெறும் வரை, அந்தத் துடிப்பைத் தீர்ப்பதற்காக இறைவன் கீழேயுள்ள தன் படித்தரங்களுக்கே இறங்கி வந்தான். சகல வெளிச்சமும் சூரியோதயத்துக்கு முன்பிருந்த இருளைத் தொடர்ந்து வந்ததுபோல் சகல சிருஷ்டிகளுமே நப்ஸெ ரஹ்மானியிலிருந்து தொடர்ந்தவைதாம்.

இந்தப் பதம் அதாவது, ஈஸா அலைஹிஸ்ஸலாம் பிரபலமான நிலையில் வைக்கப்பட்டபின்,

وَاِذْ قَالَ اللّٰهُ يٰعِيْسَى ابْنَ مَرْيَمَ ءَاَنْتَ قُلْتَ لِلنَّاسِ اتَّخِذُوْنِىْ وَاُمِّىَ اِلٰهَيْنِ مِنْ دُوْنِ اللّٰهِ

'என்னுடன், உம்மையும் உம் தாயையும் இரண்டு கடவுள்களாக ஏற்றுக் கொள்ளும்படி ஜனங்களை நீர் கேட்டீரா?' (அத் 5:116)

என்பது போன்ற வினாவை இறைவன் விடுத்தான்.இதற்கு அதற்கான மரியாதையோடு தான் பதில் அளித்தாக வேண்டும்.

காரணம் இறைவன் ஈஸா நபிக்கு ஒளியை அளித்த போது அவர்கள் ஒன்றான (ஜம்உ ஆன) நிலையை விரும்பாது, அடிமையான (தப்ரிகாவான) நிலையையே உவந்து ஏற்றுக் கொண்டார்கள். அதனால், 'நீயே சுப்ஹான் - புனிதமானவன்' அதாவது அழிவையும் மட்கும் நிலையையும் விட்டும் நீயே அப்பால் ஆனவன் என்றும், 'நான் சொல்லத்தகாத ஒன்றை நான் சொல்வது சரியன்று' என்றும், 'நான் அவ்வாறு சொல்லியிருந்தால் நீ அதை அறிந்திருப்பாய்'

ஏனெனில், 'அடியான் பேசும்போது அவன் நாவாக நான் ஆகிவிடுகிறேன்' என்று நீ சொல்வதாக நபி பெருமானார் அருளியுள்ளது போல நீயே உண்மையில் பேசுபவன், நீயே பேசுகின்ற நாவு ஆவாய் என்றும், 'எனது நாவில் பேசுபவன் நீயே, நீயே என் நாவு' என்றும் ஈஸா நபி கூறினார்கள். அதனாலேயே,

مَا قُلْتُ لَهُمْ اِلَّا مَآ اَمَرْتَنِىْ بِهٖٓ اَنِ اعْبُدُوا اللّٰهَ رَبِّىْ وَرَبَّكُمْ

'எனது இறைவனும் உங்கள் இறைவனும் ஆன அல்லாஹ்வையே வழிப்படுங்கள்' (அத்5:117)

என்றும் அவர்கள் கூறினார்கள். இங்கே அவர்கள் 'தஷ்பீஹ்' (குணமான) நிலை மூலம் தங்கள் தனித்த தன்மையை நிலை நிறுத்தினார்கள்.

**விளக்கக் குறிப்பு:** இந்த அத்தியாயத்தில் ஷைகுல் அக்பர் அவர்கள் ஈஸா நபி கன்னி மரியத்தின் புதல்வராகப் பிறந்தது பற்றி தத்துவத்தை விவரிக்கிறார்கள். ஈஸா நபியிடம் மூன்று அம்சங்கள் இருந்தன என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அவை உடல் சம்பந்தமானவையும், ஆத்மா சம்பந்தமானவையும் ஆகும். மரியத்தின் புதல்வராகப் பிறந்தது அவர்களுடைய உடல் சம்பந்தப்பட்ட அம்சமாகும்.

ஆத்மீகத்தில் அவர்கள் ஜிப்ரயீலின் எண்ணப்படிவம் அமைந்திருந்ததால் அவர்கள் மரணித்தவர்களுக்கு உயிரூட்டினார்கள். களிமண் பறவைகளுக்கு உயிரூட்டினார்கள். தங்களில் இறைவனின் ஒளி பூரணமாக ஆட்கொள்ளவிட்டிருந்தது அவர்களிடமிருந்த தெய்வீக அம்சமாகும். ஈஸா அலைஹிஸ்ஸலாம் வஹ்தத்தின் ஒரு படிவமாக இருந்தார்கள். வஹ்தத்தின் அசல் இறைவனின் முதல் படியாகும். இதுவே ஹகீகத்தே முஹம்மதீ (முஹம்மதின் யதார்த்தம்) என்றும் சொல்லப்படும்.

மறைவான உலகமும், காட்சியில் படும் இவ்வுலகமும் யாவுமே இறைவனுடைய அம்சங்கள்தாம் என்பது ஞானநாதர்களுடைய கருத்தாகும். இவ்வாறு ஈஸா அலைஹிஸ்ஸலாம் இறைவனுடைய அம்சமாக விளங்கினார்கள். தர்க்கரீதியாக ஒரு முடிவு எடுப்பதில் உண்டான தெய்வ நிந்தனையான விசயம் இதுதான். ஈஸா நபியில் தெய்வ ஒளி சுடர் விட்டதால் அவர்கள் தெய்வமாய் இருந்தார்கள் என்று சொல்வது தவறாகும்.

'ரூஹ்' அல்லது ஜீவனுக்கு சொல்லப்பட்ட கலிமா அல்லது வார்த்தை இறைவனுடைய 'குன்'(ஆகுக) என்ற உத்தரவின் மூலம் வந்ததாகும். ஈஸா அலைஹிஸ்ஸலாம் 'குன்' என்பதின் நேரடியான வெளிப்படாக வந்தவர்கள் ஆதலால் அவர்கள் கலீமுல்லாஹ் அல்லது ரூஹுல்லாஹ் ஆனார்கள். மற்றச் சிருஷ்டிகள் சம்பந்தப்பட்டவரையோ, அஸ்மாவின் பல்வேறு படித்தரங்களின் மூலமே வெளிப்பாடு நிகழ்ந்தது.

இந்த வார்த்தை 'நுபுவ்வத்'துக்குச் சமமானது என்றும், 'ரூஹ்' என்பதற்கு கருணை, உதிப்பு, உயிர் என்று பொருள் என்றும் திருக்குர்ஆன் விரிவுரையாளர் ஒருவர் அறிவித்துள்ளார். 'வஹ்தத்தின்' நிலையில் இந்த வார்த்தை - இல்மு, நூர், உஜூது, ஷுஹூதைப் போன்று இறைவனேதான் ஆகும் (இவையாவும் ஒன்று மற்றது போலவே விளங்குபவையாகும்).

மற்ற சிருஷ்டிகள் சம்பந்தப்பட்டவரை படிப்படியான நிலைகள் மூலம் படிவங்ள் தயாராக்கப்பட்டன. பின்னர் அவற்றில் உயிர் ஊதப்பட்டது. அதாவது, விளக்கை முதலிலே ஆயத்தப்படுத்தி, அதன் திரியை ஒழுங்காகக் கத்தரித்தபின் அதில் விளங்கு ஏற்றப்பட்டது. இங்கேயோ, திரியை ஒழுங்காக்கியதும், விளக்கேற்றப்பட்டதும் ஒரே சமயத்தில் ஆகும்.

இதனால்தான் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின் வார்த்தை என்று சொல்லப்படுகிறார்கள். அப்படிப் பார்த்தால் சிருஷ்டிகள் யாவுமே அவனுடைய வார்த்தைகளின்

கலவையால் எழுந்தவைதாம். அவனுடைய வார்த்தைகள் கணக்கிட முடியாதவை. 'இறைவன் ஒன்றை ஆக்க நாடினால், அதை நோக்கி அவன் 'ஆகுக' என்கிறான். உடனே, அது ஆகிவிடுகிறது.'(அத் 3:46)

இறைவனுடைய முதல் கருணை அவன் தன் புனித மூச்சை தன் பெயர்களின் படிவங்கள் மீது ஊதியதுதான். அதை ஏற்றதும் அந்தப் பெயர்களின் படிவங்கள் புறத்தோற்றம் பெற்றன. அல்லாஹ்வின் 'தாத்து' ஒரு சமுத்திரமாயின் - அது இல்மு எனும் அறிவின், அல்லது நூர் எனும் ஒளியின், அல்லது 'உஜூது' எனும் உள்ளமையின், அல்லது ஷுஹூது எனும் நோட்டமிடுவதன் சமுத்திரமாக இருப்பின் - பொருள்களின் யதார்த்தம் என்ற அஃயான்கள் அவனுடைய சொந்த இயல்புகள் அந்தச் சமுத்திரத்தில் பிரதிபலிக்கும் பிரதி பிம்பங்களாகவே இருக்கின்றன. இவற்றின் படிவங்களில் சமுத்திரம் தனக்குத்தானே தோற்றமாகிறது.

அந்த நோட்டமிடுதலுக்குப்பின் புறத் தோற்றங்கள் மறைந்து அவற்றின் அறிவு மட்டும் மிஞ்சுகிறது. சமுத்திரம் போல் சமுத்திரமாகவே நிலை பெற்று நிற்கிறது'. அவன் எவ்வாறு இருந்தானோ அவ்வாறே இருக்கிறான்' என்கிறது திருக்குர்ஆன்.

كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ ۚ وَيَبْقَىٰ وَجْهُ رَبِّكَ ذُو الْجَلَٰلِ وَالْإِكْرَامِ

'அதன் மீதுள்ள யாவும் நாஸ்தியாக்கப்படுகின்றன. ஜலால் எனும் தீவிரமும், ஜமால் எனும் பேரழகும் உடைய உமது இறைவனுடைய வதனம் என்றுமிருப்பதாகும்.' (அத் 55:26-27)

'ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஜிப்ரயீலின் நேரடியான உதிப்பு சக்தியாக இருந்தபடியால் அவர்கள் மரணித்தவர்களுக்கு உயிர் ஊட்டினார்கள். ஷெம் என்பவரை அவர்கள் உயிர்ப்பித்தார்கள். ஷெம் பேசினார். அவர் வாய்திறந்து பேசி இருக்காவிட்டால் ஜனங்கள் அதை வெறும் கண்கட்டி வித்தையாகவே கருதியிருப்பார்கள். மண்ணால் செய்த பறவைகளை அவர்கள் உயிர் பெற்றெழச் செய்தார்கள். இது திருமறையில் பிரஸ்தாபிக்கப்படுகிறது. ஆனால் பைபிளில் இது பற்றிச் சொல்லப்படவில்லை.

அடியான் தன் மேல் நோக்கிய பிரயாணத்தில் இறைவனின் திருநாமங்களில் தன்னை நாஸ்தியாக்கிக் கொள்ளும் 'குர்பே-நவாபி'லை ஷைகுல் அக்பர் விவரித்துள்ளார்கள். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் குணங்களை நாஸ்தி (பனா) ஆக்கியவர்களாகவும், இறைவனின் கல்யாண குணங்களில் தரிபாடு (பகா) ஆனவர்களாகவும் விளங்கியதால், இறைவனின் சக்தியின் துணையால் அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினார்கள்.

## அத்தியாயம் 16

## சுலைமான் நபியின் ஞானம்

'உண்மையாகவே இது (இந்தக் கடிதம்) சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடமிருந்துதான் வந்துள்ளது. இது அளவற்ற அருளாளனும், நிகரற்ற

அன்புடையோனுமான அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கிறேன்' என்று தொடங்குகிறது' (அத் 27:29-30) பல்கீஸுக்குத் தாங்கள் எழுதிய கடிதத்தில் சுலைமான் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனுடைய பெயருக்கு முன் தங்கள் பெயரை எழுதியதற்காக சிலர் அவர்களைக் குறை கூறியதுண்டு. ஆனால், இது அவ்வாறன்று. அந்தக் கடிதத்தைப் பல்கீஸ் அவர்களே கண்ணியமான கடிதம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். 'உண்மையாகவே அந்தக் கண்ணியமான கடிதம் என்னை நோக்கி வீசப்பட்டது' என்று தெரிவித்துள்ளார்கள்.

சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் கடிதத்தில் இரண்டு வகை அருட்கொடைகளைக் குறிப்பிட்டார்கள். ஒன்று ரஹ்மான் என்ற பெயரால் சுட்டப்பட்ட வரம்பற்ற அருட்கொடைகள் மற்றது ரஹீம் என்ற பெயரால் சுட்டப்பட்ட வரம்புக்கு உட்பட்ட அருட்கொடைகள். வரம்பற்ற அருட்கொடைகள் பாரபட்சமற்று (மழையைப் போல்) யாவர் மீதும் பொழியப்படுவதாகும். வரம்புக்கு உட்பட்ட அருட்கொடையோ தன் அடியார்கள் செய்யும் நற்செயல்களுக்குச் சம்மானமாக அவர்கள் மீது மட்டும் வருஷிக்கப்படுவதாகும்.

'அருட்கொடைகளை வருஷிப்பதை அவன் தன் மீது கடமையாக்கிக் கொண்டான்.' (கதபஅலா நப்ஸிஹிர் ரஹ்மா) ஆத்மீகப் படித்தரங்களில் முன்னேறிய நல்லடியான் தன் அவயங்கள் மூலம் நல் அமல்களைச் செய்பவன் யார் என்பதை நன்கு அறிந்திருக்கிறான். நல் அமல்கள் மனித உடலில் எட்டு அவயங்களிடை பகிர்ந்து தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு அவயத்தின் 'தான்' தன்மையும், யதார்த்தமும் தானேதான் என்று இறைவன் ஏற்கனவே நமக்கு அறிவித்துள்ளான்.

எனவே, அவனையன்றி வேறு செயல்படுபவன் யாருமில்லை. படிவம் மனிதனுக்குரியது. 'தான்' தன்மையும், இறைவனின் யதார்த்தமும் அந்தப் பொருளின் உன்னதமான நிலையில் அதில் ஊடுருவி நிற்கின்றன. கல்கு (சிருஷ்டி) என்று சொல்லப்பட்ட வெளிப்படையான பொருளின் யதார்த்தம் இறைவனேதான். இந்த கல்கு காரணமாக, அவன் அள்-ளாஹிரு (வெளிப்படையானவன்) என்றும், அல்-ஆகிறு (கடைசியானவன்) என்றும் அவன் பெயர்களைப் பெறுகிறான்.

அடியானுக்காக அவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இறைவனுடைய வெளிப்பாடு அடியானைப் பொறுத்ததாக இருப்பதால், இறைவனுடைய 'தான்' தன்மையும் யதார்த்தமும் காரணமாக அவன் அல்-பாத்தினு (அகமானவன்) என்றும், அல்-அவ்வலு (முதலானவன்) என்றும் பெயர் பெறுகிறான். எனவே, நீ கல்கை (சிருஷ்டியை)க் காணும்போது நீ பெயர்களைக் காண்கிறாய்.

இந்த மெய்ஞ்ஞானத்தை விட்டு சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விதி விலக்காக்கப்படவில்லை. ஆலமே -ஷஹாதத் என்ற காட்சி உலகில் இந்த மெய்ஞ்ஞானம் சுலைமான் நபிக்கு குறிப்பாகவும் சிறப்பாகவும் வழங்கப்பட்ட சன்மானமாகும். முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் இந்த சன்மானம் அருளப்பட்டிருந்தது.

எனினும் இதை அவர்கள் பயன்படுத்தவில்லை. இப்பரீத்து பற்றிய ஹதீதில் இதுபற்றி இந்த விபரம் காணப்படுகிறது. ஒரு நாள் இரவில் நபி பெருமானார் ஜின்னு வகையைச் சேர்ந்த

இப்ரீத் ஒன்றைப் பிடித்து மக்காவின் தூண் ஒன்றில் கட்டிப் போட்டு விட்டார்கள். மறுநாள் காலையில் குழந்தைகள் அத்துடன் விளையாடட்டும் என்று அவர்கள் நினைத்தார்கள்.

ஆனால் இவ்விதமான ஜின்-இப்ரீதை வசமாக்கும் சம்மானம் தனக்கு மட்டும் உரியதாக இருக்க வேண்டும் என்று சுலைமான் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தன்னிடம் துஆ இறைஞ்சியுள்ளதை இறைவன் நபி பெருமானாருக்கு நினைவூட்டியதும் அவர்கள் உடனே அந்த இப்ரீதை அவிழ்த்து விட்டு விட்டார்கள். குறிப்பிட்ட சில விசயங்களில் இறைவன் தன் சம்மானங்களைச் சிலருக்காக ஒதுக்கி வைத்துவிடுகிறான் என்பதையும் இதிலிருந்து நாம் அறிந்து கொள்கிறோம்.

வரம்புக்கு உட்பட்ட அருட்கொடைகள் மெய்விசுவாசம் (ஈமான்) கொண்டவர்கள் மீதுதான் பொழியப்படும். வரம்பற்ற அருட்கொடைகளோ யாவருக்கும் பொதுவானவை. திருமறையில்,

رَبَّنَا وَسِعْتَ كُلَّ شَيْءٍ رَّحْمَةً وَّ عِلْمًا

'கருணையால் நீ சகலவற்றையும் பொதிந்துள்ளாய்' (அத் 40:7)

என்று கூறப்பட்டிருப்பதுபோல், தன் சொந்த தொடர்புகள் இயல்புகளான அஸ்மாக்கள் (திருநாமங்கள்) உள்ளிட்ட சகலவற்றையும் அவன் கருணை பொதிந்து நிற்கிறது. உலகினரின் நன்மைக்காக இறைவன் தன் அருட்கொடைகளை தன் அஸ்மாக்களிலேயே பொழிந்துள்ளான். அன்னியமானது எதுவும் இல்லாதபடியால் இறைவன் தானே தன் அருட்பேறுகளை அடைந்து கொள்கிறான்.

யதார்த்தம் ஒன்றாக இருப்பினும் தோற்றங்களில் படித்தரங்கள் அவசியமாயின. இதனால்தான், நாம் ஒருவன் இன்னொருவனை விட அறிவாளியாய் இருக்கிறான் என்று கூறுகிறோம். இதனால், எந்த ஒரு தோற்றத்தோடு மட்டும் அவனை மட்டுப்படுத்தி விட வேண்டாம். ஒன்றில் அவனை நீ உணருகையில், இன்னொரு தோற்றத்தில் அவனை புறக்கணிக்க வேண்டாம்.

لَيْسَ كَمِثْلِهٖ شَيْءٌ ۚ وَهُوَ السَّمِيْعُ الْبَصِيْرُ

'அவனுக்கு உவமையானது எதுவுமே இல்லை, அவன் யாவையும் பார்ப்பவன், யாவையும் கேட்பவன்' (அத் 42:11)

என்று அவனே அருளியுள்ளதில் அவனே தன்னை ஊர்ஜிதம் செய்தும், தன்னை ஒதுக்கியும் பேசுகிறான். இம்மையிலும் மறுமையிலும் உண்டான பார்ப்பவர்கள், கேட்பவர்கள் அனைவரோடும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளான். இவ்வுலகிலுள்ள பொருள்கள் அனைத்தும் ஜீவத்துடிப்புடன் விளங்குகின்றன.

ஆனால், சிலதின் உயிர்த்துடிப்பு மற்றவற்றின் பார்வையை விட்டும் மறைவானதாக இருக்கிறது. மறுமையில் அந்த உயிர்த்துடிப்பு யாவரும் உணரும்படியானதாக ஆகிவிடும். ஏனெனில், அது உயிர்களின் உறைவிடம் ஆகும். சாதாரணமான பார்வை சக்தியுடையவரை

விட அகமியப் பார்வையுடையவர்கள் தங்கள் பார்வை மூலம் பொருள்களை ஊடுருவி இறைவனையே காண்கின்றனர்.

அதாவது இறைவன் மற்றவர்களை விட இவர்களுக்கே அதிகமும் புலப்படுபவனாய் இருப்பான். எனவே, இறைவனுடைய அஸ்மாக்களில் படித்தரங்கள் உண்டு என்று நான் சொன்னதை மறந்து விடாதீர்கள். அவைதாம் இறைவனின் யதார்த்தம் என்பதில் சிறிதும் ஐயத்துக்கு இடமே இல்லை. ஒவ்வொன்றிலும் பெயரிடப்பட்டது இறைவனேயாகும். இதனால் சிருஷ்டிக்கப்பட்டதன் 'மாஹிய்யத்' (சாரம்) இறைவனுடைய தான் தன்மையின் சாரம்தான் என்று சொல்வோரை மறுத்துப் பேச வேண்டாம்.

இன்றேல், சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவன் பெயருக்கு முன் தமது பெயரை (பல்கீஸுக்கு எழுதிய நிருபத்தில்) குறிப்பிட்டிருப்பது எங்ஙனம்? இறைவனுடைய வரம்பற்ற அருட்கொடைகளால் உருப்பெற்றவர்களுள் அவர்கள் ஒருவர். சம்மானம் பெறுபவர் அதை அளிப்பவன் முன் நின்றுதானே ஆக வேண்டும்.

நாம் நமது கண்களைத் திறந்து பார்க்கும் அந்தக் கணமே விண்மீன்களிலுள்ள ஒளி அவற்றில் பிரதிபலிக்கிறது. இதுபோல் ஆஸிப் பின் பர்க்கியா, பல்கீஸின் சிம்மாசனத்தின் படத்தை சுலைமான் நபியின் கண்களில் பிரதிபலிக்கச் செய்தார். அதைப் பற்றி அவர் பேசிய அதே கணத்தில் அது தன் அசல் இடத்தில் உருக்குலைந்து, சுலைமான் நபி முன் மீண்டும் ஒன்றாகிவிட்டது. 'தஜத்துதெ-அம்தால்' (ஒன்று போன்றவை புத்துயிர் பெறுதல்) என்பதன் அகமியத்தை விளங்கியவர்கள் இதை நன்கு புரிந்து கொள்ள முடியும். 'புதிய சிருஷ்டி பற்றி அவர்கள் ஐயத்தில் உள்ளனர். (அல்லது அவர்கள் புதிய சிருஷ்டியால் பொழியப்பட்டுள்ளனர்.)' (அத்தி50:15) என்று திருமறை கூறுகிறது.

ஒவ்வொரு கணமும் மாற்றத்தை உணராமலே அவர்கள் ஒரு புதிய சிருஷ்டியைக் காண்கிறார்கள். ஒன்று உருக்குலையும் (மஅதூம் ஆன அதே கணமே அது புத்துயிர் (மௌஜூத்) பெறுகிறது. 'சுலைமான் நபியைச் சேர்ந்த ஒருவருடைய கையில் இந்த அசாதாரணமான நிகழ்ச்சி நடந்தது. அந்தக் கடிதத்தின் மகத்துவத்தை பல்கீஸ் உணர்வதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டது.

'இது (சிம்மாசனம்) அது போன்றே இருக்கிறது' என்று அவர் தெரிவித்ததும் சுலைமான் நபி அவரை அரண்மனையுள் நுழையுமாறு கூறினார்கள். அந்த அரண்மனையின் தரை பளிங்கினால் ஆனது. ஆனால் அதைத் தண்ணீர்த் தடாகம் என்று தவறாக எண்ணிய பல்கீஸ் தமது உடையை, அது நனையாமல் பாதுகாப்பதற்காகக் கணுக்கால் அளவு உயர்த்திக் கொண்டு அதில் கால் வைத்தார்.

அரண்மனையின் தரை தண்ணீர் போல் தோற்றக் காரணம் அதன் தெளிவான ஸ்படிகத் தன்மையால்தான். அவருடைய சிம்மாசனத்தைக் கண்டதும் அவர், 'இது அது போல்தான் இருக்கிறது' என்றாரல்லவா, அதே சிம்மாசனம் தான் இங்கே வந்துள்ளது என்பதை அவர் புரிந்து கொள்ளுமாறு செய்வதற்காகவே இந்த தோற்ற மாறுபாடு இங்கே நிகழ்த்தப்பட்டது.

இதன்பின் அவர் சர்வலோக ரட்சகன் (ரப்புல் ஆலமீன்) மீது மெய்யுறுதி கொண்டார். மூஸா அலைஹிஸ்ஸலாமினதும் ஹாரூனினதும் இறைவன் மீது மெய்யுறுதி கொண்ட பிர்அவ்ன் இறைவனுடைய சர்வ ரட்சகத் தன்மையைக் கட்டுப்பாட்டுக்குள் ஆக்கிவிட்டார். பல்கீஸ் அவ்வாறு கட்டுப்படுத்தாமல் சர்வலோக ரட்சகனான இறைவனிடமே மெய்யுறுதி கொண்டார்.

சுலைமான் நபிக்கு அருளப்பட்ட ராஜ்ஜியாதிபத்தியத்தில் காற்றை இறைவன் அவர்களுக்கு வசப்படுத்திக் கொடுத்திருந்தான். இது வேறு எந்த நபிக்கும் வழங்காத பாக்கியமாகும்.

فَسَخَّرْنَا لَهُ الرِّيْحَ تَجْرِىْ بِاَمْرِهٖ رُخَآءً حَيْثُ اَصَابَۙ

'சுலைமானுக்கு நாம் காற்றை வசமாக்கிக் கொடுத்திருந்தோம். அவர் உத்திரவு கொண்டு அது வீசியது.' (அத் 38:36)

اَلَمْ تَرَوْا اَنَّ اللّٰهَ سَخَّرَ لَكُمْ مَّا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ

சாதாரண மனித இனம் சம்பந்தப்பட்டவரை வானத்திலும், பூமியிலும் உள்ள யாவையும் தனக்குரிய யாவையும் வசப்படுத்திக் கொடுத்திருப்பதாக இறைவன் அறிவித்துள்ளான். (அத் 31:20)

சுலைமான் நபி விசயத்தில் அவர்கள் மனோ சக்தியை உபயோகிக்காமலே இந்தக் கட்டுப்படுத்தும் தன்மை அவர்களுக்குச் சித்தியாகி இருந்தது. அவர்கள் விரும்பினால் உடனே அது நடந்து விடும்.

மற்றவர்கள் விசயத்தில் மனோ சக்தியைப் பிரயோகிப்பது அவசியமாயிற்று. காரணம், ஆத்மாக்கள் ஏகச் சித்த நிலையை அடைந்ததும், பிரபஞ்சத்தின் அணுக்கள் அவற்றால் கவரப்பட்டு, அவற்றுக்கேற்பச் செயல்படுகின்றன. ஞானநாதர்களும் பெரியார்களும் இவ்வாறு தமது ஆத்ம சக்தியைப் பிரயோகித்து காரிய சாதனை புரிந்தனர்.

ஆனால், சுலைமான் நபிக்கு இது தேவையில்லாது போயிற்று. அவர்கள் ஒன்றை நாடினால் தன் மனோ சக்தியை அதில் ஈடுபடுத்தாமல் வெறுமனே அதைச் சொன்னால் போதும். உடனே அது நடந்து விடும். இவ்வாறு இம்மையில் மனோசக்தியைப் பயன்படுத்தாததால் மறுமையில் இதற்குக் கணக்கு கொடுக்க வேண்டிய அவசியமில்லை. இங்கே மனோசக்தி உபயோகித்து காரிய சித்தி அடைபவர்களுக்கு மறுமையில் அந்த அளவு அங்கேயுள்ள பாக்கியங்களின் சம்மானங்கள் குறைக்கப்பட்டு விடும். சுலைமான் நபி மனோ சக்தியைப்பிரயோகிக்காத நிலையில் இருந்ததால்

هٰذَا عَطَآؤُنَا

'இதோ நம் சம்மானம்!' (அத் 38:39) என்று இறைவன் அருளினான்.

நபிபெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விசயத்திலோ,

'சொல்வீராக, இறைவா, எனக்கு என் அறிவை அதிகரித்தருள்!' என்று (குல் ரப்பீ, ஸித்னீ இல்மா அத் 20:114)

என்று சம்மானம் அருளப்பட்டிருந்தது. இதனால் இதை அவர்கள் வெகு விழிப்புடன் நிறைவேற்றி வந்தார்கள். கனவில் பாலைக் கண்டபோதுகூட அது அறிவைக் குறிக்கும் என்று அவர்கள் விளக்கம் தந்தார்கள்.

மி∴ராஜின் போது, அவர்கள் முன் இரண்டு கிண்ணங்கள் வைக்கப்பட்டன. ஒன்றில் பாலும், மற்றதில் மதுவும் இருந்தன. பாலைத் தேர்ந்தெடுத்து அவர்கள் பருகிக் கொண்டார்கள். இவ்வுலகிலும் தங்களுக்கு யாரேனும் பருகுவதற்குப் பால் தந்தால் அது அறிவைக் குறிப்பதாக அவர்கள் குறிப்பிடுவதுண்டு. 'ஜனங்கள் கனவிலுள்ளார்கள். அவர்கள் மரிக்கும்போது அவர்கள் விழித்துக் கொள்வார்கள்' என்றல்லவா அவர்கள் அருளியுள்ளார்கள். இந்த ஹதீதிலிருந்து இவ்வுலகம் கனவு ஆனதால் இதற்கு தாத்பரிய விளக்கம் தேவை என்றுதானே பொருளாகிறது.

இவ்வுலகு வெறும் எண்ணமேதான்,

அதுவே யதார்த்தத்தில் உண்மையுமாகும்.

**விளக்கக் குறிப்பு:** இமாம் ஜலாலுத்தீனு; சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் திருமறைக்குத் தாங்கள் எழுதிய வியாக்கியான உரையில் சுலைமான் நபி பல்கீஸுக்கு எழுதிய கடிதத்தின் வாசகத்தைத் தந்துள்ளார்கள். அது வருமாறு: 'அல்லாஹ்வின் அடியானும், தாவூது அவர்களின் புதல்வனுமான சுலைமானிடமிருந்து ஷிபாவின் அரசி பல்கீஸுக்கு அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கிறேன். நேரான வழிகாட்டுதலைப் பின்பற்றி நடப்போர் மீது சாந்தி உண்டாவதாக! எனக்கு எதிராகப் போர் செய்ய எழ வேண்டாம். இங்கே வந்து உம்மை என்னிடம் ஒப்படைத்துக் கொள்ளும்.'

இதில் சுலைமான் நபியின் பெயர் அல்லாஹ்வின் பெயருக்கு முன்னால் வந்துள்ளது என்று ஆசிரியர்கள் சிலர் குறை காண்பதுண்டு. 'அல்லாஹ்வின் அடியார்' என்ற பதம் பல்கீஸ் முன்னர் சுலைமான் நபிக்கு எழுதிய கடிதத்திலிருந்து எடுத்தாளப்பட்டது என்பாரும் உண்டு. இந்தக் கடிதத்தைப் பல்கீஸ் கிழித்துப் போடாமல் இருப்பதற்காக அதைக் கொண்டு சுலைமான் நபி தங்கள் கடிதத்தைத் தொடங்கியிருக்கிறார்கள் என்று இவர்கள் கருதுகின்றனர். ஆனால், கடிதத்தின் வாசகம் 'பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்' என்றுதான் தொடங்கியுள்ளது.

'ரஹ்மான்' என்ற பெயர் சகல சிருஷ்டிகள் மீதும் ஒருப்போல் இறைவனால் பொழியப்படும் அருட்கொடைகளைக் குறிக்கிறது. நமது 'அ∴யானெ-தாபிதா' (இறைவனின் அறிவில் உண்டான நமது யதார்த்தங்கள்) மீது, இவற்றின் எந்தத் தகுதியான செயலுமின்றி, அவற்றின் இயல்புக்கு ஏற்ப இந்த அருட்கொடைகள் பொழியப்படுகின்றன. இந்த அருட்கொடை அவன் அஸ்மாக்கள் உள்ளிட்ட யாவையும் சூழ்ந்துள்ளது.

رَبَّنَا وَسِعْتَ كُلَّ شَيْءٍ رَّحْمَةً وَّعِلْمًا

'என் கருணை சகல பொருட்கள் மீதும் பரவியுள்ளது' (அத் 40:7)

இந்தக் கருணைதான் 'பைளெ அக்தஸ்' (மிக சிரேஷ்டமான காருண்யம்) எனப்பட்டது. இது என்றும் நிலையானது. 'ரஹீம்' என்பது, அவனுடைய கட்டளைகளை ஏற்று நாம் நமது கடமைகளை செய்வதற்கு ஏற்ப அவனால் நம்மீது வருஷிக்கப்படும் அருட்கொடையாகும். மெய்விசுவாசிகளிடம் அவர் நிகரற்ற அன்புடையவர்'. (அத் 9:128)

'பிஸ்மில்லாஹ்' என்ற அரபிப் பதத்திலுள்ள 'பே' என்னும் எழுத்து, 'தாத்தெ பஹத்' என்னும் பரிபூரண தாத்தைக் குறிப்பதாகும். இதற்கும், ரஹ்மான்-ரஹீம் என்ற திருநாமங்களுக்கும் இடையில் அல்லாஹ் எனும் பெயர் திரை (பர்ஜக்) ஆக விளங்குகிறது. 'அல்-பாத்திஹா' என்ற திருமறையின் ஆரம்ப அத்தியாயத்தின் ஆரம்பமாக முதலில் இந்த பிஸ்மில்லாஹ் வருகிறது. இந்த அல்பாத்திஹாவின் விளக்கமாகவே திருமறை வசனங்கள் யாவுமே அமைந்துள்ளன. 'பே' யிலுள்ள புள்ளி (நுக்தா) விருட்சம் முழுவதும் முளைத்து வெளிப்பட உதவிய விதையாக விளங்குகிறது. சகல கல்யாண குணங்களையும் தன்னகத்தே கொண்டது 'அல்லாஹ்'; என்ற பெயர்.

சகல சிபத்துகள் (கல்யாண குணங்கள்), அஸ்மாயெ இலாஹி (தெய்வத் திருநாமங்கள்) ஆகிய யாவுக்குமான பொதுப்பெயராகும். 'அப்து' (அடியான்) என்பது சகல அஸ்மாயெ கியானியின் (சடதத்துவப் பெயர்களின்) வெளிப்பாடாகும். (இந்த லௌகீக அஸ்மாக்களை நாஸ்தியாக்கும்) நிலையை அடியான் எய்தியதும் அவன் (இறைவனின் கல்யாண குணங்களில் அமரத்துவம் பெறும்) பகா நிலையை எய்தி விடுகிறான். இந்த நிலையில் அவன் இதயம் தெய்வ ஒளி பெற்று, அவன் பார்க்கும் பார்வை இறைவனுடைய பார்வையாகவும், அவன் கேட்பது இறைவனுடைய கேள்விப் புலனாகவும் ஆகிவிடுகிறது.

இந்த நிலையில் அடியான் இறைவனுடைய திருநாமங்களில் ஒன்றாக ஆகிவிடுகிறான். இதனால்தான் ஷைகுல் அக்பர் அவர்கள் தங்கள் புத்தூஹாத்துல் மக்கிய்யாவில் இவ்வாறு பாடலாக எழுதுகிறார்கள்:

'அல்லாஹ்வே சத்தியம், அப்தும் சத்தியம்

ஷரீஅத்தால் கட்டுப்படுத்தப்பட்டவன் யார்

என்பதை நான் விளங்க முடியவில்லை.'

இவ்வுண்மையை உணரும் ஞானமே சுலைமான் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அறிவாக அளிக்கப்பட்டிருந்தது.

சுலைமான் நபியின் மந்திரியான ஆசிப் இப்னு பர்கியா என்பவர்தான் பல்கீஸ் அம்மாவின் சிம்மாசனத்தைக் கண்மூடி விழிக்குமுன் ஷிபாவிலிருந்து பைத்துல் முகத்தஸுக்குக் கொண்டு வந்தவராவார். இது ஒரே நொடியில் தன் இடத்தில் உருக்குலைந்து, சுலைமான் நபி முன்

மீண்டும் உருப்பெற்றதை ஷைகுல் அக்பர் அவர்கள் 'தஜத்துதெ-அம்தால்' (ஒன்றேயான நிலையில் புதுப்பிக்கப்படுதல்) என்ற தத்துவமாக விளக்கியுள்ளார்கள்.

இவ்வுலகின் ஒவ்வோர் அணுவும், ஏன் இந்த உலகம் முழுவதுமே ஒவ்வொரு கணமும் அழிக்கப்பட்டும், அதே கணத்திலேயே புதுப்பிக்கப்பட்டும் வருகிறது. 'புதிய சிருஷ்டி பற்றி அவர்கள் ஐயத்தில் உள்ளனர்' (அத் 50:15) அல்-முஹ்யீ (உயிரளிப்பவன்) போன்ற திருநாமங்கள் பல இத்தகைய புதுப்பிக்கும் செயலை ஆற்றிக் கொண்டிருக்கின்றன. முமீத் (மரணிக்கச் செய்வோன்) போன்ற திருநாமங்கள் பல நாஸ்தியாக்கும் செயலை செய்து கொண்டிருக்கின்றன.

இவ்விரு வகையான நாமங்களும் ஏக காலத்தில் இயங்கிக் கொண்டிருப்பதால் வெளிப்பார்வையில் எந்த மாறுதலும் தெரியாமல் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. எரிகிற விளக்குத் திரியின் ஒவ்வொரு கணமும் ஒரு துளி எண்ணெய் எரிந்து மறுதுளி எண்ணெய் திரியில் அந்த இடத்துக்கு வந்து கொண்டே இருக்கிறது. ஆனால், எப்போதும் போல் தீபம் எரிந்துக் கொண்டே இருக்கும். அங்கே எந்த மாறுதலும் ஏற்படாதது போன்ற நிலையை உண்டாக்கிக் கொண்டிருப்பதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

நபிபெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இறைவன் அவர்களுடைய அறிவை விரிவாக்கும்படி பிரார்த்திக்கக் கூறினான். இவ்வுலகிலுள்ள யாவுக்குமே அவர்கள் 'ஆலமெ-மிதால்'ன் தரத்தில் நின்றே விளக்கம் தந்தார்கள். பாலைக் கூட அவர்கள் 'அது அறிவைக் குறிப்பதாக விவரித்தார்கள். 'இம்மையை விட மறுமை உலகே விரும்பதக்கதும், நிரந்தரமானதும் ஆகும்'. அது யதார்த்தமானது, இது நிழல்தான். எனவே, இவ்வுலகில் மனிதர்கள் கனவில் இருக்கிறார்கள். யதார்த்தம் உதயமானதும் கனவு கலைந்து விடுகிறது...

சிபத்துகளை தாத்தைவிட்டுப் பிரிக்க முடியாதாதலால், இறைவனுடைய 'அவன் தன்மை' (ஹுவிய்யத்) சகல பொருள்களிலும் ஊடாகிறது. பொருள்களில் சிபத்துகள் அனைத்தும் ஊடுருவியிருப்பதால் தேர்ந்த ஞானிகள் இதை உணர முடிகிறது. 'ஒவ்வொரு பொருளும் ஜீவத் துடிப்புடன் விளங்குகிறது' என்று ஷைகுல் அக்பர் குறிப்பிடுகிறார்கள்.

اِنْ مِّنْ شَىْءٍ اِلَّا يُسَبِّحُ بِحَمْدِهٖ

'இறைவனுடைய புகழைப் போற்றாத, துதியாத பொருள் எதுவுமில்லை' (அத் 17:44)

இதற்கு அறிவு, ஒளி, ஜீவிதம், நோட்டம், கேள்வி,பார்வை, பேச்சு ஆகிய ஏழு சிபத்துகள் அதில் இருக்க வேண்டும்.

'ஒரு பிரயாணத்தின் போது நான் நபிபெருமானாரோடு போயிருந்தேன். சகல பாறைகளும், மரங்களும் அவர்களுக்கு ஸலாம் சொல்வதை நான் கேட்டேன்' என்று ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

பளிங்குத் தரையுள்ள மாளிகையை சுலைமான் நபி அமைத்த காரணம் இதுதான். பல்கீஸ் அம்மா முதலில் சூரியனை வணங்குபவராய் இருந்தார். அவருக்கு அல்லாஹ் இருக்கிறான் என்பதை உணர்த்தி அவரை அவன் மீது மெய்விசுவாசம் கொள்ள வைக்க வேண்டும். அந்த ஸ்படிகத்தரைக்கு அடியில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. அதனால் அதை பல்கீஸ் கண்ணுற்றதும் அது வெறும் தண்ணீர்தான் என்று நினைத்து தங்கள் உடையை நனைத்து விடாமல் இருப்பதற்காக அதைச் சிறிது தூக்கிக் கொண்டு அவர்கள் அதன் மீது கால் வைத்தார்கள்.

உலகம் தானே இயங்குவது போலவும், தானே சதாவும் சுறுசுறுப்புடன் இருப்பது போலவும் தெரிகிறது. எனினும் இயங்குவது அஸ்மாக்கள்தாம். அவற்றை விட்டு நாம் சுயேச்சையானவர்கள் அன்று. அவை விரும்பிய விதம் நம்மை வழி நடத்துகின்றன.

'இப்பூமி மீது ஊர்ந்து செல்லும் எந்தப் பிராணியினது முன் குடுமியும் அதன் ரப்பின் கரத்திலேயே இருக்கிறது. அந்த ரப்பு நேரான பாதையிலேயே இருக்கிறான்.' (அத் 11:56) இவ்வாறு இறைவன் ஒவ்வொருக் கணமும் நம்மோடேயே இருக்கிறான்.

وَهُوَ مَعَكُمْ اَيْنَ مَا كُنْتُمْ

'நீங்கள் எங்கிருந்தாலும் அவன் உங்களோடு இருக்கிறான்.' (அத் 57:4)

சுலைமான் நபி அலைஹிஸ்ஸலாம் 'பனா'வின் நிலையை எய்தி இருந்ததால் அவர்களுக்குக் காற்று வசப்பட்டது. 'குன்' என்ற பதத்தை உச்சரிப்பது கொண்டு அதைக் கட்டுப்படுத்த அவர்களால் முடிந்தது. இதற்கான சாதாரண விளக்கம் வருமாறு: அவர்களுடைய கப்பல்கள் அவர்களுடைய ஹூர்ரம் பகுதி ஏவலர்களோடு தர்ஷிஸ் என்னும் நகரம் சென்று அங்கேயுள்ள தங்கம், வெள்ளி, தந்தம், குரங்குகள், மயில்கள் முதலியவற்றை ஏற்றிக் கொண்டு திரும்பின. அவர்களுக்குக் காற்றைக் கட்டுப்படுத்தும் சக்தி இருந்ததால் சாதாரணமான ஒரு மாதப் பயணத்தைக் காலையிலும், மறுமாதப் பயணத்தை மாலையிலும் அந்தக் கப்பல்களால் செய்ய முடிந்தது.

*புஸூஸுல் ஹிகம் முதல் பகுதி முடிந்தது....*

www.sufimanzil.org

www.sufimanzil.org